R. [illegible]

THAYAGAM

3 . 9 . 93

75¢

உண்மை:5
தேடல்:9

# தாயகம்

## துர்க்கை அம்மன் கோவில் மீது குண்டுவீச்சு ஏழு பேர் பலி

## மாதகலில் மோதல்



மாத்தயா கைது

## தொண்டமானின் புதிய சமாதானத் திட்டம்

# EVERGREEN
## IMPORT & DISTRIBUTORS

**TEXTILES, GIFTS, EVERSILVER ITEMS & BOOKS**

**566 A Parliament St**
**(Parliament/Wellesley)**
**(416) 964-8601**
**324-9345**
**968-9545**

**வர்த்தகர்களுக்கு விசேட கழிவுகள் உண்டு**

தலைநகை, தலைப்பாகை வாடகைக்கு கிடைக்கும்

**சிவசங்கரி, பாலகுமாரன், அநுராதா ரமணன், சுஜாதா, புஷ்பா தங்கத்துரை, லேனா தமிழ்வாணன், மு.கருணாநிதி, கண்ணதாசன், வைரமுத்து, மேத்தா உட்பட தமிழகத்தின் பிரபல எழுத்தாளர்களின் புத்தகங்கள் மலிவு விலையில் கிடைக்கும்.**

இலங்கை, இந்தியப் பத்திரிகைகள், சஞ்சிகைகளை உடனுக்குடன் பெற்றுக் கொள்ளலாம். நேரடிவினியோகமும் உண்டு.

இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட
- ✪ மங்கையர் மனம் விரும்பும் நவநாகரீக ஆடைகள்
- ✪ ஆண்களுக்கான ஜீன்ஸ், ரீ சேட் வகைகள், சாரங்கள், பட்டு வேட்டி வகைகள்
- ✪ சாறி வகைகள்
- ✪ அலங்காரப் பொருட்கள், பரிசுப் பொருட்கள்
- ✪ மற்றும் எவர்சில்வர் பாத்திரங்கள்

*அனைத்தும் மலிவான விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்*

**வவுனியா, யாழ்ப்பாணம், கொழும்பு, இந்தியா, சிங்கப்பூர் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கும் உடனுக்குடன் பணம் அனுப்பி வைக்கப்படும்**

**566 A Parliament St (Parliament/Wellesley)**

Second class mail Registration No:8435

தாயகம்

'உண்மையைத் தேடி'

# துர்க்கை அம்மன் ஆலயம் மீது குண்டுவீச்சு ஏழு பேர் பலி

துர்க்கை அம்மன் கோவில் மீது ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டதில் ஏழு பேர் கொல்லப்பட்டனர். அத்துடன் பதினைந்து பேர் காயமடைந்தனர். சனிக்கிழமை திருவிழாவின் போது இந்த தாக்குதல் நடைபெற்றது.

முதலில் ஹெலிகொப்டர் ஒன்று அப்பகுதியில் தாழ்வாகப் பறந்ததாகவும் பின்னர் இரண்டு விமானங்கள் தாக்குதலில் ஈடுபட்டதாகவும் அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

பலாலி, காங்கேசன்துறை முகாம்களிலிருந்து ஷெல தாக்குதல்களும் ஒரே நேரத்தில் நடத்தப்பட்டன. இத்தாக்குதலுக்கு காரணம் எதுவென்று தெரிவிக்கப்படவில்லை.

கடந்த வாரம் செல்வசந்நிதி ஆலயத்தின் மீதும் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. திருவிழா நேரத்தில் நடந்த தாக்குதலில் கோயில் வளவுக்குள் ஷெல் விழுந்து வெடித்ததால் இருவர் கொல்லப்பட்டனர். வேறு சிலர் காயமடைந்தனர். பலாலி முகாமிலிருந்து இத்தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது.

# சமஷ்டி முறைக்குத் தயார்

## பாலசிங்கம் பேட்டி

இனப்பிரச்சனையைத் தீர்க்க யுத்த நிறுத்தத்தின் பின்பான நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு தாம் தயார் என்று பாலசிங்கம் கூறியுள்ளார். சண்டே ஒப்சேர்வர் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தமிழர்களின் உரிமையை உறுதி செய்யும் சமஷ்டி அமைப்பு ஒன்றை தாம் கருத்துக்கெடுக்க தயாராக உள்ளதாக கூறியுள்ளார்.

பேச்சுவார்த்தைக்கான முன்நிபந்தனையாக பொருளாதாரத் தடை நீக்கலை புலிகள் கோர மாட்டார்கள் என்றும் ஆனால் நிரந்தரமான தீர்வை காண அரசு விரும்பினால் வடக்கு கிழக்கில் சரியான சூழ்நிலையை அரசு ஏற்படுத்த வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

முக்கிய அரசியல் கட்சிகள் சமஷ்டி தான் தீர்வு என்பதை ஏற்றுக் கொள்ளாத வரைக்கும் எந்த தீர்வும் சாத்தியமில்லை என்று கூறிய அவர் புலிகள் இராணுவ ரீதியில் பலம் இழந்ததால் தான் பேச்சுவார்த்தைக்கு தயாராகிறார்கள் என்ற கூற்றையும் மறுத்தார். அரச படைகளிடமிருந்து பறித்த ஆயுதங்கள் போதியளவு தமக்குள்ளதாகவும் கூறினார்.

அத்துடன் இனப்பிரச்சனைக்கான தீர்வு எதுவும் வடக்கு கிழக்கு இணைப்பைக் கொண்டிருக்க வேண்டும், தமிழ் தேசியம் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும், தமிழர்களின் சுயநிர்ணய உரிமை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்றும் அத்துடன் உத்தேச சமஷ்டி அமைப்பு கிழக்கில் முஸ்லிம்கள், சிங்களவர்களின் உரிமைகளையும் உறுதி செய்ய வேண்டும் என்றும் அவர் கூறினார்.

# தொண்டமான் சமாதான முயற்சி

புலிகள் சமாதானத்திற்கான புதிய முயற்சி ஒன்றில் தொண்டமானின் உதவியை நாடியுள்ளனர். ரொய்ட்டர் செய்தி தாபனத்திற்கு புலிகளின் பேச்சாளர் திலகர் வழங்கிய தகவல்படி தொண்டமான் சமீபத்தில் ஐரோப்பாவிற்கு சென்ற போது அங்கு திலகருடன் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர். தங்கள் சந்திப்பின்போது தற்போதையை தடைகளை உடைக்கவும், சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்கவும் புதிய வழிகளை தேடுவது பற்றி இருவரும் ஆராய்ந்ததாகவும் திலகர் தெரிவித்தார்.

ஆயினும் தான் சமாதான யோசனைகளை முன்வைத்ததாக டெயிலி நியூஸ் பத்திரிகையில் வந்த செய்திகளை திலகர் மறுத்தார். புலிகளின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக தொண்டமானை யாழ்ப்பாணம் செல்லும்படி தான் கேட்டுக் கொண்டதாகவும் திலகர் கூறினர்.

தான் யாழ்ப்பாணம் செல்லத் தயாராக இருப்பதாக தொண்டமான் கூறியுள்ளார். பத்து வருட யுத்தத்திற்கு நீதியானதும் நிலையானதுமான தீர்வு ஒன்றைக் காண்பதற்காக தான் செல்லவுள்ளதாக தொண்டமான் தெரிவித்திருந்தார்.

# கடற்படையினரின் உடல்கள் கையளிப்பு

கடந்த வாரம் கிளாலிக் கடலேரியில் நடந்த மோதலில் கொல்லப்பட்ட கடற்படையினரில் நால்வரின் சடலங்களை புலிகள் ஒப்படைத்துள்ளனர். இவர்களின் சடலங்கள் செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது. பருத்தித்துறையில் வைத்து செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்ட இச்சடலங்களை இராணுவத்தினர் பின்னர் காங்கேசன்துறையில் வைத்து செஞ்சிலுவைச் சங்கத்திடமிருந்து பொறுப்பேற்றுக் கொண்டனர்.

# ஒரு அரச சார்பு பத்திரிகையாளரின் பார்வையில் யாழ்ப்பாணம்

சண்டே ஒப்சேர்வர் பத்திரிகை நிருபர் சுகீஸ்வர சேனாதிர சமீபத்தில் யாழ்ப்பாணம் சென்று திரும்பியிருக்கிறார். யாழ்ப்பாணத்து நிலைமைகள் பற்றிய அவரது கட்டுரையில் மக்கள் படும் அவலங்களை விபரித்திருக்கிறார்.

இவர் யாழ்ப்பாணம் செல்ல விருப்பம் தெரிவித்த போது, இன்னொரு பணயக்கைதி விவகாரத்தை உருவாக்க வேண்டாம் என்று யாழ்ப்பாண இராணுவ தளபதி பிரிகேடியர் கெமுனு குலதுங்க கேட்டிருக்கிறார். ஆனாலும் புலிகள் பத்திரிகையாளர் ஒருவரைப் பிடிக்க மாட்டார்கள் என்று இவர் பதிலளித்திருக்கிறார். செஞ்சிலுவைச் சங்க கப்பலில் பருத்தித்துறை சென்ற இவர் அங்குள்ள புலிகளால் விசாரிக்கப்பட்டார். இவரைத் தமிழனா என்று விசாரித்த புலிகள் இவரது அடையாளங்களை விசாரித்த பின்னர் இவருக்கு அனுமதி வழங்கினர். பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் பாதையில் தார் இருக்கும் பகுதியை விட, கல்லும் குழியும் உள்ள பகுதிதான் அதிகம் என்கிறார் அவர்.

யாழ்ப்பாணத்தில் எரிபொருள் தட்டுப்பாட்டினால் பலர் தொலைவிடங்களிலிருந்து விறகு கொண்டு வருவதைக் கண்டிருக்கிறார். சுமார் நூறு சைக்கிள்களில் நகரத்திற்கு விறகு வருகிறது. ஒரு தடவை சென்றால் 300 ரூபா கிடைக்கிறது என்றும் அதற்கு விறகு சேகரிக்க ஆறு மணி நேரம் பிடிக்கிறது என்றும் தனக்கு வேலை இல்லாததால் குடும்பத்தைப் பார்க்க தினசரி இந்த வேலை செய்வதாக சோதி என்பவர் கூறினார். இவர் முன்பு சீமெந்து ஆலையில் பணிபுரிந்தவர்.

யாழ்ப்பாணத்திலிருந்து கோண்டாவிலில் உள்ள புலிகளின் தலைமையகத்திற்கு செல்ல டாக்ஸிக்கு ஐநூறு ரூபா செலவானது. மண்ணெண்ணெய் போத்தல் 95 ரூபாவிற்கு வாங்குவதாகவும் சிறிய சிங்கர் தையல் இயந்திர எண்ணெய் போத்தலிற்குள் பெற்றோலை வைத்து காரை ஸ்டார்ட் செய்வதாகவும் சாரதி செல்லமுத்து கூறினார்.

மின்சாரம் இல்லாததால் மக்கள் தொலைக்காட்சி பார்ப்பதில்லை. இதனால் புலிகளின் ஒளிபரப்பும் நிறுத்தப்பட்டது. யாரும் பட்டரி வைத்திருந்தால் பி.பி.சி கேட்கிறார்கள். அல்லது புலிகள் குரலைக்கேட்கிறார்கள். முன்பு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பண்பலையைக் கேட்டதாகவும் பின்னர் பலாலி முகாமில் அது நிறுத்தப்பட்டதால் கேட்பதில்லை என்றும் சிலர் கூறியிருக்கிறார்கள்.

ஈழநாதம், உதயன் என இரண்டு பத்திரிகைகள் வருகின்றன. Hot springs எனப்படும் ஆங்கில வார இதழும் வெளிவருகின்றது. ஈழநாதமும் ஆங்கில இதழும் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளன. உதயன் மறைமுகமாக புலிகளால் கட்டுப்படுத்தப்படுகிறது.

புலிகளைப் பற்றியும் பிரபாகரன் பற்றியும் சிங்கள மக்களின் அபிப்பிராயங்களை அறிவதில் ஈழநாதம் பத்திரிகையாளர் ஆர்வம் காட்டினர்.

பயத்தினாலோ, அல்லது உண்மையான ஆதரவோ பெரும்பாலும் எல்லோருமே புலிகளை ஆதரிக்கிறார்கள். கஷ்டங்களைச் சொல்பவர்கள் கூட புலிகளை தங்கள் துயரங்களுக்காக குற்றம் சாட்டவில்லை.

உணவுப் பொருட்களுக்கு தட்டுபாடு இல்லாவிட்டாலும் விலை அதிகம். முட்டை ஒன்பது ரூபா, சம்பா அரிசி கிலோ நாற்பது ரூபா, வெள்ளை அரிசி இருபது ரூபா.

போக்குவரத்துச் செலவு காரணமாக விலையை அதிகரிக்க வேண்டியிருக்கிறது என்கிறார் கடைக்காரரான வேலாயுதம்.

புலிகள் கிளாலிக்கடலைக் கடக்க இருநூறு முதல் ஆயிரம் ரூபா வரை வாங்குகிறார்கள்.

பெரிய வியாபார நிறுவனமான எழிலகம் புலிகளால் நடத்தப்படுகிறது. அங்கு துணிகள், சேட்கள், சேலைகள் என்பன முதல் பாத்திரங்கள் வரை விற்கப்படுகின்றன. மாதம் ஒரு லட்சம் ரூபா வரை லாபம் வரும் அளவுக்கு விற்பனை நடக்கிறது என்கிறார் மனேஜர் கே.சுப்பிரமணியம்.

யாழ் வைத்தியசாலையில் ஆயிரம் படுக்கைகள், தற்போது 800 நோயாளிகள் உள்ளார்கள். இப்பகுதியை இராணுவ சூன்யப் பிரதேசமாக்க செஞ்சிலுவைச் சங்கம் பேச்சுவார்த்தை நடத்தியது. இந்த ஒப்பந்தத்தை இரு தரப்பினரும் மதிப்பதாக செஞ்சிலுவைச் சங்க அதிகாரி கூறினார்.

புலிகள் ஆயுதங்களுடன் நிற்பதைக் காட்டிய போது அவர்கள் தாக்குதல் நடத்துவதில்லை என்றும் நகரின் மறுபகுதிக்கு செல்கிறார்கள் என்றும் அவர் கூறினார்.

மருந்துகளும் மருத்துவர்களும் தட்டுபபாடான நிலை.

# பிரேமதாசாவின் சொத்துக்களுக்கு குறைந்த பெறுமதி

பிரேமதாசாவின் பல சொத்துக்கள் குறைந்த விலையில் மதிப்பீடு செய்யப்பட்டிருப்பதாக செய்திகள் கூறுகின்றன. பிரேமதாசவின் சொத்துக்களை தன்னிடம் ஒப்படைக்கும்படி ஹேமா வழக்குத் தொடர்ந்திருப்பது தெரிந்ததே. இதில் அம்பன்பொலயில் உள்ள 52 ஏக்கர் காணியும் சுச்சரித்த இல்லத்தின் 14 பேச்சஸ் நிலமும் குறைந்த விலையில் மதிப்படப்பட்டுள்ளன. அம்பன்பொல தோட்டம் சுமார் இரண்டு லட்சமாகவும் சுச்சரித்த இல்லம் ஒன்றே முக்கால் லட்சமாகவும் விஜேராம மாவத்தையில் உள்ள இல்லம் ஒன்பதரை லட்சமாகவும் மதிப்பிடப்பட்டுள்ளன.


வெளிவருகிறது

**புன்னகைமலர்**

கலை, இலக்கிய மாத இதழ்

# மாத்தயா கைது

புலிகளுக்கிடையிலான பதவிப் போட்டியில் பிரபாகரன் தற்போது மாத்தயாவைக் கைது செய்துள்ளதாக செய்திகள் கூறுகின்றன. ஆகஸ்ட் மூன்றும் திகதி தனது வீட்டிலிருந்து பிரபாகரனின் கட்டளைப்படி மாத்தயா கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

மாத்தயாவும் அவரது நூறு ஆதரவாளர்களும் பத்து இடங்களிலிருந்து ஆகஸ்ட் 2ம் 3ம் திகதிகளில் கொண்டு செல்லப்பட்டுள்ளனர். வவுனியாவில் உள்ள இராணுவ முகாம் ஒன்றில் இராணுவத்தினர் இச்செய்திகளைத் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில மாதங்களாக மாத்தயா தனது வீட்டில் வைத்து கண்காணிப்பின் கீழ் வசித்து வந்தார்.

மாத்தயா சமீப காலங்களில் தனது பதவியிலிருந்து ஒதுக்கப்பட்டு வெறும் அலுவலக செயற்பாடுகளில் மட்டுமே ஈடுபட்டு வந்தார். பின்னர் பேபி சுப்பிரமணியம் அவரது இடத்திற்கு நியமிக்கப்பட்டிருந்தார். இதனால் மாத்தயாவின் ஆதரவாளர்கள் கோபம் கொண்டதாகவும் மாத்தயாவை மீண்டும் அவரது பதவியில் நியமிக்கும்படி அவர்கள் வற்புறுத்தி வந்ததாகவும் ஊர்ஜிதமற்ற தகவல்கள் தெரிவித்தன.

மாத்தயாவிற்கும் உளவுப்படைக்கு பொறுப்பான பொட்டம்மானுக்கும் இடையிலான மோதலே இந்த நிகழ்வுகளுக்கு காரணம் என்று கூறப்படுகிறது.

மாத்தயா சாவகச்சேரியிலும் மற்றவர்கள் வேறிடங்களிலும் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும், மாத்தயாவின் கைதினால் கோபமடைந்த சிலர் இராணுவத்தினரிடம் சரணடைந்ததாகவும் இராணுவ தரப்பில் கூறப்பட்டது.

ஆயினும் இந்தச் செய்தி உண்மையானதல்ல என்றும் அரசு திட்டமிட்டு பிரசாரம் செய்கிறது என்றும் புலிகள் குற்றம் சாட்டியுள்ளனர். முன்னர் மாத்தயா காயமடைந்து சிங்கப்பூரில் சிகிச்சை பெறுகின்றார் என்று கூட செய்திகள் வந்திருந்தன.

ஆனால் இந்த தகவல்களில் புதிய திருப்பமாக மாத்தயா தமது இயக்கத்தில் பிரதித் தலைவராக இருக்கவில்லை என்றும் பத்திரிகைகளே அவ்வாறான ஒரு பதவியை உருவாக்கி பிரசாரப்படுத்தியதாகவும் அன்ரன் பாலசிங்கம் கூறியிருக்கிறார். தலைவருக்கு அடுத்ததாக செயற்குழுவே இருப்பதாகவும் உறுப்பினர்களுக்கு பதவிகள் மாறி மாறிக் கையளிக்கப்படுவதாகவும் மாத்தயாவுக்கும் யோகிக்கும் தற்போது வேறு பதவிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் பாலசிங்கம் மேலும் கூறியிருக்கிறார்.

யோகியின் இடத்திற்கு தற்போது தமிழ்ச் செல்வன் என்பவர் அரசியல் பிரிவின் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இவர் சமீபத்தில் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களுக்கு அறிமுகப் படுத்தப்பட்டிருந்தார். முன்னர் யாழ்ப்பாணத் தளபதியாகவும் இவர் இருந்தார்.

# பருத்தித்துறையில் கடற்படைப்படகு நிர்மூலம்

கடற்படைப் படகு ஒன்றின் மீது புலிகளின் தற்கொலைப் படைப் படகு ஒன்று வெடிமருந்துடன் மோதியதில் பன்னிரண்டு கடற்படையினர் கொல்லப்பட்டனர். இதில் நால்வர் அதிகாரிகள் ஆவர். இஸ்ரேலியத் தயாரிப்பான ட்வோரா ரக படகு பெரும் தீப்பந்தமாக வெடித்து அமிழ்ந்ததாக அங்கிருந்து வந்தவர்கள் கூறினர்.

பருத்தித்துறையைச் சேர்ந்த ஒருவர் கூறுகையில் வெடிச்சத்தம் ஒன்றைக் கேட்டு கடற்கரைக்கு ஓடிச் சென்று பார்த்த போது தீப்பிழம்பு ஒன்றைக் கண்டதாகவும் கப்பல் பின்னர் அமிழ்ந்ததாகவும் கூறினார்.

ஞாயிற்றுக்கிழமை தங்கள் வெளியீடுகளில் புலிகள் தங்களின் கரும்புலிப் படையினர் இருவர் கொல்லப்பட்டதாக தெரிவித்தனர். அத்துடன் 20 மிமீ பீரங்கிகள் இரண்டு, இரண்டு இயந்திரத் துப்பாக்கிகள், வெடிமருந்துகள் என்பவற்றைத் தாம் கைப்பற்றியதாக புலிகள் தெரிவித்தனர்.

நான்கு நாட்களுக்கு நடைபெற்ற இரண்டாவது தாக்குதல் இதுவாகும். முதலில் கிளாலிக் கடலில் வியாழக்கிழமை ஐவர் கொல்லப்பட்டிருந்தனர்.

# படகு நிர்மூலம்

கடற்படைப் படகு மீது தற்கொலைத் தாக்குதல் ஒன்றை நடத்தச் சென்ற புலிகளின் படகு ஒன்றை கடற்படை நிர்மூலமாக்கியதாக இராணுவம் கூறியுள்ளது. புலிகளின் தொலைத்தொடர்பு சாதனங்களை ஒற்றுக் கேட்ட போது இதை அறிந்து கொண்டதாகவும் அதில் கொல்லப்பட்டவர்களில் ராசையா ஈஸ்வரன் என்ற புலியும் ஒருவர் என்றும் இராணுவம் கூறியது.

# விபத்தில் பலி


புளியில் உள்ள முகாம் ஒன்றில் ட்ரக் ஒன்றில் வெடிமருந்துகளை ஏற்றிய போது அவை வெடித்ததில் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் ஆறு பேர் காயமடைந்தனர். இன்னொரு முகாமுக்கு கொண்டு செல்லப்படுவதற்காகவே இந்த வெடிமருந்துகள் ட்ரக்கில் ஏற்றப்பட்டன.

வெலி ஓயாப் பகுதியில் இராணுவ கமாண்டோக்கள் காட்டுப் பகுதியில் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக இராணுவம் கூறியுள்ளது.


## கிரிக்கட் போட்டி


புளு போய்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 11 பேர் கொண்ட இரண்டாம் வருட இருபது ஓவர் மென்பந்துச் சுற்றுப்போட்டி
செப் 4,5 சனி, ஞாயிறு
காலை 9.30
சென்.டெனிஸ் மைதானம்/டொன்மில்ஸ்
தொடர்புகளுக்கு:
ராகுலன்
531 1981

WE APOLOGIZE TO ALL OF OUR CUSTOMERS FOR THE SHORTAGE OF VITAMOL





VITAMOL by DR. ROBERT

DUE TO THE OVERWHELMING DEMANDS FOR VITAMOL, WE HAVE EXPERIENCED SEVERE SHORTAGES. HENCE, WE APOLOGIZE TO ALL OUR CUSTOMERS. VITAMOL IS A NOURISHING MALTED FOOD DRINK MIX FORMULATED BY DR. ROBERT. IT IS THE ONLY MALTED NOURISHMENT MIX WITH VITAMINS, IRON, CALCIUM AND HONEY. YOU GET MORE IN EACH BOTTLE OF VITAMOL. COMPARE THE QUALITY, SIZE AND PRICE. DON'T SETTLE FOR ANY INFERIOR MALT BEVERAGE MIX. DEMAND VIATMOL, TODAY'S BEST BUY FOR QUALITY AND VALUE. VITAMOL IS RECOMMENDED FOR CHILDREN AND ADULTS.




DR. ROBERT GLUCOSE

GLUCOSE IS FOUND IN NATURE IN FRESH FRUITS AND VEGETABLES. DR. ROBERT GLUCOSE IS MADE WITH THE BEST NATURAL INGREDIENTS AND PURIFIED TO ITS HIGHEST QUALITY. DR. ROBERT GLUCOSE IS GOOD FOR QUICK ENERGY. IDEAL FOOD FOR THE BRAIN, RED BLOOD CELLS, LIVER & MUSCLES. EXCELLENT FOR FEEDING CHILDREN AND ADULTS BECAUSE IT IS USED QUICKLY BY THE BODY.




NERVOGEN NERVE FOOD

NERVOGEN NERVE FOOD: EXCELLENT FOR HARD WORKING TISSUES OF THE BODY, SUCH AS THE BRAIN, IMMUNE SYSTEM, KIDNEY, LIVER, GUT AND HEART. FOR GOOD MENTAL ABILITY DON'T SETTLE FOR LESS, DEMAND THE BEST.




CHATAK CHATAK CHATAK

CHATAK CHATAK MADRAS CURRY POWDER IS THE BEST CURRY POWDER ON THE MARKET TODAY. MADE WITH 475 YEARS EXPERIENCE. IT IS SUPERB AND SO GOOD, NO OTHER CURRY POWDER CAN COMPARE. DEMAND CHATAK CURRY POWDER TO EXPERIENCE MADRAS AS IT 'S BEST. ALSO AVAILABLE CHATAK MEAT SEASONING, FISH SEASONING, TANDOORI CHICKEN MIX, SALTED SEASONING, UNSALTED SEASONING.

SUPPLIES CAN BE OBTAINED IN USA, CANADA, AND THE WEST INDIES FROM UNIVERSAL FOODS & MERCHANDISE CO. (416) 535-3118 TORONTO, CANADA.
FOR SUPER VALUE, LOW WHOLESALE & RETAIL PRICES ON GIFT, TOYS, SRI LANAKAN GROCERIES & ALL THE ABOVE ITEMS CONTACT BUDGET SUPER SAVINGS DISCOUNT 1349 QUEEN ST. WEST (EAST OF LANSDOWNE) PHONE (416) 537-0304


# இருத்தலியல் விசாரணைகள்

## எஸ்.கௌந்தி

சில குறிப்புகள்

20 ஆம் நூற்றுண்டு காலாவதியாகச் சில ஆண்டுகள் மட்டுமே எமக்கு முன்னர் இருக்கும் போது, எமது யுகத்தின் இற்றைவரையான தத்துவ உற்பத்திகளையும் மனித வாழ்வியல் நெருக்கடிகளையும் ஒர் தெளிவான மதிப்பீட்டிற்கு உள்ளாக்குதல் காலத்தின் தேவை. "இருத்தலியல விசாரணைகள்" எனும் இத் தொடர், இத்தகைய முயற்சிக்கான ஒரு எத்தனமே. தத்துவ சமாசாரங்கள் புத்திஜீகளிற்கான சொத்தோ, அல்லது "முடிய அறைக்குள்" மட்டுமே விசாரிக்கப்பட வேண்டியனவோ அல்ல எனும் பேருண்மையின் நிழலிலேயே எனது தரிசனம் தொடரும். பொருளாதார அழுத்தங்களினுல் எவ்வாறு சமகால அறிவியக்கத்தினது அடையாளம் உருமாற்றம் பெற்றது, மனித விழுமியங்கள் சிதைத்து செல்வதற்கு முதலாளித்துவ கலாசாரம் எவ்வாறு காரணியாக உள்ளது, வரட்டுத்தனமான பொருள் முதல்வாதக் கோட்பாடுகளும் அதே வேளையில போலித்தனமான ஆன்மீகப் போதனைகளும் உபரித்துவ தத்துவ உற்பத்தியினது விகாரமான மொழித் தேர்வும் சிந்தனு பரிமாற்றமும் வளர்ந்து வரும் உலகப் பாலியல் வரட்சி, கோஷப் பிணி பிடித்த அரசியல் புரட்சிகள், துரத்தப்பட்ட மனிதக் குழுக்களினது மன உவாதைகளின் பின்னணிகள் போன்ற பல்வேறுபட்ட அமிசங்கள், ஆவணங்களின் துணையோடும் அபிப்பிராய ரீதியிலும் இந்தத் தொடரிலே விசாரணைக்கு எடுக்கப்படும். தேவை கருதி, புகலிடத்தில் வாழும் சில புத்திஜீவிகளினது அறிவியக்க நேர்மை, சமூகப் பிரக்ஞை போன்றன சத்திரசிகிச்சைப் பாணியில் அலசப்படுதலும் தவிர்க்கப்பட முடியாத ஒரு அமிசமாக அமையலாம். வாசகர்களின் தரமான விமர்சனப் பார்வைகளும் ஆலோசனைகளும் அபிப்பிராயங்களும் 'தொடரின் செழுமை கருதி வரவேற்கப்படுகின்றன. உங்கள் வாசிப்பிற்கான முதலாவது கட்டுரை அடுத்த வாரம்...

உலக தத்துவ வறுமை: ஒரு குருவிப் பார்வை

# தபால் அதிபர் கொலை

அம்பாறையில் தபால் அதிபர் ஒருவரையும் அவரது மனைவியையும் புலிகள் சுட்டுக் கொன்றுள்ளனர். இவர்கள் காட்டுப் பகுதியூடாக இன்னொரு கிராமத்திற்கு சென்று கொண்டிருக்கும் போதே சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இவர்களின் ஆறு வயதான பெண் குழந்தை இந்தச் சம்பவத்தில் தப்பித்துக் கொண்டது.

# சுதந்திரக்கட்சியின்கொள்கை அறிக்கை வெளியிடப்படுகிறது

சுதந்திரக்கட்சி பதவியிழந்து 16 வருடங்களுக்குப் பின்னர் முதன் முறையாக தனது கட்சியின் கொள்கை விஞ்ஞாபனத்தை வெளியிடவுள்ளது. அதில் வர்த்தகம், வெளிநாட்டு நாணய மாற்றீடு, வெளிநாட்டு பயணம் என்பவற்றில் கட்டுப்பாடுகளை மீண்டும் கொண்டு வர மாட்டாது என்று சுதந்திரக்கட்சி கூறியுள்ளது.

சிறிமாவோ பண்டாரநாயக்கவின் தலைமையில் கண்டியில் நடைபெறவிருக்கும் கூட்டம் ஒன்றில் இன்று வெள்ளிக்கிழமை இந்த அறிக்கை வெளியிடப்படும்.

சிறிமாவோவின் சகோதரர் அனுருத்த ரத்வத்தை தலைமையிலான ஐவர் கொண்ட குழு இந்த கொள்கை அறிக்கையைத் தயார் செய்திருந்தது.

அந்த அறிக்கையில் ஐ.தே.கட்சி அரசின் தனியார் மயப்படுத்தல் பற்றி கடும்கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மக்களுக்கு அவசியமான சுகாதாரம், கல்வி, நீர், மின்சக்தி, பாதைகள் போன்றபொது சேவைகளும் நாட்டிற்கு நேரடியாக நன்மை பயக்கும் நிறுவனங்களும் அரச கட்டுப்பாட்டில் இருப்பதுடன் போதியளவு சுதந்திரம் அவற்றுக்கு வழங்கப்படும் என்று சுதந்திரக்கட்சி உறுதியளிக்கிறது.

அத்துடன் ஜனாதிபதி முறைமையை மாற்றி பாராளுமன்ற ஆட்சி முறை கொண்டு வரப்படும். அத்துடன் இனப்பிரச்சனை பற்றி குறிப்பிட்ட சுதந்திரக்கட்சி சகல சமூகத்தினரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வு அமுலாக்கப்படும் என்றும் கூறியுள்ளது.

ஐ.தே.கட்சியைக் கடுமையாக விமர்சிக்கும் இந்த அறிக்கையில் ஐ.தே.க அரசில் பணக்காரர்கள் தொடர்ந்தும் பணக்காரர்களாவதாகவும் வேலையில்லாத்திண்டாட்டம், பணவீக்கம் என்பன அதிகரிப்பதாகவும் வட்டி வீதங்கள் கூடுவதாகவும் தேசிய உற்பதிப் பொருட்களான தேயிலை, இறப்பர், தெங்குப் பொருட்களின் உற்பதி குறைந்துள்ளதாகவும் குற்றம் சாட்டியுள்ளது.

# விமானத் தாக்குதல்

புலிகளின் பயிற்சி முகாம் ஒன்றையும் அவர்களின் அரசியல் அமைப்பின் அலுவலகத்தையும் விமானப்படை விமானங்கள் குண்டுவீசித் தாக்கியதாக இராணுவம் கூறியுள்ளது. கிளாலியில் கடற்படையினர் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலுக்கு பதிலடியாகவே இது நடத்தப்பட்டது என்றும் முல்லைத்தீவுப் பகுதியில் புலிகளின் பயிற்சி முகாம் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அரசியல் அமைப்பு அலுவலகம் மீது தாக்கியதில் ஆறு பேர் கொல்லப் பட்டதாகவும் இராணுவம் கூறியிருந்தது.

ஆனால் வவுனியா வந்து சேர்ந்தவர்கள் கூறியதன்படி இந்த தாக்குதலில் புலிகளின் அலுவலகம் தாக்குதலுக்கு உள்ளாகவில்லை என்றும் மூன்று வீடுகளே தகர்க்கப்பட்டதாகவும் அதில் நால்வர் கொல்லப்பட்டதாகவும் தெரியவருகிறது.

யாழ்ப்பாணக் கடலேரியில் புலிகளின் நாற்பது வள்ளங்களை தகர்த்ததாகவும் விமானப்படை சார்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

# செஞ்சிலுவைச் சங்கம் செயற்படமறுப்பு

புலிகளின் தற்கொலைப் போராளிகள் கொண்ட படகு ஒன்று வெடிமருந்துகளுடன் கடற்படைப் படகு ஒன்றுடன் மோதி வெடித்ததில் பன்னிரண்டு கடற்படையினர் கொல்லப் பட்டனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்த தாக்குதல் பருத்தித்துறையில் நடைபெற்றது.

இந்த தாக்குதலால் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் பருத்தித் துறையில் தனது செயற்பாடுகளை நிறுத்திக் கொண்டது.

இந்த தாக்குதலுக்கு பதிலடியாக அப்பகுதியில் தாக்குதல் நடத்தப்படும் என இராணுவம் மிரட்டியதை அடுத்து இவ்வாறான தாக்குதல்கள் அப்பகுதியில் நடத்தப்பட மாட்டாது என்று புலிகள் உறுதியளிக்க வேண்டும் என செஞ்சிலுவைச் சங்கம் கேட்டிருப்பதாக இராணுவம் கூறியுள்ளது.

# வானொலி நிலையத்திற்கான எதிர்ப்பு வலுக்கிறது

அமெரிக்க வானொலி நிலையம் புத்தளதில் அமைக்கப்படுவதற்கு உள்ளூர் மீனவர்களின் எதிர்ப்பு அதிகரித்து வருகிறது. அங்கு சிற்றலை வரிசை ஒலிபரப்பு நிலையத்தை அமைத்து ஆசிய, ஆபிரிக்க நாடுகளுக்கு ஒலிபரப்பவே விரும்புவதாக அமெரிக்கா கூறி வருகிறது. ஆனாலும் இது உளவு வேலைகளுக்காக பயன்படுத்தப்படலாம் என்று மீனவர்கள் கூறுகின்றனர். கத்தோலிக்கர்களான இந்த மீனவர்களின் எதிர்ப்பினால் கத்தோலிக்க ஆயர்களும் இந்த எதிர்ப்பில் கலந்து கொண்டுள்ளனர்.

அமெரிக்க நீர்மூழ்கிகள் அப்பிராந்தியத்தில் நடமாடக் கூடும் என்றும் இதனால் அப்பகுதியில் தாம் மீன்பிடிக்க முடியாமல் போகலாம் என்றும் அமெரிக்கர்கள் இங்கே யுத்தத்தை தொடங்கக் கூடும் என்றும் மீனவர்கள் கூறுகின்றனர்.

நானூறு ஏக்கர் தென்னம் தோட்டம் ஒன்றில் இந்த நிலையம் அமைக்கப்படுகிறது. இதனால் தங்கள் நிலம் பறிபோகின்றது என்றும் மீனவர்கள் கூறுகின்றனர். நாற்பது வருடங்களாக ஒலிபரப்பி வரும் சாதனங்களை புதிதாக்கும் வேலைகள் 95ம் ஆண்டு முடிவடையும்.

பாரிய வாகனங்களின் வருகையால் தங்கள் அமைதி கெடுவதாகவும் தங்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் அடக்கப்படும் முறையைப் பார்த்தால் இதில் இரகசியம் ஏதோ இருக்கிறது என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஓம் ஸ்ரீசாயிராம்

# Sai Sihicha Mandir

(Registered)

## இயற்கை முறை வைத்தியசேவை

நாட்பட்டதும் சிகிச்சைகளுக்கு வசப்படாததுமான *கைகால் நரம்பு முட்டு வலிகள் *பீனிசம், மூக்கடைப்பு, நீர்வடிதல் *ஒற்றைத் தலைவலி *வயிற்றுக்கோளாறுகள் *சரும ரோகங்கள், அலர்ஜி *தேகமெலிவு, பசியின்மை *ஆஸ்த்துமா, தொய்வு இழுப்பு *வாதரோகங்கள் *மூல நோய், மலச்சிக்கல் *தலை அரிப்பு, பொடுகு, சொட்டை *நீரிழிவு, மதுமேகம் *மதுவருந்துதல், புகை பிடித்தல் போன்ற பலவிதமான தீராத பிரச்சனைகளுக்கு

ஆலோசகர் வைத்தியக்கலாநிதி
**பேராசிரியர் A. கணேசாள்**
(முன்னாள் குடும்ப நல வைத்திய அதிகாரி, இலங்கை)

**467 6393**

**12 St.Dennis Dr #627, Don Mills**

## எண் கணித ஜோதிட சாஸ்திர சேவை

பிறந்த திகதி, மாதம், வருடம், நேரம் நட்சத்திரத்திற்கு ஏற்ப *எதிர்காலம் பற்றி அறியவும் *பெயரிடுதல் *பெயர் மாற்றம் *கல்வி *தொழில் *திருமணப் பொருத்தம் மற்றும் சகலவிதமான குடும்பப் பிரச்சனைகளுக்கும் எண் கணித ஜோதிட முறையிலும் கைரேகை பார்த்தல். மற்றும் 'பெண்டுல' சுழற்சி மூலம் துல்லியமான அச்சொட்டான பலாபலன்கள் கணித்து ஆராய்ந்து கூறப்படும்

*சீனதேசத்து அக்குபஞ்சர் *ரிப்ளெக்ஸாலஜி (மசாஜ்) *நவீன மின்சாரக் கருவிகள் மூலம் அக்குபிரசர் * மக்னெட் என்னும் காந்த லேசர்களை உடலில் பாய்ச்சுதல் *ஹோமியோபதி மருத்துவம் *சித்த ஆயுர்வேத மருத்துவம்
ஆகிய இயற்கைமருத்துவ உதவியுடன் சிறந்த முறையில் நிரந்தரமான நோய் நிவாரணத்திற்கு வழிவகுத்துக் கொடுக்கப்படும்.

# ATLANTIC AUTO CLINIC LTD

**1960 LAWRENCE AVE EAST**

**755 8550**

**CALL**
**MIKE or RAJAN**

**Car Certification**
**29.99**


Exhaust,starter,Shocks,Altenater,Clutch
Radio,Transmission,Air Conditon,
General Repair
பல வருட அனுபவம் மிக்கவர்கள்

| | |
|---|---|
| 4WHEEL ALLIGNMENT | 44.99 |
| BREAK SHOES | 29.99 |
| BREAK PADS | 24.99 |
| TUNE UP FROM | 34.99 |
| ENGINE SHAMPOO | 24.99 |
| FILTER 4 CYL | 16.99 |

உங்கள் வாகனங்களை
குறைந்த செலவில் சிறந்த முறையில்
கம்பியூட்டர் இணைப்புகளுடன்
திருத்திக் கொள்வதற்கு நகரில்
ஒரு சிறந்த ஸ்தாபனம்

Fuel Injections, Electronic
and Electric
திருத்துவதில் பல வருடம்
அனுபவம் உள்ளவர்கள்

We use
Quaker
State Oil



# இடை நிலைப்பள்ளி (secondary school) மாணவர்களுக்கான தமிழ் திறமைச் சித்தி பாட நெறி (Tamil credit course) வகுப்புக்கள்.

**செல்வா இலங்கையன்**

நோத்யோக், எற்றேபிக்கோ, ரொறொன்ரோ, பீல் கல்விச்சபைகள் தமிழ் திறமைச்சித்தி பாடநெறிக்கான வகுப்புக்களை தங்கள் தொடர் கல்வித்திட்டத்தின் கீழ் இம் முறையும் நடாத்தத் திட்டமிட்டிருப்பதாக அறிவித்துள்ளன. இம்முறை மேலதிகமாக தனியார் பாடசாலைக் கல்விச்சபையும் (separate school Booard) ஸ்காபரோ பிரதேசத்திலுள்ள ஒரு பாடசாலையில் இப்பாடநெறியை நடாத்தத் திட்டமிட்டுள்ளதாக அறிவித்துள்ளது. இப்பாட நெறிகள் பற்றிய விபரங்களை இக்கல்விச்சபைகள் அண்மையில் வெளியிட்ட தொடர்கல்விக்கான கைநூல்களிலிருந்து அறியலாம்.

இவ்வகுப்புக்கள் தொடங்குவதற்கான சாத்தியக்கூறு இவ்வகுப்புகளில் சேர்ந்துபடிக்க விண்ணப்பிக்கும் மாணவர்களின் எண்ணிக்கைகளைப் பொறுத்தது. நிதிப்பற்ருக்குறையின் காரணமாக கல்விச்சபைகள் இவ்வெண்ணிக்கை பற்றி மிகக் கண்டிப்பாக இம்முறை இருக்கின்றன. குறைந்தது 15 மாணவர்களேனும் ஒரு வகுப்பில் சேர்ந்து படிக்க விண்ணப்பித்தாற்தான், அவ்வகுப்பை ஆரம்பிக்கலாமென கல்விச்சபைகள் அறிவித்துள்ளன. ஒருவரின் அடிப்படை மொழியாற்றலைக் கொண்டுதான், அவர் சேர்ந்து படிக்கக்கூடிய வகுப்பின் தரம் நிர்ணயிக்கப்படும். பாரம்பரிய மொழித்திட்டத்தின் கீழ் (Heritage Language program) தரம் 8 இல் சித்தியடைந்தவர்கள் திறமைச சித்திப்பாடநெறிக்கான 10 ஆந்தரத்தில் சேர்க்கப்படுவார்கள்.

இப்பாடநெறியில் ஒருவர் 10,11,13 ஆம் தரங்களுக்கான மூன்று திறமைச்சித்திகளை தமிழில் பெற வாய்ப்புண்டு. 10,11 ஆம் தரங்களுக்கான இரண்டு சித்திகள் ஒன்ராரியோ இடைநிலைப்பள்ளி டிப்புளோவுக்குத் தேவையான இரண்டு திறமைச சித்திகளாகவும், தரம் 13க்கான திறமைச்சித்தி OACக்குத் தேவையான ஒருதிறமைச்சித்தியாகவும் கணிக்கப்படும். சேர்ந்து படித்து அதிகளவு திறமைச்சித்திகளைப் பெறுவதன் மூலம் ஒன்ராரியோ மாகாணத்தின் இடைநிலைப்பள்ளி பாடவிதானத்திலும், வரப்போகும் காலங்களில் ஒன்ராரியோ பல்கலைக்கழகங்களிலும் தமிழ் மொழிக்கோரிடத்தை வருவிக்க முடியும். இவற்றை மனதிற்கொண்டு மாணவர்களும் பெற்றோர்களும் சமூக சேவையாளர்களும் தொழில் படுவதே நாம் எமது தாய் மொழியாம் தமிழுக்கு செய்யும் பெருந் தொண்டும் கௌரவமுமாகும்.

இன்றுவரை இப்பாட நெறிக்குக் கிடைத்த ஆதரவை நோக்கின் நாம் தலை குனிய வேண்டியதுதான். 'கலைவிழாக்கள் எடுத்தென்ன? நடாத்தியென்ன? இவைகள் எல்லாம் எவ்வளவு காலத்துக்குத்தான்?

சென்ற பாடசாலை வருடத்தில் ரொறொன்ரோ மாநகரிலும் அதையண்டிய பிரதேசங்களிலுமுள்ள இடைநிலைப் பள்ளிகளில் மொத்தம் ஏறக்குறைய 8000 மாணவர்கள் கல்வி பயின்ருர்கள். ஆனல் தமிழ்திறமைச்சித்தி வகுப்புகளில் மொத்தம் 160 மாணவர்களே சேர்ந்து படித்தார்கள். அதாவது 2 வீத மாணவர்களே சேர்ந்து படித்தார்கள். பாரம்பரிய மொழித் திட்டத்தைப் பொறுத்தவரையில் அதாவது ஆரம்பபாடசாலை மாணவர்களுக்கான தாய் மொழிக் கல்வித்திட்டத்தைப் பொறுத்த வரையில் ஆரம்ப பாடசாலைகளில் கல்விகற்கும் ஏறக்குறைய 12000 தமிழ் மாணவர்களில் கிட்டத்தட்ட 1000 மாணவர்களே தாய் மொழிக்கல்வி போதிக்கும் பாரம்பரிய மொழிக்கல்வி நெறி வகுப்புகளிற் சேர்ந்து படித்தார்கள். இது மொத்த எண்ணிக்கையில் 16 வீதமே இப்புள்ளிவிபரங்கள் எமக்குக் காட்டுவதென்ன?

இந் நிலைமை தொடர்ந்து இருக்குமேயானல் புலம் பெயர்ந்த எமது மத்தியில் நாம் பெருமைப்படும் விழா எடுக்கும்மொழி கலைகலாச்சாரங்கள் நின்று பிடிக்குமா என்ற கேள்விதான் எழுகின்றது.

இம்முறை தமிழ் திறமைச்சித்தி பாடநெறிக்கான வகுப்புகள் நடை பெற இருக்கும் பாடசாலைகளாவன:

நோத்யோக்

விக்ரோரியாப்பாக் இடைநிலைப்பள்ளி

எற்றேபிக்கோக்

பேஹம் தோப் கல்லூரி நிறுவகம்

ரொறொன்ரோ

பாக்டேல் கல்லூரி நிறுவகம்

ரொறொன்ரோ

ஜாவிஸ் கல்லூரி நிறுவகம்

ரொறொன்ரோ

வெஸ்ற் ரொறொன்ரோ நிறுவகம்

பீல் எமின்டேல் இடைநிலைப்பள்ளி

பீல்

ரீ, எல். கென்னடி இடைநிலைப்பள்ளி

கத்தோலிக்க சபை போப் ஜோன் போல் கத்தோலிக்க பாடசாலை

இப்பாட நெறியில் சேர விண்ணப்பிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து, மேலும் பல பாடசாலைகளிலும் இவ்வகுப்புகள் ஆரம்பிக்கப்படுவதற்கான சாத்திய கூறுகள் உள்ளன என்பதை மனதிற்கொண்டு தொழிற்படுதல் வரவேற்கத்தக்கது.

# மாதகலில் மோதல்

தெல்லிப்பளைப் பகுதியில் இராணுவம் முன்னேற முயன்றதனல் புலிகள் தரப்பில் பெரும் சேதம் ஏற்பட்டதாக இராணுவம் கூறியது. மாதகல் பகுதியின் மேற்குப் புறமாகவும் இராணுவம் முன்னேற முயன்றது. புலிகள் கடும் எதிர்ப்புக் காட்டியதாகவும் விமானப்படை விமானங்களின் உதவியுடன் எதிர்ப்பு முறியடிக்கப்பட்டதாகவும் இதில் இராணுவத்தினர் ஒருவர் கொல்லப்பட்டு ஆறு பேர் காயமடைந்ததாகவும் செய்திகள் கூறுகின்றன.

ஆனையிறவு முகாமிலிருந்தும் இராணுவம் வெளியேற முயன்றது. இதில் ஒரு இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் ஐவர் காயமடைந்தனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டம் ஆகியவற்றில் ஊரடங்குச் சட்டம் அமுலாக்கப்பட்டதன் பின்னரே இந்த தாக்குதல் நடத்தப்பட்டது. வெள்ளிக்கிழமை இரண்டு மணி நேரம் தளர்த்தப்பட்ட பின்னர் மீண்டும் அமுலாக்கப்பட்டிருந்தது.

# சிவதாசனின்



# அசை

# some—மதம்

மதம் ஒரு வாழ்க்கை நெறி இயற்கையிலிருந்தும் மனித அனுபவங்களிலிருந்தும் பொறுக்கி எடுத்த சிலைகளுள் பெரியது (பொ.சி.பெ) என்று சொல்லிக்கொள்ளலாம்.
பத்திலும் பலரிலும் காணப்பட்ட பொது அம்சங்களை எடுத்து கூட்டிக் கழித்து பெருக்கி பிரித்து பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்ருக்கி அதற்கு பெயர் வைத்தால் மதம், கலாச்சாரம், பண்பு, நாகரீகம் என்று பல பெயர்கள் சூட்டப்படலாம்.
ஒரு சமூகத்தில் அளவுககோல்களாக இவை இருப்பது தான் பொருத்தமானது.

சீரான வாழ்வொன்றுக்கான அடிப்படை அளவுகோலாகவே மதம் உருவாகியிருக்க வேண்டும். இந்த அளவு கோலுக்கு யாருமே உரிமை கோராத வரைக்கும் அது பலன் தருவதாய் இருந்து கொள்ளும். வெவ்வேறு சமூகங்கள் வெவ்வேறு அளவு கோல்களை பாவிக்கின்றன. உலகில் பற்பல சமூகங்களிடையே மதங்கள் சில இந்த வரையறைகளிலிருந்தும் தாண்டி விட்டன.

தடியெடுத்தவனெல்லாம் தண்டல்காரனுவது போல கடவுள் பெயரைச் சொல்லிக் கொண்டு காதகம் பல வடிவங்களில் ஊராடுகிறது. எந்த அளவுகளுக்கும் கட்டுண்டாமல் தத்தம்பாட்டில் தேவைக்கேற்ருற் போல் அளவுகோல்களைச் செய்து கொண்டு தர்மம் போதிக்கப் புறப்பட்டிருக்கிருர்கள் பலர்.

தனிநபர் லாபங்களுக்காக தாபனமயமாக்கப்பட்ட மதநிர்வாகங்களை நிறுவி மக்களிடையே பக்தி பயன்களை உருவாக்கி தசம தானம் பெருகின்ற பல திருட்டு கோஷ்டிகளை அங்கிங்கெனுதபடி எங்கும் உலாவ ஆரம்பித்திருக்கின்றன.

கடவுள் தூணிலிருமிருக்கின்ருர் துரும்பிலிருமிருக்கின்ருர் என்றபடியால் தான் தூண்கள் கண்ட இடமெல்லாம் உண்டியல்களும் கட்டப்படுகின்றன.

மதமோ மதப்புரோகிதர்களோ மக்களுக்கு நற்சிந்தனை போதிப்பதுடன் நின்று விடுவதே பொருத்தமானது. மதங்களை மாறச் சொல்வதும் கோவில்களை மாறச் சொல்வதும் போதகர்களை மாற்றச் சொல்வதும் படுமுட்டாள்தனமான காரியங்கள். மாறச் சொல்பவர் தன் சுயலாபத்துக்காக தவிர வேறு எந்த விதமான காரணங்களையும் முன்வைக்க முடியாது. மாறுபவன் அவிவேகபூரணகுருவின் சீடன் என்பதைத் தவிர வேறெந்த நாம வலயத்திலும் அடங்க மாட்டான்.

வாழ்வில் நொந்து கெட்டுப் போவது எல்லோருக்கும் வந்து போகின்ற நிகழ்வு. நொந்து போன ஒருவனைப் பிடித்து வைத்து அவனுக்கு உதவி செய்வது மதநெறி. அதற்காக அவனை மதம் மாற்றி பக்தியை விற்பது மதவெறி. உதவி செய்ய வேண்டுமானுல் பிரதியுபகாரம் எதிர்பாராமல் உதவி செய்ய வேண்டும். அதையே எல்லா மதங்களும் ஏற்றுக் கொள்கின்றன.

1893 இல் சிக்காக்கோ நகரில் நடைபெற்ற உலக மதங்களின் ஒன்றுகூடலில் சர்வமத நெறிகள் பற்றி முழங்கிச் சென்றவர் சுவாமி விவேகானந்தர். சர்வமத புரிந்துணர்வைப் போதித்த இவரது பேச்சு கீழ் தேச மதங்களின் பெறுமானத்தை மேல் தேச மதநிறுவனங்கள் கணக்கெடுக்கும் வாய்ப்பை உருவாக்கியது. சகல உலக மதங்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டும் கூட கத்தோலிக்க, ஆங்கிலிக்க திருச்சபைகள் இம்மாநாட்டைப் புறக்கணித்தன. துறவி விவேகானந்தரை உலகறியச் செய்த இந்த மாநாடு நூறு ஆண்டுகளுக்குப் பிறகு இவ்வருடம் அதே சிக்காக்கோ நகரில் கூடவிருக்கிறது. இம்முறை கத்தோலிக்க, ஆங்கிலிக்க திருச்சபைகள் தமது பிரதிநிதிகளை அனுப்புகின்றன.

சர்வ மதங்களுக்கிடையேயும் ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கான முயற்சி ஆரம்பிக்கப் பட்டிருக்கும் வேளையில் மத வெறிகளைப் போதிக்கின்ற நிகழ்வுகளும் தொடர்ந்து கொண்டு தான் இருக்கின்றன. ரொறன்ரோ பலவிடங்களில் மதமாற்ற முயற்சிகள் உக்கிரமடைந்து வருகின்றன. குடும்பங்களிடையே பகைமையையும் மன உளைச்சலையும் ஏற்படுத்தி நிரந்தர பாதிப்புகளை ஏற்படுத்துகின்ற இந்த நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும். சில குடும்பங்களில் மதம் மாறிய சிலர் குடும்ப விவகாரங்களிலிருந்தும் ஒதுக்கி வைக்கப்பட்டு மனவேதனைக்குள்ளாகி இருக்கிருர்கள்.

எவர்கள் எந்தக் கடவுள்களையும் வணங்கிக் கொள்ளட்டும். அதற்காக அவரை இழுத்து வந்து மதப் பூட்டுப் போட்டு விட வேண்டும் என்ற தேவையில்லை. இதனுல் உருவாவது இன்னுமொரு அடிமைச் சமூகமே. இந்த மத அடிமைகளால் எஜமானர்களுக்கு பிரஜோசனம் இருக்கலாம். சமூகத்திற்கு பலன் எதுவும் கிடைத்து விட முடியாது.

உணவுக்காக போய் கொலையுண்ட அமேசன் ஆதிவாசிகளைப் பார்த்தாவது தெரிந்து கொள்ளுங்கள். அடிமைகளாக வாழ்வதும் ஒருவகையில் புத்தியின்மையின் வெளிப்பாடு தான். கர்த்தர், கணேசர், அல்லா எல்லோரும் எம்மவர்கள் தான். அவர்களுக்குள் அடிபாடுகள் இல்லை. அடிமைகளிடத்து மட்டுமே.

வெளிச்சம் பெறுங்கள்.

# இப்படியும் சேதிகள்

## ஜனமித்திரன்

***1993 ஆகஸ்ட் 22 ம் திகதி 'திவய்ன" ஞாயிறு இதழில் வெளிவந்த "மானியின் கலம்" என்னும் பகுதி தாயகம் வாசகர்களுக்காக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. நன்றி திவய்ன.***

கந்தோரிலிருந்து புறப்பட்டுச் சென்ற நான் எனது வீட்டை நெருங்கிக் கொண்டிருந்தேன்.

"ஹோல்ட்"

நான் திடுக்கிட்டேன். மேலே தூக்கி வீசப்பட்டு கீழே விழுந்தது போன்ற உணர்வு. எங்கள் அண்டைவீட்டு பத்துவயது சிறிய பையன் தனது விளையாட்டுத் துப்பாக்கியை நீட்டி என்னை நிறுத்தினான். நான் உடனேயே எனது கைகளை மேலே உயர்த்தி சரணடைந்தேன்.

அவன் கள்ளச் சிரிப்புடன் எனக்கு உயிர்ப்பிச்சை அளித்தான்.

"மகனே, ஸ்கொலசிப் சோதனை நன்றாக எழுதினாயா?" நான் பையனின் தலையைத் தடவிக் கொண்டே கேட்டேன்.

"ஆம் அங்கிள்" பையன் பெருமையுடன் தலையசைத்து பதில் கூறினான். "எனக்கு இப்போது இராணுவத்தில் உத்தியோகத்தர் பதவியும் கிடைக்கும்"

"ஏன் மகனே, நீ பெரியாளாகி இராணுவத்திலேயா சேரப் போகிறாய்" நான் பையனிடம் கேட்டேன்.

"பெரியாளாகி?" பையன் ஏளனத்துடன் என்னைப் பார்த்து கேள்வி கேட்டான்.

"பெரியாளாகி இல்லை. நாளைக்கு அல்லது நாளை மறுநாள் நான் பேபி பிரிகேட்டில் சேரப் போகிறேன்."

அப்போது எனக்கு சிரிப்புத்தான் வந்தது.

"மகன் புலியாக மாறுவதற்கா யோசிக்கிறாய்." நான் சிரமப் பட்டு சிரிப்பை அடக்கிக் கொண்டு கேட்டேன்.

"இல்லை அங்கிள், நான் புலிகளின் சிறுவர் படையில் சேர மாட்டேன்" பையன் தூ தூ என நிலத்தை நோக்கித் துப்பிக் கொண்டே பதிலளித்தான். "நான் எங்கள் இராணுவத்தின் பேபி பிரிகேட்டில் சேரப் போகிறேன்.

"ஆனால் எங்கள் இராணுவத்தில் பேபி பிரிகேட் என்று ஒன்று இல்லையே."

"அங்கிள் பத்திரிகையிலே வேலை செய்தும் பத்திரிகை பார்க்கிறது இல்லைப் போல" பையன் என்னை நோக்கி போலிப் பார்வை செலுத்திக் கொண்டே கூறினான். "ஏன் அங்கிள் பார்க்கவில்லையா ஐந்தாம் வகுப்பு பாஸ் பண்ணியவர்களை இராணுவத்தில் சேர்ப்பதாக இருந்ததை?"

அப்போது எனக்கு மனதுக்குள் சிரிப்பு வந்தது.

"அதிலே சொல்லி இருப்பது மகனே...." நான் வசனத்தை முடிக்கு முன்னரே பையன் கதைக்கத் தொடங்கினான்.

"ஐந்தாம் வகுப்பு பாஸ் பண்ணிய பின் சாப்பாடும் குடியும் இருப்பிடமும் கொடுத்து நாலாயிரத்துக்குக் கிட்ட சம்பளமும் உள்ள தொழிலொன்றும் கிடைக்கும்போது அதற்குப் பிறகும் படிக்க வேணுமா அங்கிள்." பையன் எனக்கு விளங்கப் படுத்தினான்.

"படித்து பட்டம் பெற்றாலும் கூட இவ்வளவு சம்பளம் கிடைக்கப் போறதில்லை யென்று எங்களுடைய டீச்சரும் சொன்னா".

நான் மீண்டும் பேச்சை ஆரம்பிக்க முயற்சித்தேன்.

"ஆனாலும் மகனே............"

பையன் மீண்டும் எனக்கு தடையை ஏற்படுத்தினான்.

"அம்மா, அப்பா இதை விரும்பாமல் இருக்க எந்தக் காரணமும் இல்லை அங்கிள்" பையன் எனக்குக் கூறினான்.

"அவர்கள் என்னைப் படிப்பிக்க செலவு செய்வதற்குப் பதிலாக அவர்களை என்னால் கவனிக்க முடியும்."

"இது உனக்கு நல்லா விளங்கவில்லை" நான் இந்தத் தடவை மெதுவாக வசனத்தை முடித்துக் கொண்டேன்.

"அங்கிள் எனக்கு நன்றாக விளங்குகிறது. ஆகக் குறைந்தது எட்டாம் வகுப்பு படித்தவர்கள் கூட இராணுவத்தில் சேருவதற்கு விரும்பவில்லையே!" பையன் எனக்கு விளங்கப் படுத்தினான். "அதனாலேதான் என்னைப் போல ஐந்தாம் வகுப்பு பாஸ் பண்ணிய வர்களை சேர்க்க முயலுகிறார்கள்."

"அவர்கள் சேர்க்க முயற்சிப்பது உன்னைப் போன்றவர்களை அல்ல. அறிவும் விளக்கமும் உள்ளவர்களை" நான் கூறினேன்.

"ஐந்தாம் வகுப்பு பாஸ் பண்ணிய எல்லாருடைய அறிவும் ஒன்றுதானே அங்கிள்!" பையன் எனக்குச் சொன்னான் "அறிவு குறைவாக இருந்தால் பெயிலாக்கி இருப்பாங்களே"

இப்போது எனது பொறுமையும் வரம்பைத் தாண்டிக்கொண்டிருந்தது.

"உனக்கு இராணுவத்தைப் பற்றியோ யுத்தத்தைப் பற்றியோ ஒன்றுமே தெரியாது மகனே, பிறகு என்னத்துக்குத்தான் நீ படையிலே சேரவேணும்."

"அங்கே தெரிகிற வீட்டுப் பொடியன் அளவுக்கு மிச்சமாக நடக்கப் பார்க்கிறான். அவனுடைய தகப்பன் வெளி நாட்டிலிருந்து அனுப்புகிற விளையாட்டுச் சாமான்களை எனக்குக் காட்டி பெருமைப் படுகிறான்." பையன் கூறினான்.

"நான் இராணுவத்திலே சேர்ந்து ஜீப்பிலே வந்து அவனுடைய முகத்திலே குத்திப்போட்டு விளையாட்டுச் சாமான்களை யெல்லாம் எடுப்பேன்".

இப்பேச்சைக் கேட்டவுடன் நான் மறுபடியும் வினோதமடைந்தேன்.

"மகனே நீ இராணுவத்திலே சேர்ந்து வேறு என்ன செய்வாய்?"

நான் கேட்டேன்.

"எங்கட டியூஷன் வகுப்பில் ஒரு பெட்டை இருக்கிறாள். அவளும் தன்னைப் பற்றி கொஞ்சம் கூடத்தான் நினைச்சுக் கொண்டிருக்கிறாள். எனக்கு ஒரு நாளும் கணக்கொன்றும் காட்ட மாட்டாள்." பையன் மனவேதனையுடன் கூறினான்.

"அந்தப் பெட்டைக்கும் நான் பாடமொன்று படிப்பிக்கத் தான் வேணும்"

"ஆனாலும் மகனே, நீ படையில் சேரமுன் இன்னும் கொஞ்சம் படித்தால் நல்லது தானே?" நான் கூறினேன்.

"ஐயோ அங்கிள், இராணுவத்திலே சேருவதென்றால் இப்போதே சேர்ந்திட வேணும்." பையன் கூறினான், "எட்டாம் வகுப்பு பாஸ் பண்ண மட்டுமாவது நான் பள்ளிக் கூடம் போய், பிறகு எனது மனம் மாறிவிட்டால்?"

எல்லோரும் துக்கம் விசாரிக்க முந்தியே சென்ற போதும் நான் மட்டும் பிந்தியே சென்றேன். கலங்கிய கண்களில் கோபம் கனல் கக்க, என்னை அவர் பார்த்தார். பிந்திப் போவதால் வந்த வினை என நினைத்துக் கொண்டேன்.

"உங்களுக்கு ஏற்பட்ட இழப்பிலை நானும் பங்கு கொள்கிறன். வாழ்க்கையில இதெல்லாம் சகஜம். சிவா உங்களைக் காப்பாத்துவான்"

"சிவாவோ! அவன் தானையடா என்ரை பெணடிலைக் கூட்டிக் கொண்டு ஓடினவன்" என அவர் கத்தியவுடன் சிவபெருமானையே கோட் போமில் சிவா எனக்குறிப்பிட்டதாகச் சொன்னேன். எங்களது வாலிபர் சங்கம் அண்மையிலே "சந்தோஷமாகக்" கூடிய போதுதான் சிவபெருமானுக்கு சிவா எனும் "மொட்"டான பெயர் கொடுககத் தீர்மானிக்கப்பட்டது.

"சரி நடந்ததை ஒரு கெட்ட கனவெண்டு வைச்சுக் கொண்டு இன்னொண்டை அவிட்டா பட்டெண்டு பிரச்சனை முடியும்" என நான் ஒரு தீர்வுத்திட்டத்தை அவிழ்த்து வைத்ததும் அவர் சீறும் புலியானார்.

"வட்டிக்கு 40 ஆயிரம் எடுத்துத்தான் அந்த வேசையை நான் இங்கை கூப்பிட்டனான். மூண்டு மாதம் வேறை. அவனோடை ஓடிட்டாள்...." என்றபடி தன்னையும் அறியாமல் தாயகம் பாணியில் "எங்கே போய் முட்ட" எனச் சொல்லிக்கொண்டார்.

பெட்டையையும், பெட்டையை அவிழ்த்தவரையும், அவிழ்த்தவரிடமிருந்து அவிழ்த்துக் கொண்டு போன கல்லிக் கட்டுக் காளையையும்

# ஜெயந்தீஸன் குட்டிக்கதைகள்

# ஓட்டம்

(ஏற்கனவே அவிழ்த்தலின் சூட்சுமம் ஒன்றை அவிழ்த்திருந்தேன் அல்லவா. இதோ இன்னொன்று ராம.... ராம....)

எனக்கு நன்கு தெரியும். போதாக்குறைக்கு முதலாமவர் அவிழ்க்கத் துடித்த போது ஏஜென்சி செற்பண்ணிக் கொடுக்கும் மாமா வேலை பார்த்தவனும் அடியேனே.

"நீ நல்ல ஏஜென்ஸியெண்டு சொன்னதாலேதான் நான் நம்பிக் காசு கட்டினனான்..." என அவர் இழுக்க, நான் புறமிஸ் தந்த மாதிரி அவன் உங்கடை வீட்டு வாசலிலை பெட்டையைக் கொண்டு வந்து விட்டிட்டு, விசாவும் வேறை போட்டுத் தந்திட்டுப் போனவன். உப்ப சிவா அவிட்டுக் கொண்டு போனதுக்கு அவன்தான் காரணமெண்டா... எனக்கு வாற விசரிலை..." என்று லைட்டாக மிரட்டியதும் அடங்கி என் காலில வீழ்ந்தார்.

"டேய், அவன் அவளைக் கூட்டிக் கொண்டு போனது எனக்குப் பிரச்சனையில்லை. நேற்றைக்கு வட்டிக்குத் தந்தவன் வட்டி கேக்க வரேக்கை என்னிட்டை ஒண்டும் இல்லை எண்டன். உன்ரை பெண்டிலை விடடா எண்டான். என்றை இக்கட்டான நிலைமை உனக்கு இப்ப விளங்குதோ?"

"விளங்குது, வட்டி கட்ட வட்டிக்கு இன்னும் கொஞ்ச காசு மாறினா, உங்கடை பிரச்சனை தீரும்" என்று அடுத்த தீர்வை அவிழ்த்தேன்.

"உது சரிவராது. உனக்கு சிவாவை நல்லாத் தெரியும். அவனோடை கதைச்சு எப்பிடியாவது நான் அவளைக் கூப்பிடச் செலவழிச்ச காசை மட்டும் வாங்கித் தந்தியெண்டா பெரும் புண்ணியமா இருக்கும்..." என்றபடி போனைத் தூக்கி என் முன் வைத்தார். நான் அடித்தேன்.

"உனக்கு விஷயம் தெரியும்தானே, எல்லாரும் வந்து ஆசீர்வாதம் செய்திட்டுப் போயிட்டாங்கள்... நீ மட்டும் தான் இன்னும் வரேல்லை" என்று அவனும் புலிபோல சீறினான்.

"ஒரு றூம் எண்டபடியா ஒரு பிள்ளை, இரண்டு றூம் வாங்கினா ரெண்டு பிள்ளை பெத்துப் பெருவாழ்வு வாழ்க" என அவனை வாழ்த்தி விட்டு,

"அவரோடை நான் கதைச்சனான். மனிசன் அவளை அவிழ்க்க எவ்வளவு கஷ்டப்பட்டதென்பது எனக்குத்தான் தெரியும். நாப்பது கட்டினது. நீ ஒரு குடுத்தியெண்டா, உண்மையிலேயே இப்ப உள்ள ரேட்டுக்கு அது லாபம் குடுப்பியே?"

"நான் ஒரு மனிசாபிமானவாதி. அவற்றை கஷ்டம் எனக்குத் தெரியும். எனக்கு இப்ப வேலை இல்லை. வேலை கிடைச்சோண்ணை 30 குடுப்பன்." என்று அக்செப்ற் பண்ணினான். பாத்தீங்களே ஆளை..... ஒழுங்கா ஒரு வேலை இல்லை; அதுக்குள்ளை அவற்றை வேலையை!

போனைக் கட் பண்ணிவிட்டு விஷயத்தை முதலாமவரிடம் விளக்கினேன். அதற்கு அவர் சொன்னார்: "நல்ல பெடியன் போலை கிடக்கு, எப்பிடியும் நான் அவனுக்கு ஒரு வேலை எடுத்துக் குடுப்பன்."


ATLANTIC AUTO SALES

DOMESTIC/ IMPORTS

AFFORDABLE USED CARS

90 TEMPO L AUTO AIR 4 DOOR –$4300
89 SONATA GL AUTO 4 DOOR –$4100
89 GRANDAM AUTO AIR 4 DOOR $5600
88 MERCURY SL FULLY LOADED $ 4600
88 SPRINT AUTO 2 DOOR $2800
87 MERCURY TRACER $2800

85 FIFTH AVE FULLY LOADED $2400
85 FORD LTD AUTO $1200
82 RABBIT AUTO 4 DOOR $ 1900

FINANCING &WARRANTY AVAILABLE

2314 KINGSTON RD
EAST OF KENNEDY

499–4680 (Res)
617 9600 MOBILE

## ஞானம்ஸ் ஸ்டுடியோ

ஆறு வருட கனடா அனுபவம்
தலைசிறந்த படப்பிடிப்பாளர்கள்
நவீன தொழில் நுட்பம்
அனைத்தையும் ஒருங்கே கொண்டது
ஞானம்ஸ்

★ திருமணம்
★ அரங்கேற்றம் மற்றும் அனைத்து வைபவங்களுக்கும் எம்மை முதலில் அழையுங்கள்

**750 8118**

**GNANAMS STUDIOS**

**2387 Eglinton Ave E #1**
**(At Kennedy, Top of Beckers)**

★ மனதை விட்டகலா படங்களை மீண்டும் படம் பிடித்து தரம் குறையாது பெரிதாக்கி மகிழ்ந்திட

★ வண்ண வண்ண வடிவங்களில் உங்கள் குடும்ப, குழந்தைகளின் படங்களை பார்த்து மகிழ்ந்திட

★ Film roll developing and printing நவீன கொம்பியூட்டர் தொழில் நுட்பத்துடன் color density, skintone correction செய்து நிறம் மாறாத படங்களாகப் பார்த்திட

**High Quality albums, frames**

பாஸ்போட் படங்கள் பத்து டொலர்கள் மட்டுமே

---

சகல விதமான அச்சுவேலைகளுக்கும்.....

9 2 0 7 7 4 1

QUIK GRAFIX
Our Name Tells Everything

# ELECTRON AUTO SERVICE



எந்த வித வாகனங்களுக்கும்
எந்த வித திருத்த வேலைகளுக்கும்
திறமையாகவும் நுணுக்கமாகவும்
உத்தரவாதத்துடன் திருத்திக்
கொள்ளவும்
Engine Rebuilt செய்யவும்
பாவித்த தரமான இயந்திரங்களை
உங்கள் வாகனங்களுக்கு
பொருத்தவும்
பாவித்த தரமான உதிரிப்பாகங்களை
வாங்கவும்
தொடர்பு கொள்ளுங்கள்

**25 Heritage Rd, #14,**
**McGowan/Highway 7**
**(On McGowan)**

**TEL:472 8343/ 921 8005(Erai)**
**Mobile Tel:399 1830**

24 hrs Road Emergency Service available
Transmission Repair
Engine Tune up. Breaks
Exhaust system
Electrical and Electronic problems

குறைந்த செலவு நிறைந்த திருப்தி

# GAMINI WANIGASEGARA

BARRISTER & SOLICITOR, NOTARY PUBLIC
BARRISTER-AT-LAW (ENGLAND)
ATTORNEY-AT-LAW (SRI LANKA)

**(416) 449 4294**

30 YEARS EXPERIENCE IN ENGLAND, SRI LANKA & TORONTO, CANADA

Suite 600, Don way West
Don Mills, Ontario
Fax:(416) 449 4369

REAL ESTATE
BUSINESS
CRIMINAL LAW
FAMILY LAW
ESTATES

- BUYING, SELLING, MORTGAGING
- PURCHASE OF BUSINESSES & CORPORATIONS
- INCORPORATIONS
- ALCOHOL RELATED OFFENCES
- SEPARATION AGREEMENTS, DIVORCE
- LAST WILLS

காணி நிலம்:வாங்க, விற்க
வியாபாரம்: வாங்க, இணைத்தல்
குற்றச்சட்டம்: மது சம்பந்தமான குற்றம்
குடும்பச்சட்டம்: பிரிவு, விவாகரத்து
சொத்து:கடைசி உயில்

தமிழிலும் உரையாடலாம்

# கனடா தமிழர்களும் கலைவிழாக்களும்

## மணிமாறன்

எங்கள் மக்கள் அங்கே துயரங்களுக்கு மத்தியில்.. அதை நிவர்த்தி செய்ய எதையும் காணோம். ஆனால் அவர்களை வைத்து இவர்கள் கும்மாளம். விழாவுக்கு சென்று பார்த்தேன். அரைவாசிக்கு மேல் வெற்றிடம்.

ஏன் விழாக்களுக்கு ஆட்கள் வருவதில்லை? பெரும்பாலானவர்கள் நாட்டைப் பற்றி யோசிக்கத் தேவையில்லை என்ற நிம்மதிப் பெருமூச்சுடன் ஈழத்தை மறந்தவர்கள், நான் எனது பரம்பரை வாழப்போவது கனடாவில், நாம் இனி கனடியர் என இறுமாப்பவர்கள், தமிழனின் கலை, கலாச்சாரம் பற்றி நினைக்காதவர்கள், தமது பிள்ளைகள் தமிழ் பேசுவது சுத்த பட்டிக்காட்டுத்தனம் என நினைப்பவர்கள், தாம்மட்டும் எப்போதாவது உண்ட களைப்பு தீர வந்திருக்கும் நண்பருடன் தமிழீழ அரசியலையும், கலை கலாச்சாரத்தையும் குறை கூறுவதில் இன்பம் காண்பவர். ஆனாலும் இவர்களில் சிலர் தமது பிள்ளைகளை அந்தஸ்திற்காக நடனம் சங்கீதம் பயிற்றுவித்த மேடைகளில் அவர்கள் தோன்றும்போது படம் பிடித்து மகிழ்பவர்கள்.. அவர்களின் நிகழ்ச்சி முடிந்தவுடன் தாமும் சென்றுவிடுவர்.

மிகுதிப் பேரில் கலை கலாச்சாரம் தாய்நாடு, தாய்மொழி குழப்பக்காரரின் அட்டகாசங்கட்கும் கலைநிகழ்ச்சியின் போது ஊளையிடுபவர்களுக்கு முகம் கொடுக்க விரும்பாமல் எட்டி நிற்பவர்கள் பெரும்பங்கினர். இவர்கள் தமிழன் என்ற தன்மானம் இருந்ததால் தமிழ்க்கலை பேணப்படவேண்டும் என்ற ஆதங்கம் இருந்தால் துணிந்து நிற்க வேண்டும்.

நல்ல நிகழ்ச்சி என எதை ரசிகர்கள் குறிப்பிடுகின்றார்கள் தமிழனின் பண்பாட்டை பழக்கவழக்கங்களை தமிழீழத்தின் உணர்வுகளை பிரதிபலிக்கும் நாடகங்கள் தரமான வசன நடையோடு, நல்ல நெறியாள்கையோடு மேடையேற்றப்பட்டால் அதை மக்கள் வரவேற்கிறார்கள். அதனால் தானோ வானவில்லிற்கு 10 டொலர் டிக்கட் இருந்தும் மக்கள் முண்டியடித்து வந்து டிக்கட்டுகள் கிடைக்காமல் செல்லுகின்றார்களோ? அடுத்தது நல்ல தலைப்பில் நமது பண்பாட்டை பழக்கவழக்கங்களை இன்றைய பிரச்சனையை அலசி ஆராயவும் விவாதமேடை... பண்பட்ட பேச்சாளர்கள் பங்கு பற்ற வேண்டும்.

இன்னொன்று தரமான மாறுபட்ட உத்திகளுடன் கலையம்சம் மிகுந்த நடனம் மக்களால் வரவேற்கப்படுகின்றது. சிறந்த பாடகர்கள் சுவையான வாத்திய சேர்க்கையுடன் பாடும் மெல்லிசை ஆனால் திடீரென 93ம் ஆண்டில் கலைவிழாக்கள் வீக்கம் கண்டுவிட்டது, திட்டமிடப்படாத கலைவிழாக்கள் அதை குழப்பவென வரும் மறு பாடசாலை தமிழ் மாணவர்கள் இதைக்கண்டு விரக்தியுறும் ரசிகர்கள்...

இப்படியான போக்குக்கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். கண்டபடி எப்படியும் கலைவிழா நடத்தலாம். என்று நினைப்பவர்கள் நின்று சற்றே நிதானித்து சிந்திக்கவேண்டும் கல்ல கலைப்படைப்புகளை மேடையேற்றம் முடியுமானால் மட்டுமே கலைவிழா நடத்துவதுபற்றி சிந்திக்க முன்வரவேண்டும். கோனேஸ் அவர்களின் வானொலி போன்றும், விளம்பரம் பத்திரிகை போன்றும் கலைநிகழ்ச்சி அட்டவணையை எல்லா மக்கள் தொடர்பு சாதனங்களும் பின்பற்றி கலைநிகழ்ச்சிகள் பற்றிய செய்தியை மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். இங்குள்ள மக்களில் பலருக்கு கனடாவில் எத்தனை தமிழ் பத்திரிகைகள் வெளிவருகின்றது. எத்தனை தமிழ்வானொலி சேவை உண்டு என தெரியாதபோது இவர்களுக்கு எமது மக்கள் தொடர்பு சாதனங்களால் கலை நிகழ்ச்சி பற்றிய செய்தியை பரப்புவதா என கேட்கலாம். மிகுதிப் பேராவது பயன் அடையட்டுமேன்.

தமிழ் கலை கலாச்சாரம் கனடாவில் வளரவேண்டுமானால்

1) திட்டமிடப்பட்ட கலைவிழாக்கள் தரமான கலையம்சங்களுடன் போதிய விளம்பரத்துடன் மேடையேற்றப்பட வேண்டும்.

2) கனடாவாழ் தமிழ்மக்களுக்கு கலை கலாச்சார விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவேண்டும். முக்கியமாக சிறுர்களை கலைவிழாக்களுக்கு கொண்டு வருதல் வேண்டும்.

3) கலைவிழாக்களை குழப்பவென்றே வருபவர்களையும் அவர்களை சுற்றியலைந்து ஏவலில் செயற்படும் மாணவர்களையும் இனம்கண்டு அப்புறப்படுத்தவேண்டும்.

4) எந்த கலைவிழா நடந்தாலும் தமிழுக்கான விழா என்ற கோதாவில் ஆதரவு நல்கவேண்டும்.

# பாராளுமன்ற செய்திகளை வெளியிட தடை

பாராளுமன்றச் செய்திகளை வெளியிடுவதற்கு விதிக்கப்பட்ட புதிய விதிகள் தணிக்கை செய்யும் நோக்கமல்ல என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார். இந்த விதிகள் வளைந்து கொடுக்கக் கூடியன என்று வெளிநாட்டுப் பத்திரிகையாளர் சங்கத்தின் கூட்டம் ஒன்றில் பேசிய பிரதமர் குறிப்பிட்டார்.

ரணில் தலைமையில் செயற்பட்ட பாராளுமன்றக் குழு பாராளுமன்ற நிகழ்வுகள் பற்றிய செய்தி வெளியீடு பற்றிய விதிமுறைகளை தணிக்கை என்று பத்திரிகையாளர்கள் கண்டனம் தெரிவித்திருந்தனர்.

புதிய விதியின்படி பத்திரிகைகள் ஹன்சாட்டில் உள்ள செய்திகளையே வெளியிட வேண்டும். அவ்வாறாயின் பாராளுமன்ற நிகழ்வுகளை மறுநாள் வெளியிட முடியாது என்று பத்திரிகையாளர்கள் குற்றம் சாட்டுகின்றனர். அத்துடன் ஹன்சாட்டில் உறுப்பினர்கள் ஒருவரை ஒருவர் திட்டும் விடயங்கள் பதிவாவதில்லை.

# புலிகள் தாக்கலாம் என அச்சம்

வருகின்ற மூன்று நான்கு மாத காலத்திற்குள் புலிகள் தாக்குதல்களை அதிகரிக்கப் போவதாக இராணுவம் நம்புகிறது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். உளவு தகவல்களின் அடிப்படையிலும் புலிகளின் பலவீனத்தின் அடிப்படையிலும் இராணுவம் இவ்வாறு கருதுவதாக அவர் தெரிவித்தார்.

வெளிநாட்டுப் பத்திரிகையாளர் சங்கத்தின் கூட்டம் ஒன்றில் பேசிய போது ரணில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

# இணையம் பற்றி..
# 'தடை'யையும் மீறி..

**எஸ்கேயார்**

பொதுவாக எழுத்தில் தொடங்கி ஏச்சில் தொடர்ந்து இழுபறியில் முடியும் (கனடாத்) தமிழ் எழுத்தாளர்கள் இணைவது சாத்தியமா? முடியும். எத்தனை நாளுக்கு? அவர் அவருக்கு ஏதோ பலன் கிடைக்கும் என்பது உறுதிப்படுத்தும் வரை. அப்படி என்றால்? சங்கங்களின் வரலாறும் இங்கு எழுத்தாளர்கள் சிலர் இடைக்கிடை நடந்து கொள்ளும் முறைகளும் சான்று பகர்கிறதே. வரலாற்றை மாற்றி புதுமுன்னோடியாக இந்த 'இணையம்' போகிற போக்கு நம்பிக்கைக் கீற்றை தரவில்லையே. முளைச்சு மூன்று இலை இன்னும் விடவில்லை. அதற்குள் அப்படி ஒரு முடிவுக்கு வரமுடியுமா? ஆரம்ப வேரில் தீரா ஊனங்கள் இருப்பின் அதுவே விருட்சமாகினால் மாறிவிடாது. ஏன் அப்படி நினைக்கிறீர்கள்?

இணையத்தைப் பற்றி இனி கொஞ்சகாலம் புகழாரங்களை மட்டும் வாசிக்கலாம். உள்ளே நடக்கும் விஷயங்களை அனுமதியின்றி வெளியில் எழுதினால் எழுதியவரை வெளியில் தள்ள பொதுக்குழுவுக்கு 'சுதந்திரம்' உண்டாம். ஒரு அமைப்பு என்றால் அப்படி ஒரு கட்டுப்பாடு இருப்பது சாதாரணமானதுதான். ஆனால் இவர்கள் என்ன தங்கமா கடத்தப்போகிறார்கள்? எதைப் பற்றியும் கேட்டுக் கேள்வி இல்லாமல் விமர்சிக்க எழுத்தாளனுக்கு உரிமை வேண்டும் எனக் கூச்சலிடும் இந்த எழுத்தாளர்கள் தமது 'இணையத்தை' வெளியில் விமர்சிக்கும் உரிமையை புத்திஜீவித்தனமாக பறித்துக் கொண்டார்கள். இந்த இணையத்தின் நோக்கம் எந்த வகையிலும் சமூகத்துக்கோ இனத்துக்கோ ஏதாவது நன்மையைக் கொண்டு வருமா? அங்கத்துவம் எழுத்தாளர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டால் அவர்கள் தமக்கு நன்மையானது எதையாவது செய்து கொள்ள 'நெல்லுக்கு இறைத்த நீர் புல்லுக்கும் அங்கே பொசிவது' போல் அவ்வப்போது சமூகமும் பயன்பட்டுக் கொள்ளலாம். அவர்களும் சமூகக் கவசத்தை பிறர் காணுதபடி பாவித்துக் கொள்ளலாம். புத்திஜீவிகள் அல்லவா?

அங்கத்துவம் பெறுவதென்றால் ஏற்கனவே எங்கேயாவது பொதுசன தொடர்புகளில் எழுதியிருக்க வேண்டும். ஆக்கத்தில் தரம் இருந்தாலும் அதை வெளியிட இங்குள்ள 'முதலாளிகள்' எல்லோரும் முன்வருகிறார்களா? இணையம் கேட்டிருந்து கூட அவர்களின் அறிவித்தல் ஒன்றை பத்திரிகை ஒன்று இருட்டடிப்பு செய்துவிட்டதாம். அவ்வாறாயின் புதிய எழுத்தாளர்களின் கதி என்னவாய் இருக்கும் என யோசித்துப் பாருங்கள். புதிய எழுத்தாளர்கள் இணையத்தில் சேரவே வாய்ப்பில்லை என்னும்போது என்னும்போது எழுத்தார்வத்துடன் ஏங்கிக்கொண்டு இருப்பவர்களுக்கு இணையம் ஏதோ செய்யும் என்பதெல்லாம் வெறும் கவர்ச்சியான வார்த்தைகள் போல இருக்கிறது. எந்தவொரு வியாபார சக்தியும் புகமுடியாத அமைப்பாம். இவ்வாறு சொல்லிக்கொண்டு தொடங்கிய எத்தனையோ சங்கங்கள் வியாபாரமாகிக் கிடப்பது இவர்கள் அறியாததா?

பொதுவாக ஆரம்பிக்கப்பட்ட பல சங்கங்கள் தொடங்கியவர்களும் அவர்களுடன் அணைந்தவர்களும் பயன்பெறவே ஆரம்பிக்கப்பட்டது என்பது அனுபவத்தில் கண்டிருக்கிறோம். இவர்கள் அப்படிப் பட்டவர்களாக இருக்கமுடியாது என நம்பப்பட்ட போதும் கடந்தவார கூட்டத்தை பார்த்தபோது சந்தேகம் வரவே செய்கிறது. 'எங்களுடைய நோக்கம் புதிய முயற்சிகளையும் ஊக்குவிப்பது' எனச் சொல்லிவிட்டு பலகாலமாய் சந்தையில் உள்ள 'நான்காவது பரிமாணம்' என்ற இதழை இணையம் விற்பனை செய்தது. அந்த இதழ் அங்கே விற்கப்பட்டது தவறென கூறவில்லை. அதை இணையம் ஏற்று விற்றுக் கொடுத்ததில் இருந்து என்ன தெரிகிறது. எழுத்தாளர்கள் சேர்ந்து இருப்பதால் புடம் போட்ட தங்கம் என்று இணையத்தை எடுத்த எடுப்பிலே நம்ப வேண்டுமா என்ன. இப்படி விமர்சனம் எழுதியதற்காக கௌரவமாக நாகரீகமாக 'பொறுக்கி' என்று கூட பட்டம் அளிக்க முயலலாம் சில எழுத்தாள சிந்தனைவாதிகள்.

# சில கருத்துக்கள்

வ.ந.கிரிதரனுடைய கடிதங் கண்டேன். அவரது கருத்துக்கள் பெரும்பாலும் பயனுள்ளவை. சிறுவர் பகுதி பற்றிய அவரது ஆலோசனையில் உள்ள ஒரு சிக்கல் ஏதெனில் இலங்கையிற் தமிழிலேயே கருமமாற்றிய ஒரு இளம் பரம்பரையை எழுதத் தூண்டுவதற்கும் புலம் பெயர்ந்து தாய்மொழியை இரண்டாம் மொழியாகப் பயிலும் ஒரு இளம் பரம்பரையை எழுதத் தூண்டுவதற்குமிடையிலான வேறுபாடாகும். இது பற்றிக் கூடிய கவனம் எடுத்து, அவரது யோசனையை நடைமுறைப்படுத்தப் பத்திரிகைகள் முயலலாம். சிறுவர் பகுதிகளை ஆரம்பித்த சில ஏடுகள் (அவுஸ்திரேலியாவின் மரபு, டென்மார்க்கின் சஞ்சீவி போன்ற) விரைவிலேயே அவற்றைக் கைவிட நேர்ந்ததும் கவனத்துக்குரியது. கிரிதரனது கருத்தை ஆதாரமாகக் கொண்டு, அதிக எழுத்துப் பயிற்சியற்ற இளம் எழுத்தாளர்களுக்கான ஒரு தனிப் பகுதியைத் தொடக்கலாம்.

அ.ந.கந்தசாமி பற்றிய அவரது குறிப்பும் கவனத்துக்குரியது. அ.ந.க எழுதிய சில கட்டுரைகள் புலம் பெயர்ந்த ஏடுகளின் சில வருடங்கள் முன் மறுபிரசுரமாயின. தாயகத்திலும் ஒன்று அல்லது இரண்டு வந்ததாக நினைவு. இலக்கிய வரலாறு பற்றிய கட்டுரைகள் பொறுப்பாகவுங் கவனமாகவும் எழுதப்பட வேண்டும் என்பது என் எண்ணம். கைவசம் நம்பகமான ஆதார நூல்கள் இல்லாமல், மனம் போன போக்கில் எழுத்தாளர் எழுதுவதை நான் விரும்பவில்லை. சிலர் மீதான தனிப்பட்ட தாக்குதல்களின் முறையீனத்தாலும் அவற்றிற் காணப்பட்ட பொய்மையான வியாக்கியானங்களாலுமே நான் சிறிது எழுத நேர்ந்தது 'மரபு வாதம்' தொடர்பாக அ.ந.க, கைலாசபதி, ஏ.ஜே. கனகரத்னா ஆகியோர் எழுதிய ஐந்து கட்டுரைகளைத் தனது கட்டுரைகள் சிலவற்றுடன் சேர்த்து ஸுவைர் இளங்கீரன், இலங்கை தேசிய கலை, இலக்கியப் பேரவை மூலம் ஒரு நல்ல நூலாகத் தந்துள்ளார். (தேசிய இலக்கியமும் மரபுப் போராட்டமும், ஸ்வுத் ஏசியன் புக்ஸ். 6.1, தாயார் ஸாஹிப் இரண்டாவது சந்து, சென்னை 600 002)

அ.ந.கந்தசாமியை முற்போக்கு இலக்கிய உலகம் பெருமையுடன் நினைவு கூர வேண்டும். அவரது பல்வேறு இலக்கியத் திறனாய்வுக் கட்டுரைகள் தனி நூலாகத் தொடுக்கப்பட வேண்டும் என்ற கருத்துடன் பலரும் உடன்படுவார்களென நம்புகிறேன்.

அன்புடன் சிவசேகரம்

## போக விரும்பும் கேள்வி

எனது நெஞ்சாங்கட்டைக்கு
ஒரு மொத்தப்பூவரசு எங்கிருக்கிறது?..

வேலி பாறிட்டு நிலத்தில் வீழ
உலக்கை கொண்டு நிறுத்த ஒடுவது யார்?

விறகேத்தி மயானம் போகும்
மாட்டு வண்டில ஒட்டுவது யார்?

சுகன்

## சுற்றாடலுக்கு ஒரு எழுச்சிப் பாடல்

குப்பை மலை முகட்டிலேறுவோம் கரிய
கங்கைகளில் ஓடம் விடுவோம்
கப்பல்களிற் கொட்டி வழிந்த எண்ணெய்க்
கடற்கரையைக் கண்டு களிப்போம்

என்னவென்று விளங்கவில்லையா எங்கள்
எதிர்காலந் தெரியவில்லையா
பன்னாட்டுக் கம்பெனிக்காரர் செய்யும்
புதுவுலகம் புரியவில்லையா

அமிலமழை நீரிற் குளிப்போம் நைற்றேற்
உப்பு மிகும் நீரைக் குடிப்போம்
பாத ரச நீரில் மிதக்கும் மீனைப்
பக்குவமாய்ச் சுட்டுச் சுவைப்போம்
(என்னவென்று...)

கதிரியக்கக் காற்றை முகர்வோம் தெருவிற்
காரீயத் தூசை நுகர்வோம்
ஒஸோன் துளை வாசல் வழியே விழும்
யூவீக் கதிர்க் கஞ்சி ஒளிவோம்
(என்னவென்று....)

பீவீஸீ காடு வளர்ப்போம் வண்ணப்
பொலித்தீனில் பறவைகள் செய்வோம்
பிளாஸ்ற்றிக் கில் விலங்குகள் வைப்போம்
வைனல் புல்வெளியிற் சாய்ந்து படுப்போம்
(என்ன வென்று...)

கைத்தடிகள் ஊன்றி நடப்போம் கறுப்புக்
கண்ணாடிகள் மாட்டியிருப்போம்
குழாய் வழியே உணவு கொள்ளுவோம் மருந்துக்
குளிசைகள் விழுங்கிப் பிழைப்போம்

புதியதொரு உலகம் அமைக்கப் பழைய
மானுடரைக் கொன்று குவிக்கும்
பன்னாட்டுக் கம்பனியாரின் காலிற்
பணிவுடனே வீழ்ந்து கிடப்போம்

சிவசேகரம்

## திரு விளையாடற்புராணம்
## (காலம் . ஆ.பி 10)

| | |
|---|---|
| எங்கிருந்து வருகிறாய் | சிலோனிலிருந்து |
| எங்கே போகிறாய் | வெல்பேயர் ஓபீஸிற்கு |
| இடையிலென்ன | அட்றஸ் பிரச்சனை |
| ஒழுங்காகப் பதில் | |
| சொல் கேட்பது தமிழன் | நானும் யாழ்ப்பாணத் தமிழன் |
| பனங்கொட்டை என்பது | அது முன்னைய காலத்தில் |
| நான் உன்னை கேள்விகள் | |
| கேட்கப் போகிறேன் | கேளும் கேட்காத கேள்வியாய் |
| பெரியது எது | வீங்கிய தலைகள் |
| சிறியது எது | உள்ளே இருப்பது |
| அரியது யாது | ஊரிலே பேச்சு ரோட்டிலே மூச்சு |
| நிலைமைகள் எப்படி | எல்லாமே போச்சு |
| வாழும் வழி யாது | வால்பிடிப்பதும், வாரிவிடுவதும் |
| ஆளும் வழியாது | ஆளை முடிப்பதும், அடைத்துப் புதைப்பதும் |
| போகும் வழி யாது | புல்லாகிப், பூண்டாய், புழுவாய், மரமாகி கல்லாய் மனிதராய் பேயாய் கணங்களாய் வல்லசுரராகி |
| பாதிக்கப்பட்டாயா | பார்த்துக் கொண்டிருந்தேன் |
| வீரத்துக்கு | அனுராதபுரம் |
| தீரத்துக்கு | பொலநறுவை |
| அதிகாரத்துக்கு | துனுக்காய் |

மேலும் சொல்லும்
(பாட்டு)
கல்லும் மண்ணும் தோன்றுமுன்னே தோன்றி(நா)யடா
நீ காற்றடிக்கும் பக்கமெல்லாம் ஒடி (நா)யடா
சீற்றம் கொண்டு பாம்பு போல சீறி(நா)யடா
நீ பகைவனென்று மனிதர்களை தீண்டி(நா)யடா
உன் விசமே உன்னைக் கொல்லும் நாளை(ப்)பாரடா

நல்லது மேலும் சில கேள்விகள்

| | |
|---|---|
| மட்டைக்கு | ஸ்கார்பரோ |
| கத்திக்கு | சுவிற்சர்லாண்ட் |
| போத்தலுக்கு | ஜேர்மனி |
| பொட்டுக்கு | யாழ்ப்பாணம் |

ஐயய்யோ ஆளைவிடு

| | |
|---|---|
| நீதான் தமிழன், | நீதான் தமிழன் |
| கிடைக்கின்ற போத்தலில் | ஆளுக்குப் பாதி |

சரவணன்

ஆ.பி 10: ஆடிக்கலவரத்தின் பின் 10ம் ஆண்டு

# அமெரிக்கா VS ரஷ்யா
# ஜோர்ஜியா: பனிப்போரின் புதிய தளம்;

**தி. உமாகரந்தன்**

சோவியத் யூனியனின் உடைவுடன் அமெரிக்கா சோவியத் யூனியன் ஆகிய நாடுகளிடையே நடந்து வந்த பனிப்போர் COLD WAR முடிவுக்கு வந்து விட்டது என்ற கருத்தை மேற்குலக செய்தித் தொடர்பு சாதனங்கள் பரப்பி வருகின்றன. ஆனால் இது ஏற்றுக் கொள்ள முடியாதது. உடைந்த சோவியத் யூனியனின் வலிமையான நாடுகளில் ஒன்றாகிய ரஷ்யாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையிலான குளிர்யுத்தம் இன்னமும் தொடர்கிறது. இம்முறை யுத்த களமாக அமைந்திருப்பது உடைந்த சோவியத் யூனியனின் கனிப்பொருள் வளமிக்க குடியரசுகள்.

இந்தப்பகுதிகளில் தற்போது நடந்துவரும் யுத்தங்களில் நேரடியாகவோ மறைமுகமாகவோ ரஷ்யாவுக்கு தொடர்பிருக்கிறது. சண்டை செய்யும் குழுக்களுக்கு ஆயுதம் வழங்குகிறது. அதே சமயம் அமெரிக்காவோ பாரிய அளவில் தானியங்களை ஜோர்ஜியாவுக்கு ஏற்றுமதி செய்வதுடன் நின்று விடாது யுத்தம் நடக்கும் குடியரசுகளில் தனது சி.ஐ.ஏ மூலமும், பயங்கரவாதிகளை அடக்கும் படைப் பிரிவின் மூலமும் அரசாங்கங்களுக்கு உதவி வருகிறது அமெரிக்கா, ரஷ்யா ஆகிய இரண்டும் இப்பகுதிகளில் எதிர் எதிராக இயங்கி வருகின்றன.

மேற்கு ஐரோப்பிய நாடுகளால் அலட்சியப்படுத்தப்பட்ட இப் பகுதிகளில் அமெரிக்கா திறமையாக ஊடுருவி தந்திரமாக தன்னைப் பலப்படுத்தி வருகிறது. அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரன் ஏற்கனவே சி.ஐ.ஏயையும் பயங்கரவாத எதிர்ப்புப்படையான டெல்ரா படையையும் சேர்ந்தவர்களைக் கொண்டு ஜோர்ஜியாவின் ஜனாதிபதியான எடுவார்ட் செவர்நாட்ஜேயை பாதுகாக்கும் ஒரு குழுவை உருவாக்கி அதற்கு விசேட பயிற்சிகளை வழங்கும் உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார். அப்காசியான் பிரிவினைவாதிகளால் செவர்நாட்சேயின் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்பது கிளின்ரனின் வாதம்.

ஜோர்ஜியா தொடர்பாக CSCE எனப்படும் ஐரோப்பாவின் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அமைப்பைச் சேர்ந்த அவதானிகள் கருத்துத் தெரிவிக்கையில் ரஷ்யாவின் உதவியில்லாமல் ஒரு சில ஆயிரம் ஆப்காசியின் பிரிவினைவாதிகளால் மில்லியன்கணக்கான ஜோர்ஜியர்களை அச்சுறுத்த முடியாது எனக் கூறுகின்றனர்.

அதேசமயம் ஜோர்ஜியத் தலைநகரான திபிலிசியுள்ள உயர் அதிகாரிகளும், ஐ.நா அவதானிகளும் இன்றைய நிலை குறித்து கருத்துத் தெரிவிக்கையில் அமெரிக்காவும், ரஷ்யாவும் ஜோர்ஜியாவில் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் பொஸ்னியாவை விட ஒரு மோசமான நிலையை உருவாக்குவதுடன் ஒரு பாரிய அகதி அலையையும் தோற்றுவிக்கும் என்கிறார்கள். அவர்களுடைய சொற்களை வெறித்துப்போன திபிலிஸ் நகர்வீதிகளில் தொடர்ந்து ஒலித்துக் கொண்டிருக்கும் தன்னியக்கத் துப்பாக்கிகளின் சுடும் சத்தங்கள் உறுதிப்படுத்துகின்றன.

மேற்குநாடுகள் கோகசுஸ் பகுதியை வளைகுடா நாடுகளிலிருந்தும் அசர்பையானின் பாகு எண்ணெய் வயலிருந்தும் எரிபொருட்களை கொண்டுவரும் நிலப்பாதையாக்க விரும்புகின்றன. ஆனால் அத்தகைய ஒரு நிலை ஏற்பட்டால் ரஷ்யா இப்பகுதியை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியாது. அதுமட்டுமல்ல தன்னில் எண்ணெய்க்காக தங்கியிருக்கும் உக்ரெய்ன் போன்ற வலுவான போட்டி நாட்டை எண்ணெய் வளத்தைக் காட்டி மிரட்ட முடியாது.

இப்பிரதேசங்களிலுள்ள பிரச்சனைகள் இப்போது ஜோர்ஜியாவிலேயே மையப்படுத்தப்பட்டுள்ளது. ஜோர்ஜியாவில் இப்போது மூன்று பிரிவினைப் போராட்டங்களும் ஒரு உள்நாட்டுப்போரும் நடக்கிறது. ஜோர்ஜியாவின் தென்பகுதியில் ஆர்மீனியாவும் அசர்பையானும் ஒரு மூர்க்கமான யுத்தத்தில் தொடர்ந்து ஈடுபட்டுவருகின்றன. அதுபோலவே மறு புறத்தில் துருக்கியோடு போரிடும் குர்திஷ்டுகள் தென்புற மலைப் பகுதிகளில் செசென்யா குடியரசின் போராட்டம் இவற்றுடன் திபிலிசி நகர வீதிகளில் தன்னியக்கத் துப்பாக்கிகள் சகிதம் நடக்கும் போட்டி யுத்தங்கள்.

இவை குறித்த பகிரங்க விவாதங்களையோ விரிவான அறிக்கைகளையோ தருவதற்கு ஜோர்ஜியாவிலுள்ள அமெரிக்க ரஷ்ய தூதுவரகங்கள் மறுக்கின்றன. ஆனால் ஜோர்ஜியாவில் யார் பலம் பெறுவது தொடர்பாக அமெரிக்காவும் ரஷ்யாவும் மறைப்புக்குள் நடத்தி வந்த இருள் யுத்தம் கடந்த மாத ஆரம்பத்தில் திபிலிசியில் வைத்து சி.ஐ.ஏ அதிகாரி ஃபிரெட் வூட்ரஃப்

**சுழலும் உலகம்**



கொல்லப்பட்டவுடன் அம்பலமாகியது.

ஆனால் அமெரிக்க மற்றும் ஜோர்ஜிய புலனாய்வாளர்கள் இது குற்றச் செயலேயொழிய அரசியல் சம்பவமல்ல என மூடி மறைத்துவிட்டனர்.

ஆனால் வூட்ரஃப்பின் கொலை அமெரிக்காவுக்கு ஒரு அபாய எச்சரிக்கையாகும் செவர்நாஸ போன்ற தமது நண்பர்களுக்கு பாதுகாப்பளிக்க என்ற வகையிலாயினும் சரி யுத்தம் செய்யும் பிரிவுகளை சமாதானப்படுத்தப் போகும் வகையில் இருந்தாலும் சரி இப்பகுதிகளில் தலையிட்டால் என்ன நடக்கும் என்பதற்கான ஆரம்ப எச்சரிக்கை அமெரிக்காவுக்கு இக்கொலையின் மூலம் வழங்கப்பட்டிருக்கிறது.

மோஸ்கோவில் முன்னாள் தற்காலிக அமெரிக்கத் தூதுவராக இருந்த யேம்ஸ் கொலின்ஸ் தற்போது யுத்தம் செய்யும் குடியரசுகளிடையே சமாதானத்தை ஏற்படுத்துவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இதை ரஷ்யா ஆட்சேபிக்க வில்லை. ஆனால் விரும்பவில்லை. ஜோர்ஜியாவிலும் இதர பகுதிகளிலும் அமெரிக்காவும், ரஷ்யாவிற்குமிடையிலான முரண்பாடுகள் வலுவடைந்து வருகின்றன.

இதுகுறித்து லண்டனிலுள்ள ரஷ்யா பற்றிய ஆய்வாளரான டாக்டர் மார்க் ஸ்மித் கூறுகையில் இந்தப் பகுதிகளில் ரஷ்யா ஒரு பொலிஸ்காரனாகவோ அல்லது உறுதிப் பாட்டை பாதுகாக்கும் பொறுப்பாளனாகவோ நடக்கக் கூடாது என்ற அமெரிக்க எண்ணம் அதிகரித்துவருகிறது என்கிறார். அதுமட்டுமல்ல வூட்ரப் ஒரு சி.ஐ.ஏ அதிகாரி என்பதை அமெரிக்கா பகிரங்கமாக ஒப்புக்கொண்டதும் அவரது உடலை பொறுப்பேற்க சி.ஐ.ஏ யின் தலைவரையே அனுப்பியதும் அமெரிக்காவின் நேரடித் தலையீட்டிற்கான சாட்சியமாகும் என்கிறார்.

யுத்தமிடும் குடியரசுகளிடையே சமாதானத்த ஏற்படுத்தப் போவதாகக் கூறி மேற்கொள்ளப்படும் அமெரிக்கத் தலையீட்டை ரஷ்யப் பத்திரிகைகள் வன்மையாகக் கண்டிருக்கின்றன. ரஷ்ய பாதுகாப்பு அமைச்சின் பத்திரிகையான கிரஸ்நய ஸ்வெஸ்டா 'கிளின்ரன் கடந்த கால பனிப்போர் கொள்கையையே தொடர்வதாகவும் ரஷ்யாவைப் பலவீனம் படுத்துவதே அவரது முக்கிய நோக்கம் என்றும் கண்டித்துள்ளது.

ஜோர்ஜியாவைப் பொறுத்தவரை ஜனாதிபதியும் முன்னாள் சோவியத் வெளிநாட்டமைச்சருமான செவர்நாட்சேயே நாட்டை சேர்த்து வைத்திருக்கிறார். அரசாங்கம், பொலிஸ் அனைத்துமே அர்த்தம் இழந்துவிட்டன. பணம் கூப்பன் முறையினால் மாற்றீடு செய்யப்பட்டிருக்கிறது. மின்சார, நீர் விநியோகங்கள் சீர்குலைந்து விட்டன. சராசரி மாதச்சம்பளம் 5 டொலராகவும் ஒரு கலன் பெற்றோலின் விலை இதுபோல இரண்டு மடங்காக இருக்கிறது. அனைவருமே ஆயுதம் தரித்திருக்கிறார்கள். திபிலிசி நகரின் குடிசனத்தொகை 1.2 மில்லியன் இதில் அரை வாசிக்கு மேற்பட்டோர் ஆயுதம் தரித்துள்ளனர். வேலையில்லாதவர்களின் எண்ணிக்கை 70% கைத்தொழில் உற்பத்தி 10% ஆல் குறைந்திருக்கிறது கட்டடங்கள் அனைத்துமே துப்பாக்கிகளால் சல்லடையிடப்பட்டு இருக்கின்றன "இந்த நாட்கள் இறக்கும் நாட்கள். ஆனால் நாங்களோ உயிர்களை இழுத்துப் பிடிக்க முயல்கிறோம்" என்று செவர்நாட்செயின் நம்பிக்கைக்குரியவரும் பாராளுமன்ற பாதுகாப்புக் குழுவின் தலைவருமாகிய தொடார் நொற்றுப்ஸ் கூறுகிறார்.

இந்தப் பகுதிகளில் இதுவரை 3 இலட்சம் பேர் அகதிகளாக்கப் பட்டிருக்கின்றனர். இந்த நிலையில் தானியத்தோடும் தலைவர்க்குப் பாதுகாப்பளிக்கவும் வந்திருக்கும் அமெரிக்கா அதிகாரத்திலுள்ளார்க்கு ஆபத்பாந்தவனாகத் தெரிகிறது. இதற்கெதிரான சக்திகளுக்கு ரஷ்யா உந்துசக்தியைக் கொடுக்கிறது. ஆரம்பித்திருக்கும் இந்த புதிய பனிப்போரின் விளைவுகள்தான் இன்று உடைந்த சோவியத் குடியரசுகளில் யுத்தமாக ....இரத்தமாக ....பசியாக... பட்டினியாக .... அகதிகளாக வடிவமெடுத்திருக்கிறது ஆரம்பமே இப்படியென்றால் எதிர் வரும் நாட்கள் இன்னமும் கொடுமையான செய்திகளையே சுமந்துவரும்.


அன்ரனி பிறதர்ஸ்

516-3903 588-0733 588-3447

எமது வாராந்த மலிவு விலையில் நீங்களும் கலந்து கொள்ளுங்கள்

வெங்காயம் ~~2.49~~ 1.99

Homo பால் ~~3.20~~ 2.99

வாழைப்பழம் ~~.39~~ .29

தலையில்லாத நெத்தலி 400 g ~~2.71~~ 1.99

NESCAFE 200g ~~4.99~~ 3,99 (TAX INC)

5kg வறுத்த அரிசிமா ~~7.99~~ 6,99

இது ஒரு மலிவு விற்பனை அல்ல!

எமது சாதாரண விலையில் நீங்களும் கலந்துகொள்ளுங்கள்

10kg குடாஸ் அரிசி (பார்பொயில்) 5.99

பால் 2% 2.99

yogurt 1.59

vegetable oil 2.99

எம்மிடம் சகலவிதமான மரக்கறி வகைகளும் எப்பொழுதும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம் ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள் உண்மை விளங்கும்

ANTONY BROTHERS FASHION HOUSE

1484 QUEEN ST WEST (Jameson)

சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஆடைகள் பரிசுப் பொருட்கள் அனைத்தையும் ஒரே இடத்தில் மலிவு விலையில் பெற நாட வேண்டிய ஸ்தாபனம்.

# கணவன் மனைவிக்கு இடையில் (தொடர்ச்சி)

## சிவப்பிரகாசம்

"என்னென்னவோ எழுதிப் பாத்தாங்கள். பிசினஸ் பத்தாது எண்டு இப்ப செக்ஸ் எழுத தொடங்கி இருக்கிறுங்கள் போல கிடக்கு. இப்படி எண்டா எங்கடை இனம் எப்படி உருப்படும். எங்கடை கலாச்சாரத்தை கெடுக்கவே சிலதுகள் இருக்குது. இந்த நாட்டிலே எல்லாத்துக்கும் சுதந்திரம் இருக்கிறது இவங்களுக்கெல்லாம் வாய்ச்சுப் போச்சு"

கடந்த இருவாரங்களும் பிரசுரமான இத்தொடரின் முதல் பகுதிகளை வாசித்த இருவர் தமக்குள் கதைத்துக்கொண்டிருந்தது என் காதில் விழுந்தது. "அங்கே இப்படி நடந்ததாம். ...... அவள் ஆள் சரியில்லை..... வரவர மோசமாய்தான் போகுது போல கிடக்கு ........ இங்கை வந்த... நம்பி கலியாணம் கட்டேலாதாடா மச்சான்" இது போல எத்தனையோ சொற் தொடர்கள் எம்மின மக்களின் வாயிலிருந்து அடிக்கடி உதிர்ந்து கொண்டுதான் இருக்கிறது. இந்த சம்பவங்களை கதைத்துக் கொண்டும் பரப்பிக்கொண்டும் இருப்பது ஊர்வம்பு செவிக்குவிருந்தாக அமைந்தாலும் சமுகத்துக்கு பிரயோசனம் அற்றது. பல பத்திரிகைகள் "மித்திரன்தனமாய்" இதையெல்லாம் எழுதி விற்பனையை அதிகரித்து கொள்கின்றன. ஆனால் பிரச்சனையின் காரணம் என்ன தீர்வுகள் என்னவாய் இருக்கலாம் என பத்திரிகைகள் எழுத விரும்புவதில்லை.



(தீர்வு அமைந்துவிட்டால் பின்பு பத்திரிகைக்கு விஷயம் இல்லாதுபோக விமர்சகர்களுக்கும் "தீனி" கெட்டுப் போய்விடும் என எண்ணுகிறார்களோ). செந்தாமரைக்குக் கூட ஞானம் பிறந்து கடந்த வாரம் இவ்விஷயம் பற்றி எழுதியிருப்பது பாராட்டுக்குரியது. பாலியற்கல்வி போதாமையால் ஏற்படும் விளைவுகளை அறிந்த மேலை நாடுகளில் அதைப் போதிப்பதை முக்கியமாக கருதுகிறார்கள். நம்ம பெரிசுகளின் சிந்திக்காமல் செயலாற்றும் தன்மையும் புதிதாக உள்ள எதையுமே வரவேற்காத தன்மையும் முன்னேற்றத்தை நம்மிடையே பரவாமல் பரவாமல் அணைகட்டி வைத்திருக்கிறது. இந்த அணை தகர்க்கப்பட்டு அரசியலோ இலக்கியமோ கலாச்சாரமோ கோவில் பக்தியோ அல்லது எங்கள் பொன்னான வாழ்க்கையோ எதுவாயினும் ஒருமுறைக்கு பலமுறை சிந்தித்து பலமான நாகரீகமான இனத்தை கட்டி எழுப்புவது நம் கடமை. எழுத்துக்கு நிறம்பூசி அது பச்சையா சிவப்பா என்று தேடுவதை விடுத்து இனத்துக்கு நாட்டுக்கு நல்லதா என பாருங்க சார்! இது ஒரு புறமிருக்க "கோவிலைப் பற்றி எழுதுமீர். இப்போ செக்ஸ் எழுதுமீர்" கோவிலின் புனிதமே உம்மைப் போன்றவர்களால் பாழாய்ப் போச்சு "என்று ஒரு பக்தர் சீறினார். இந்து மத நூல்களையும் புராண இதிகாசங்களையும் படித்திருந்தால் சிவனடியார்களும் ஆழ்வார்களும் எழுதிய "கோவை" களையும் அகப்பொருள் விளக்கங்களையும் "தலைவன் தலைவி" நோக்கில் அமைந்த அவைகளின் ஆழ்ந்த கருத்துக்களையும் புரிந்திருந்தால் இப்படி ஒரு கேள்வி பிறந்திருக்காது. வாரவாரம் அருச்சனை செய்து விடுவதாலும் கோவிலில உபயம் கொடுத்து விடுவதாலும் கோவிலை ஸ்தாபித்து விடுவதாலும் மட்டும் எவரும் இந்துமதம் பற்றி தாம் முழுமையாக அறிந்தவர்கள் என நினைப்பின் .......... வெளியிலே சொல்லாதீர்கள் வெட்கம். சம்பந்தமில்லாத விஷயம் எழுதப்பட்டதற்கு வாசகர்கள் மன்னிக்கவும். இனி கடந்த வாரத்தில் இருந்து தொடர்கிறது.

சில குறிப்பிட்ட நாட்களிலே பெண்கள் கூடிய பாலியல் உணர்வு வயப்படுகிறார்கள். முட்டை வெளியேறும் போது (மாதவிலக்கு ஏற்பட்டு 13 15 நாட்களில்) பெண் இலகுவாக உணர்ச்சி ஊட்டப்படலாம் என்று கூறப்பட்டபோதும் பல பெண்கள் மாதவிலக்கு ஏற்பட சற்று முன்னதாக தாம் உணர்ச்சியடைவதாகக் கூறியுள்ளார்கள் என ஆய்வு தெரிவிக்கிறது. இது பொதுவான கருத்து. ஆனால் பெண்ணுக்கு பெண் இது மாறுபடும். கருத்தரிக்கக் கூடிய நாட்களில் உடலுறவைத் தவிர்ப்பது மூலம் கருத்தடை செய்து கொள்ளும் குடும்பங்களில் பெண் அந்த நாட்களில் உணர்ச்சியை கட்டுப்படுத்த முடியாதவளாக இருப்பதாக கூறப்பட்டுள்ளது. இவ்வகையான கருத்தடையை சில தமிழ் குடும்பங்களிலும் பாவிக்கிறார்கள். ஆனால் இக்கருத்தடை முறை நம்பகரமானதல்ல என்ற உண்மையை விட நாளடைவில் குடும்ப பிரச்சனையையும் ஏற்படுத்தலாம் என்பதை உணர வேண்டும். பசிக்கும் போது இல்லாத உணவு பிறகு ஏன்? ஆண் பெண் பாலியல் உறுப்புகளின் அளவுகளை வைத்து பாலியல் இன்பத்தின் தன்மை வேறுபடும் என தப்பபிராயம் பொதுவாக எல்லாரிடமும்

காணப்படுகிறது. இது மருத்துவ ரீதியாக உண்மையில்லை என நிரூபிக்கப்பட்டுள்ளது. எனினும் அவ்வாறான எண்ணம் பலர் மனதில் பதிந்து விட்டபடியால் உளவியல் ரீதியாக உண்மையென சிலர் கூற முற்படுகிறார்கள். பாலியற்கல்வி போதாமையே இதற்கு காரணம். இந்த விஷயத்தில் சில தவறாக அர்த்தப்படுத்தப்பட்ட சோதிட விதிகளும் சில புராண இலக்கிய கதைகளும் தமிழ் மக்களை இன்னும் குழப்பத்தில் ஆழ்த்துகிறது. ஜோனிப் பொருத்தம் என்பதன் தாற்பர்யம் தெரியாத பல சோதிடர்கள் அதைப்பற்றி கொஞ்சம் "கவர்ச்சி"யாக சொல்லி விடுகிறார்கள். இதனால் ஜோனிப் பொருத்தம் இல்லாத பெண் ஏதோ தனது உறுப்பில் குறையுள்ளதென்று நினைத்துக் கொள்கிறாள். கணவனும் மனைவியால் பூரண இன்பம் கிடைக்காதென நம்பத் தொடங்குகிறான். இந்த நினைப்பு பின்னர் குதிரை யானை என்று அரையும் குறையுமாக அறிந்துவிட்டு தாமும் குழம்பி பெண்களையும் குழப்பிவிடுகிறார்கள்.

"மண்டு! இந்த வெள்ளைக்காரிகள் கூட கறுவலின் பின் சுற்றுகிறார்களே. ஏனென்று தெரியுமோ" என சிலர் கேட்க நினைக்கிறீர்கள். இது பற்றிய ஆய்வு தெரிவிப்பதில் இருந்து ஒன்று தெரிகிறது. நீங்கள் நினைக்கும் காரணமல்ல. உளவியல்ரீதியாக அவ்வாறு எண்ணம் ஏற்பட்டதுதான் என பலர் கூறியுள்ளார்கள். மருத்துவத்தில் தெரிவிக்கப்படுவதாவது சின்னச்சின்ன உடற்குறை உள்ளவர்கள்கூட உரிய முறைகள் கடைப்பிடிக்கப்பட்டால் மற்றவர்களுக்கு இணையாக இன்பம் துய்க்க முடியும். எனவே பாலியல் இன்பம் துய்ப்பதில் பிரச்சனை உள்ளவர்கள் அதற்கென இங்குள்ள வைத்தியர்களின் ஆலோசனையை நாடுங்கள்.

சில பெண்கள் பாலியல் இன்பத்தில் மிக நாட்டம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். சூழலோ அல்லது இயற்கையாக அமைந்த உடல் இயக்கமோ இதற்கு காரணமாக அமைகிறது. தனது மனைவி அவ்வாறான நாட்டம் உடையவளா என்பதை கணவன் நடைமுறைகளில் இருந்து அறிந்து கொள்ள வேண்டும்.. இது மிக கடினமான காரியம். இதில் தவறான முடிவுகள் பல கணவன்மார் எடுத்துள்ளனர். ஒரு பெண் மற்ற ஆண்களுடன் சிரித்து கதைத்தால் எத்தனையோ பேர் தமது மனைவியை சந்தேகிக்கும் சம்பவங்கள் நடந்து கொண்டுதான் இருக்கிறது. இவ்வாறு கணவனுக்கு சொன்னால் விளங்கி புரிந்து கொள்ளக்கூடிய கணவனாக இருந்தால் தான் அப்படிப்பட்டவள் இல்லை என்பதை விளங்கப்படுத்தலாம். இங்கேயும் ஒரு சிக்கல். பல தமிழ்க்கணவன்கள் மனைவி அப்படி சொல்வதை விருப்பாத (அடியோடு வெறுக்கும்) தன்மை கொண்டவர்கள். இவ்வாறான நிலையில் கணவன் சிந்தனை சரியான பாதையில் அமைந்து சிந்திக்கும் பக்குவம் பெறும் வரையில் மனைவி சில உரிமைகளை தியாகம் செய்து கொள்வதே குடும்பம் குலையாமல் இருக்க ஒருவழி.

மனைவி உண்மையிலே பாலியல் நாட்டம் அளவுக்குமீறிய அதிகம் உள்ளவள் என கணவன் நிச்சயமாக உணர்ந்தால் புதிய உத்திகள் மூலம் திருப்திப்படுத்த முனையலாம். தனது பிரச்சனையை மனைவிக்கு சொல்லி அதற்கான பரிகாரங்களையும் இருவரும் இணைந்தே முடிவு செய்து கொள்ளலாம். ஆனால் சொன்னால் விளங்கும் நிலையிலா இந்தப் பெண்கள் உள்ளார்கள்? என்பது நல்ல கேள்வி. மனோவியல் ஆய்வுகளின்படி இவ்வகையான பெண்களை சாதாரண பெண்களைப்போல மாற்றுவது முடியாத காரியமல்ல. கொஞ்சம் நாள் ஆகலாம். .. ஆனால் மாற்ற முடியாத புரியவைக்கமுடியாத ரகங்கள் ஒருசிலவே. இதே போலத்தான் ஆண்களிலும் சில ரகம் உண்டு.

மேலைத்தேய ஆய்வின்படி தனக்கு வேண்டியதை தனது கணவனிடமிருந்து பெறமுடியவில்லை என சொல்லிய பெண்களின் விளக்கத்தைப் பார்ப்போம். தமக்கு இப்படியாக நடைபெறும் போதுதான் இன்பமாக இருக்கிறது என கணவனிடம் கூறமுடியுமா?

அவர் செய்கையில் தவறு கண்டுபிடித்தல் "என்னுடைய அலுவலை எனக்குப் பிடிப்பிக்க வேண்டாம்" என கோபிக்க மாட்டாரா? கணவனுக்கு அபிப்பிராயத்தை தெரிவித்தாலும் அதை அவர்கள் சரியாக புரிந்து கொள்ள பலநாள் எடுக்கும் என பல பெண்கள் கூறியுள்ளார்கள். ஆனால் பல பெண்களும் ஒருவிஷயத்தில் கணவனைப் பற்றி சொன்னது ஒன்றாக உள்ளது. பிழை கண்டுபிடிக்கும் பாங்கில் எதையும் சொல்லாமல் "உற்சாகமூட்டும்" வகையில் சொல்லி அபிப்பிராயத்தையும் அதனுடன் குழைத்துக் கொடுத்தால் ஆண்களின் செய்கையில் மாற்றம் ஏற்படுத்தலாம் என்பதே அது. இளமையில் இருந்தே "ஆண்மைத்துவம்" என்பதற்கு முன்னுரிமை கொடுக்கும் ஆண்களுலகில் பெண்களின் பேச்சு இலகுவில் எடுபடாது என்பது நடைமுறையாக இருப்பினும் நான்கு சுவர்கள் நடைமுறையை மாற்றிய சரித்திரங்களும் உண்டு. சம்பவங்களும் உண்டு.

இனி கணவனைப் பற்றி மனைவி தெரிந்திருக்க வேண்டிய பாலியல் சம்பந்தமான விஷயங்களைப் பற்றிப் பார்ப்போம். ஆண் எப்போது பாலியல் உணர்வுமயப்படுகிறான் என பெண் தெரிந்திருக்க வேண்டியது மிக அவசியம். "கவர்ச்சியான" (அழகு வேறு கவர்ச்சி வேறு) பெண்களையோ அவர்களின் சில உடற்பாகங்களையோ காணும்போது (அது நிஜமாகவோ திரையிலோ கற்பனையிலோ எதுவானாலும்) அது பற்றி கேட்கும் போது படித்தறியும்போது ஆண் பாலியல் உணர்வுமயப் படுகிறான். இந்த உணர்ச்சிக்கு நாள் நட்சத்திரம் கிடையாது. நேரகாலம் கிடையாது. இங்கும் ஆணுக்கு ஆண் வித்தியாசம். கணவனுக்கு என்ன தேவை என்பதை அறிந்தால்தான் அப்புறம் அதை எப்படி கொடுப்பதென மனைவி தீர்மானித்துக் கொள்ள முடியும். இதை தம் மனைவியிடம் பகிர்ந்து கொண்டவர்கள் வாழ்க்கையை கலங்கல் இன்றி ஓட்டிச் செல்ல முடிகிறது.

தொடரும்...........

# வானவில்

உடுப்பிட்டி அமெரிக்கன் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினரால் வருடாவருடம் நடாத்தப்படும் "வானவில்" என்கின்ற பல்சுவைக் கலைநிகழ்ச்சி நடைபெற்று முடிந்து சுமார் ஒருமாத காலமாகப் போகிறது. ரொரண்டோவில் நடைபெறும் ஒவ்வொரு விழா பற்றியும் விளம்பரங்களும், விமர்சனங்களுமாய் அமர்க்களப்படும் இன்றைய நாட்களில் "வானவில்" போன்ற ஒரு தரமான நிகழ்ச்சிக்கு ஏன் இதுவரை விமர்சனம் எழுதவில்லை என்ற கேள்வி இதை நான் எழுதுவதற்கான உந்துகோல்.....

வழமைபோல் சரியாக ஆறுமணிக்கு திரைவிலக சிறுமிகளின் கோலாட்டத்துடன் கல்லூரி கீதம் இசைக்கப்பட்டது. மேற்படி நிகழ்ச்சிக்குப் பின்னணி இசை உட்பட அனைத்துமே சின்னஞ்சிறு சிறுமிகளாலேயே கையாளப்பட்டது. பாடல் வரிகள் மீண்டும்மீண்டும் ஒலித்து நீண்டு போனாலும் கோலாட்டத்தைப் பார்த்தபோது சலிக்கவில்லை. அதில் இன்னொரு விடயம், பாடலின் இறுதிவரியில் அதே மெட்டில் கனடாவில் நடைபெறும் "வானவில்" பற்றியும் அதன் மூலம் வரும் பணம் கல்லூரிக்கு வருடாவருடம் அனுப்புவது பற்றியும் குறிப்பிட்ட சிறப்பு.....

"செந்நெறியும் இன்னிசையும்" என்ற நிகழ்ச்சியின் மூலம் கர்நாடக சங்கீதம் எப்படித் திரையிசையில் நுழைகிறது என்ற ரகசியத்தை அம்பலப்படுத்திய விதம் வரவேற்கத்தக்கதாயினும் நிகழ்ச்சி சங்கீதத்துடன் சம்பந்தப்பட்டதால் நீண்டுபோனதாக ஒரு பிரமையை அளித்தது நிகழ்ச்சிகள் பாடிய "அமுதும் தேனும் எதற்கு!.... குழலும் யாழும்.... இன்னொருநாள் போதுமா? .....போன்ற பாடல்களுக்கான சாஸ்திரிய சங்கீத அடிப்படை சாதாரண மக்களுக்கும் புரியும்படி அமைத்தது பாராட்டப்பட வேண்டியதே!......

## அக்கினிக்குஞ்சு

இடையில் சில நிமிடங்கள் வந்துபோன சக்கடத்தார் பார்வையாளரின் பற்கள் அனைத்தையும் நிரந்தரமாகத் தெரியவைத்து அமைதியில்லாதவர்களை அல்லோல கல்லோலப் படுத்தினர். "அர்த்த நாதீஸ்வரர் அருட் கோலம்" என்னும் நாட்டியத்தில் ஆடிய மாணவிகள், காட்சியமைப்பு என்பன பிரமாதமாயிருந்தன, எனினும் கைலையங்கிரிக் காட்சிக்காக மலையோடு மட்டும் நின்றுவிடாமல், புகையையும் காட்ட முற்பட்டுப் பல இடங்களில் புகைமயமாகவேயிருந்தன.... நிகழ்ச்சிக்கான ஆடையலங்காரங்களும் நன்றாகவேயிருந்தன.

இவைதவிர ஒவ்வொரு நிகழ்ச்சிக்குமிடையில் ஏற்கனவே நடந்துமுடிந்து பேச்சுப் போட்டிகளிற்கான பரிசில் வழங்கும் வைபவத்துடன் முதலாவதாக வந்தவர்களிற்கான பேச்சும் இடம் பெற்றது. திரைக்கு வெளியே இதை நடத்தியதன் மூலம் அடுத்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகள் உள்ளேயும் வெளியே பேச்சுமாக ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடித்த சாமர்த்தியம். .. பாலர் பிரிவில் பேசிய ஒரு சின்னச் சிட்டு தன் சைகைகளாலும் பேச்சாலும் பலர் இதயங்களில் இடம் பிடித்தாள்.

தொடர்ந்து வந்த கூத்து "எங்கட சனங்கள்"... இது பற்றி சில வார்த்தைகள் கூறியே ஆகவேண்டும். கனடாவின் மேடைகளுக்கு இது புதிய அறிமுகம். எங்கட சனங்களிடையே இதுபோன்ற கூத்துக்கள் எடுபடுமா? என்ற கேள்வியையே சவாலாக எடுத்து வெற்றிகண்டிருக்கிறார் இதைத் தயாரித்து வழங்கிய திரு. சொர்ணலிங்கம் வடமோடி தென்மோடி இணைந்த இசை கலவையோடு சில புதிய மெட்டுக்களையும் இணைத்து உருவான இந்தக் கூத்தில் மொத்தம் மூவர் பங்கு கொண்டனர். மூவருமே ஒருவருக்கொருவர் சளைக்காமல் அற்புதமாகத் தாம் சொல்லவந்த விடயத்தை வெளிப்படுத்தினர். அப்புவாக வந்தவரின் குரலும் தாள லயம் தப்பாத ஆட்டமும், பார்வையாளரின் ஏகோபித்த பாராட்டைப் பெற்றன. பின்னணி இசைவழங்கிய இந்திய (சீக்கிய) கலைஞர்களின் தாளம் பார்வையாளரைத் தாளமிடவைத்தன... நாட்டுப்புறக் கலைகளும் எங்கட சனங்களிடம் எடுபடும் என்பதற்கு உதாரணமாய் அமைந்த இந்தக் கூத்தை வழங்கிய கலைஞர்களுக்கும் தயாரித்த சொர்ணலிங்கத்துக்கும் என் வாழ்த்துக்கள்.

அடுத்த நிகழ்ச்சியான விவாதம் சபையினருக்குப் பல கேள்விகளை முன்வைத்து விவாதிக்க வைத்தது. தலைப்பு "ஈழத்தமிழினம் நிலைக்குமா? எங்கே என்கின்ற இயல்பான கேள்வி. தலைவராக வந்தவர் தான் இம்முறை நடுவராக வந்து நேரக் கணப்பாளராய் இருப்பதாகக் கூறிக்கொண்டே நேரத்தில் கோட்டை விட வாதி, பிரதிவாதி தரப்பிலிருந்து அதுபற்றிச் சுட்டிக்காட்டிக்கொண்டிருக்கவேண்டிய நிலை.

ஒருவர் இங்குள்ள நிலை பற்றியும், இன்னொருவர் ஈழத்திலுள்ள நிலை பற்றியும் விளாசினார்கள். யாரும் யதார்த்தநிலையைத் தொட்டதாகத் தெரியவில்லை. ஊரிலாகட்டும், இங்காகட்டும் எங்கட தமிழினம் படுகிற அவஸ்தை பற்றி யாரும் வாய்திறக்கவில்லை. இங்கேயுள்ள போட்டி பொறாமை, சண்டித்தனங்கள் என்று எத்தனையோ பிரச்சனைகள்.... ஊரிலுள்ள போராட்டம், தனிநபர் சுதந்திர மறுப்புகள், பட்டினி அவலம்... . விவாதத்தில் தனி நபர் பற்றிய விமர்சனங்கள் தேவையற்றவை. கௌதமி பற்றியும், குஷ்பு பற்றியும் கூறுவது பார்வையாளர்களுக்கு தேவையாயிருந்தாலும் விவாதத்திற்கு வேண்டாதது... ஒருவரின் தனிப்பட்ட குணாதிசயங்களையோ, அங்க அமைப்புகளையோ விமர்சிப்பது அழகல்ல... தயவு செய்து இனிவரும் விவாதங்களிலாவது இவை தவிர்க்கப்பட வேண்டுமென்பதே என் அவா, பங்குபற்றிய அனைவருமே

திறமைசாலிகள்... பலமேடை அனுபவசாலிகள் .... விவாதத்துக்கு முன் உங்களுக்குள் பேசி முடிவெடுத்து அதன் பின் அரங்கேறுங்கள்... விவாதத்தின் கருத்துக்கள் உங்களுக்கு உடன்பாடில்லை என்பது எனக்குத் தெரியும்... இதன் மூலம் நாம் யாரையும் குறைகூறவோ குற்றம் சுமத்தவோ இல்லை... அடுத்த நிகழ்ச்சி நன்றாயிருக்கட்டும்! (உங்களால் அது முடியும்).

அடுத்த நிகழ்சியான 'இது நாடகமல்ல' என்னும் நாடகம் இது ஒரு கூட்டு முயற்சியில் உருவான நாடகம்.. சொர்ணலிங்கம் எழுதிய மூலக்கதையை செதுக்கி அரங்கேற்றம் செய்தவர்களில் சொர்ணலிங்கம் உட்பட இளையபாரதி மற்றும் கேதீஸ்வரன் குறிப்பிடப் படவேண்டியவர்கள். சிக்கலான நிச்சயம் சொல்லப்படவேண்டிய கருத்துக்களைத் துணிச்சலுடன் எடுத்துச் சொல்ல வந்த இவர்கள் பாராட்டுக்குரியவர்களே!

ஒரு தனி நபர் எவ்வாறு தன் குடும்பம் மற்றும் சமூகம் சார்ந்த விடயங்களில் விஷத்தை விதைக்கிறார் என்பதோடு இங்குள்ள இன்றைய தெருச் சண்டித்தனக்காரர்களுக்கான வார்த்தைச் சாடல்கள் அற்புதம். பாத்திரப் படைப்புகள் மூலமாக எமது சமூகத்தில் விதையூன்றியுள்ள நச்சு மரங்களுக்கான நையாண்டிகள் பற்றி இங்கே குறிப்பிட்டே ஆகவேண்டும் கதாபாத்திரங்களுக்கான தேர்வு நாடகத்தை நிஜவாழ்க்கையாகவே மாற்றியது.

ஒரு சாதாரண குடும்பத்தின் வாழ்க்கைத்தரத்தைப் படம் பிடித்துக்காட்டும் தந்தையும் மகளும் அவ்வப்போது வந்து வட்டிப்பணம் கேட்டு நச்சரிக்கும் கடன் வசூலிப்பவரும் இன்றைய யாழ்ப்பாணத்தின் அசல் பிரதிநிதிகளாக மாறிவிட, கனடாவில் வசிக்கும் மகன், அவனது தீய நண்பன், இவர்களை மாற்ற முயற்சிக்கும் புதியவன் என் று கதை இன்றைய நிகழ்வுகளைப் படம் பிடித்துக்காட்டுகிறது. நாடகம் முடியும்வரை பார்வையாளர் களிடமிருந்து எந்தவித கூச்சலோ நாடகம் முடியும்வரை பார்வையாளர் களிடமிருந்து சப்தமோ வராததே நாடகத்தின் வெற்றிக்குச் சான்று... பாத்திரங்களை எவருமே சோடை போகாமல் தம் பங்கைத் திறம்படச் செய்தனர். கடன் வசூலிக்கு வருபவரின் "என்னையும் கொஞ்சம் கவனியுங்கப்பா" இப்போதும் கேட்டுக் கொண்டேயிருக்கிறது... மொத்தத்தில் நாடகத்தை தயாரித்து இயக்கி வழங்கிய குழுவினருக்கு ஒரு வார்த்தை 'இது நாடகமல்ல.... ! ஆமாம் இதுதான் வாழ்க்கை!'

இறுதியான அங்கம் ஒரு கதாகாலட்சேபம்... ஏனோ இது சோபிக்கவில்லை. வானவில் நிகழ்சிகளுக்கு ஒரு திருஷ்டி பரிகாரம். கதை சொன்னவர்கள் , பின்னணி இசை, பாடல்பாடியோர் எவரிலுமே எந்தக்குறையும்தென்படவில்லை. பிறகு. .. ஆமாம் இசை, நடிப்பு, இயக்கம் எல்லாமிருந்தும் தேர்வு செய்த கதை சறுக்கிவிட்டது. நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தபோதே அரங்கத்தில் அரைவாசி காலியாகிவிட்டது எனவே புத்திசாலித்தனமாக இடையில் மங்களம் பாடவேண்டிய நிலை.

கடந்த நான்கு வருடங்களாக (முதலாவதுதவிர) வானவில் 'நிகழ்ச்சி' யை பார்த்து வருபவர்களில் நானும் ஒருவன். வருடாவருடம் அதன் மெருகு அதிகரித்தே வருகிறது. மேலே நான் குறிப்பிட்டவை எனது சுயமான பார்வை... விமர்சனம் என்பது காழ்ப்புணர்ச்சியுடன் அமைவதும் தவறு. அதேசமயம் தனிநபர் புராணங்களும் தேவையற்றவை. ஒரு நிகழ்ச்சியை வெற்றிகரமாக நடத்திமுடிப்பதிலுள்ள சிரமங்களை நானறிவேன் எனினும் நான் குறிப்பிட்டவைகளில் சில அடுத்த நிகழ்ச்சியை மேலும் மெருகு படுத்துமாயின் அதுவே போதுமானது. பிற்குறிப்பு: அமைப்பாளர்களுக்கு ஒரு வேண்டுகோள் தயவு செய்து அடுத்த தடவையாவது இங்குள்ள அனைத்துத் தொடர்புச் சாதனங்களுக்கும் அழைப்பிதழ் அனுப்புவீர்களா? ஏனெனில் விமர்சனங்கள் நிச்சயம் உங்கள் நிகழ்ச்சியை வளம்படுத்தும்.


## சிவாஸ் ரேடிங் கோ
## மாபெரும் மலிவு விற்பனை

| | |
|---|---|
| சம்பா அரிசி 5 கிலோ | 4.99 |
| பஸ்மதி அரிசி (பரட் பிராண்ட்) 5 கிலோ | 7.99 |
| பஸ்மதி அரிசி 20 கி | 28.99 |
| மரக்கறி எண்ணெய் 3ட | 2.99 |
| மாங்காய் கோடியல் | 1.59 |
| மிஸ்டர் குடாஸ் பார்பொயில்ட் அரிசி 10கிலோ | 4.99 |
| மிஸ்டர் குடாஸ் All purpose மாவு 10 கிலோ | 4.99 |
| கோழிக்கால் ரூத் | .69 |
| (பத்து ரூபாவுக்கு மேல் பொருட்கள் வாங்குபவர்களுக்கு) உடன் கோழி (ஒருவருக்கு ஐந்து மட்டும்) | 1.99 |
| ஆட்டுக்கால் ரூத் | 1.99 |
| வறுத்த மிளகாய்த் தூள் 900 கி | 4.99 |
| எல்லா இலங்கை சவர்க்கார வகைகளும் | 48 சதம் |
| முட்டை (Tray of 30) (ஒருவருக்கு இரண்டு மட்டும்) | .99 சதம் |
| **Fresh frozen King Fish** | **2.99Lb** |

மேலதிக விபரங்களுக்கு பின் அட்டையைப்பார்க்க..

# அறுவடை

## ஓரங்க நாடகம்

## சின்னத்தம்பி வேலாயுதம்

*(பயங்கரமான ஹெலி இரைச்சல்களும் பொம்பர் இரைச்சல்களும் அந்தப் பிரதேசத்தையே அதிர வைக்கிறது. அரை மணித்தியாலத்துக்கு மேல் வான்நோக்கிய இரைச்சல்களின் மத்தியில் அங்கு வதியும் மக்கள் உயிர் காப்பதற்காக பங்கர்களுக்குள் ஓடும் அமளி துமளி... பின் அழுகுரல்கள் எல்லாம் ஓய்ந்து பயங்கர நிசப்தம்)*

காட்சி

இருவர் படுகாயமுற்று இரத்தம் கொட்ட மயக்கமுற்ற ஒரு நடுத்தர இளைஞனை தங்கள் தோள்களைச் சுற்றிப் போட்ட கைகளுடன் மேடைக்கு கொண்டு வந்து வளர்த்துகிறார்கள்.

ஒருவர்: ஆளைப்பார்த்தால் ஊருக்குப் புதிசு போலை கிடக்கு நாளெண்டால் முன் பின் ஒரு காலமும் காணேல்லை.

மற்றவர்: எனக்கும் அப்படித்தான் உயிர் போகயில்லை போல கிடக்கு இப்ப என்ன செய்யிறது?

*(பொம்பரும் ஹெலிகளும் தொலைதூரம் சென்று இரைச்சல் ஓய்ந்ததை உறுதிப் படுத்திய கிராமவாசிகள் ஒவ்வொருவராக தெருவுக்கு வருகிறார்கள். சேதங்களை பார்ப்பதற்கும் புதினம் கதைப்பதற்கும்...*

ஒரு முதாட்டி: ஐயோ தம்பிமாரே ஆருவன்? உயிர் இருக்குதோ, போட்டுதோ பாழ்பட்ட கடவுள் இளசுகளாய் பார்த்து கொண்டு போகுது. ஆர் பெத்த பிள்ளையோ?

முதாட்டி 2: இது முளையில்லாத பிள்ளையாய் கிடக்கு எல்லாம் ஒடித்தப்பி விட்டுதுகள் பங்கர் வழிய போட்டுதுகள். இது ஏன் அம்பிட்டுது தெரியாது.

முதாட்டி 1: தம்பிமாரே எங்க கிடந்து இதை கொண்டு வந்தியள்?

முதலாமவன்: முகத்தாற்றை வளவு பின்பக்கமாக நாங்கள் ஓடையிக்கை ஷெல் விழுந்தது ஐயோ எண்டு கேட்டது. திரும்பி வந்து பார்க்க இவன் கிடக்கின்றான்.

முதாட்டி 1: பாழ்பட்ட அரசாங்கம் கண்கெட்ட பட்டாளம். கொஞ்சநாள் சாப்பாடு தராமல் வாட்டினாங்கள் திரும்பவும் திடீரெண்டு இண்டைக்கு அடிக்க தொடங்கி விட்டாங்கள். எத்தனை தொலைஞ்சுதோ? இனி நேரம் செல்ல செல்ல தானே தெரியும்.

*கிராமவாசிகள் வருகிறார்கள்*

ஒரு இளம்பெண்: ஆ.......... பாவம் கொழுந்து மடிஞ்சு கிடக்கிற வடிவைப் பார்! ஆரிது இப்படி ஒண்டா இரண்டா எத்தனை ஆயிரத்தை கொலை பண்ணி தொலைச்சாங்களே! நாங்கள் ஆரிட்டை போய் முறையிடுறது.

*(இன்னொரு இளம்பெண் தன் கணவன் இதே போல் இறந்ததை நினைத்து ஒப்பாரி வைக்கிறாள். ஒரு பெண் ஆறுதல் சொல்லி அடக்கி வைக்கிறார்)*

*இப்போது காயமுற்றவரை சுற்றி பலர் கூடி விட்டார்கள்.*

நபர் 1: இப்படியே குண்டு போட்டு போட்டு எல்லாத் தமிழரையும் கொண்டு குவிக்கப் போறாங்கள் அவங்களுக்கு தமிழன் செத்தால் கவலையில்லை. ஏதோ சிங்களவன் மட்டுந்தான் இந்த நாட்டின்ரை பூர்வீக குடியெண்டு நினைக்கிறானுகள்.

நபர் 2: வீடிழந்து வாசல் இழந்து பொருள் இழந்து உயிரிழந்து இப்படி எத்தனை நாளைக்கு வாழுறது. சிங்களவனட்டை நாட்டை உயில எழுதிக் குடுத்திட்டு நாங்கள் எல்லாம் எங்கேயாவது போய் வாழவேண்டியது தான்.

நபர் 3: எல்லாரும் கொஞ்சம் பொறுங்கோ பொடியனிலை உயிர் இருக்கு. சாடையாய் கண்ணசைச்சவன்

*(எல்லோரும் ஒரு தடவை குனிந்து ஆவலுடன் காயப்பட்டவனை பார்க்கிறார்கள்)*

நபர் 1: உயிர் இருக்கு நாடி துடிக்குது (கையைப் பிடித்து பார்க்கிறார்) ஏ பாரப்பா கொஞ்சம் தண்ணி ஒரு செம்பிலை கொண்டுவா

*(ஒருவர் தண்ணீர் எடுத்துவர ஓடுகிறார்)*

நபர் 2. உயிர் இருந்தாலும் எங்கை ஆஸ்பத்திரி கிடக்கு? எங்கை மருந்து கிடக்கு ஆளைக்கொண்டு போறதுக்கு, இனி வாகனத்துக்கு எங்கே போக. மண்ணெண்ணைக்கு எங்கே போக.

*(அப்போது தண்ணீர் தெளிக்க மயக்கம் தெளிகிறார்)*

*நபர் 1: ஆர் தம்பி நீ? ஊருக்கு புதிசாய் கிடக்கு இங்கே ஏன் வந்தனீ*

(மயக்கம் தெளிந்ததும் தன்னைச் சுற்றி நிற்கும் கிராம மக்களை பார்க்கிறார். அழுகிறார்)

நபர் 1 தம்பி நீ யாரப்பு? என்ன நடந்தது சொல்லு தம்பி

(மீண்டும் அழுதபடி விழிக்கிறார்)

நபர் 2: தம்பி கதை தம்பி, எந்த ஊர் எண்டாவது சொல்லு அந்த பக்கமாய் உள்ள வைத்தியரிட்டை கொண்டு போறம்.

காயப்பட்டவன்: அனே! மம தன்னே நே மொக்கத உனே கியல, ஹிடபுகமங் ஹெலி ஆவா ஷெல் கெவ்வா

(ஐயோ எனக்கு தெரியாது என்ன நடந்ததெண்டு இருந்தாப்போலை ஹெலி வந்தது ஷெல் அடிச்சது)

*(எல்லோரும் வாயைப் பிழந்து உரத்த குரலில் அடே! சிங்களவனடா கொல்லுங் கோடா உவனை என்று உரக்க கத்துகிறார்கள்)*

முதியவர்: டேய் டேய் பொறுங்கோடா கொஞ்சம் என்ன விடயமெண்டு கேட்பம். முதலிலை உவன் பார்த்திபனை கூட்டி வாருங்கோடா அவன் சிங்களம் நல்லா கதைப்பான். அதுவரையும் மனிசர் மாதிரி நில்லுங்கோடா இவ்வளவு நேரமும் என்னடா பேசினீங்கள்?

(ஒருவர் ஒடிச் சென்று பார்த்திபனை கூட்டிவர செல்கிறார்)

நபர் 1: நிச்சயமாய் உவன் உளவு பார்க்கத்தான் வந்திருப்பான். பார்த்திபன் வந்து கதைக்க முந்தி கொல்லுவமடா

நபர் 2: சிங்களச் சாதியெண்டாலே கண்ணிலை காட்டேலாது. இண்டைக்கு உவர் சரி.

நபர்: அடே கதைச்சுக் கொண்டு நிற்கிறதை விட்டு எடுத்து வாடா கத்தியை

முதியவர்: டேய் பொறுங்கடா மடப்பசங்கள்! அவன் ஏன் வந்தான் எதுக்கு வந்தான் எண்டு கேட்டு......

நபர் 1 கிழவர் உன்னேயும் அவனுடை சேர்ந்து தொலேப்பம்! இரக்கம் பார்க்கிருராம் இரக்கம். உந்த சிங்களவனுலே தானே எங்களாலே நிம்மதியாய் வாழ வழியில்லே. இந்த நாட்டிலே இருக்கிற முழு சிங்களவனேயும் வெட்டித் தொலேச்சால் நாங்கள், எங்கடை அரசு எண்டு நிம்மதியாய் வாழலாம்.

(இப்போ பார்த்திபன் வருகிருர் பார்த்திபன் காயமுற்றவருடன் சிங்களத்தில் உரையாடிய பகுதி தமிழில் தரப்படுகிறது)

பார்த்திபன்: உன் பேர் ஊர் என்ன?

காயமடைந்தவர்: நான் பியதாச. ஊர் அம்பலாங்கொடை

பார்த்திபன் இங்கே ஏன் வந்தனி உளவு பார்க்கத் தானே?

பியதாச: ஐயோ பாவக் கதை கதைக்காதீங்க! என்ரை அண்ணன்மார் இரண்டுபேர், தங்கச்சி எல்லோரையும் கறுத்தபூனேப் படை என்ற அரசாங்கப்படை சேகுவரா என்று சொல்லி கொலே பண்ணி ரயர் போட்டு கொழுத்திப் போட்டாங்கள். என்னே எங்கேயாவது ஒடித் தப்பு என்று அப்பா அனுப்பி விட்டார்.

ஒருவர்: அதுக்கு இங்கே வந்திருக்கிருன் பாவி ஒளிக்கத் தெரியாதவன் உடையார் வீட்டுக் கோடிக்கை ஒளிச்சானும்.

முதியவர்: ஏய் குழப்பாதை அவன் சொல்லட்டும்.

பியதாச: ஐயா உங்களே என்ரை பெத்த தகப்பன் மாதிரி நினேக்கிறன். நீங்கள் எல்லாம் நம்ப கூட்டாளியள். என்னே கொன்று போடாதையுங்கோ

நபர்: டேய் உவன் சொல்லுறதை நம்பாதையுங்கோடா. உப்பிடி எத்தனே புருடா விட்டு வருவங்கள் எடுத்து வாடா கோடாலியை

முதியவர் டேய் டேய் முதலிலே மனிசனே மனிசனுய் பாருங்கோடா அவன் சொல்லுறதிலே உண்மையிருக்கு அங்கை சிங்கள பகுதியளிலே வறியதுகளின்ரை. பிள்ளேயெல்லாம் சேகுவோரா எண்டு சிங்களவனே சிங்களவனே வெட்டி, சுட்டு, ரயர் போட்டு கொழுத்துருங்களாம்.

நபர் 1: அது அவங்கட பிரச்சனே! டேய் வாருங்கோடா இவனே உயிரோட கொழுத்துவம்

பியதாச ஐயையோ என்னே ஒண்ணும் பண்ணி விடாதீங்க நான் சொல்லுறது சத்தியம்

நபர் 1 அப்ப ஏனடா உங்கடை ஆட்கள் எங்களே கொல்லுகினம்?

பியதாச ஐயா இது எல்லாம் அரசாங்கத்தின்ரை வேலே உங்களேயும் கொல்லுறது எங்களேயும் கொல்லுறது. ஆரு அரசியல்வாதியளும் பணமும் மட்டும் சேர்ந்திடுது பணத்துக்கு சிங்கள சாதி தமிழ் சாதி இல்லே.

நபர்: உன்னே நம்பி போக விடலாமா?

பியதாச: ஐயா என்னே போக விடவேண்டாம் நான் போகவும் மாட்டேன். அங்கே போனுல் கொலே பண்ணுவாங்கள்.

முதியவர்: இவனே அனுப்பினுலும் பிரச்சனே வைச்சிருந்தாலும் பிரச்சனே. இது பெரிய பிரச்சனே.

பியதாச: ஐயா நானும் உங்களோட சேர்ந்து இந்த அரசின்ரை அட்டூழியங்களுக்கெதிராகப் போராடப் போறன்.

முதியவர் பியதாச நாங்கள் போராடுறது எங்களுக்கெண்டு ஒரு நாடு வேணுமெண்டு.......

பியதாச பெரியவரே, காணியைப் பிரிச்சாப்போலே மட்டும் நெருஞ்சி முள்ளு அழிஞ்சு விடாது. பாகப்பிரிவினே செய்த எந்த சகோதரம் வாழ்க்கையிலே ஒண்ணு இருந்தது. தண்ணிப் பங்கு வைச்சு எழுதின காணி மாதிரி மகாவலிகங்கைக்கும் பங்கு வைச்சு எழுதோணும். காவிரி நீரை மறிச்ச கர்நாடகம் மாதிரி காலம்முழுதும் கசப்போடு.....

முதியவர் நீ சொல்லுறதிலே நியாயம் இருக்குத்தான் ஆனுல் பாகப்பிரிவினே பண்ணுறதாய் அறிவிச்சுப் போட்டு இனி எப்படி......

பியதாச ஐயா முதல்லே ஒண்ணு பண்ணுவம், காணிக்கு எல்லே வைக்காம முனு வீடு போடுவம். அல்லாப்பிச்சைக்கும் சேர்ந்து உங்கடை கொட்டக்கிழங்கையும், எங்கடை தேயிலேயையும் பங்கிட்டே சாப்பிடுவதும் எல்லேகளிலே உடன்பாடு இருந்தால் பிரிப்பதை பற்றி யோசிப்பம். ஆனுல் இந்த அரசுக்கெதிரா நாம சேர்ந்தா என்னேப் பிடிக்க வாற பொலிசுக்கு ஒழிக்க உங்க வீட்டுக்குதானே நான் ஒடி வந்தன். இரண்டு பக்கமும் நெருப்பெண்டால் நாங்கள் கடல்லேயா குதிக்கப் போறம். நெருப்புக்கு எதிராக நாங்கள் இணேந்து...

முதியவர் : தம்பி பிரச்சனே நல்லா விளங்குது. ஆனுல் முடிவெடுக்கிறது இப்ப எங்கடை கையிலே இல்லே.

(இப்போது மக்கள் நாலாபக்கமும் சிதறி ஒடுகிருர்கள் மறைந்து கொள்வதற்கு "பொடியள் வாருங்கள்" என்ற சத்தம் ஒரு தடவை உரத்துக் கேட்டது)

முதியவர்: பியதாச நான் உன்னே விட்டு ஒட மாட்டேன். எனக்கு இழப்பதற்கு எதுவுமில்லே. கருத்துக்கள் நல்லதானுல் அது தான் உண்மையாக என்ரோ ஒரு நாள் வெல்லுப் படுவது தான் யுத்தம் வெல்வது அதுவல்ல!

# எதிரொலி

தாயகம் பத்திரிகையை ஒரு கிழமை பார்க்காதது பல நாட்கள் பெற்ற தாயை பார்க்காத ஒரு வித பிரேமை என்னே வாட்டியது. பல பத்திரிகை பார்ப்பதிலும் ஒரு பத்திரிகை பார்த்தால் போதும். ஒரு கிழமை தாயகம் வெளிவராதது பல கருத்துக்கள் வெளிவந்தன. சிலர் "அவர்களும் ஈழதமிழர்கள்தானே அவர்களுக்குள்ளும் அடிபாடாம் சில சமயம் இனி பத்திரிகை வெளிவராது" வேறு சிலர் தமது பெரியதாக்கத்தை மறைப்பதற்காக தமது உருவத்தையே கொளுக்கட்டையை மோதகமாக உள் உடன் ஒன்று வெளி உருவத்தை மாற்றுகிருர்கள் என்று இப்படி பத்திரிகையை தேடி திரிந்த சமயம் அறிந்தவை மற்றைய வார இதழ்கள் எமது சேவை எல்லாம் மக்கள் சேவையே என்று லாபத்தையும் வியாபாரத்தையும் கூட்டி இணே வெளியீடு எல்லாம் வெளியிடும் சமயம் ஐந்து வயது பராயத்தில் சஞ்சிகையாக்கியது வரவேற்கத்தக்கதல்ல. தாயகத்தில் தான் பார்த்தேன் பொதிகை அமிழ்ந்துவிட்டதாய். தாயகமும் ரோஜா சம கால சஞ்சியையாக வெளிவரதொடங்கியுள்ளன! தொடர்ந்து மலர வேண்டும் என்பது ஆசை. உலகமொழியாம் ஆங்கிலத்திற்கு சஞ்சிகையில் முதலிடம் வழங்கியது சிறப்பு செயலாகும். பலரும் தாயகத்தை வாங்கியவுடன் முதற் பக்கத்தையும் கடைசிப்பக்க அறுசுவையையும் தான் முதல் வாசிப்பதை அவதானிக்க முடிகிறது

காங்கேயசர்மா, மொன்றியல்



# ஒரு ஆன்மா அழுகிறது

**பவான்**

சுருக்கங்களால் சூழப்பட்ட அந்தப் பெரியவரின் முகம் படலையில் ஒலிக்கும் மணியோசை கேட்டு பிரகாசமாகிறது. தேத்தண்ணி குடிப்பதற்காக அடுப்படி அருகில் உட்கார்ந்திருந்தவரை அவர் மனைவி கலங்கிய கண்களில் நம்பிக்கையுடன் நிமிர்ந்து பார்க்கிறார். அவர் முகத்தில் தெரிந்த நம்பிக்கைக் குறிக்கு காரணம் சைக்கிள் மணியின் ஓசை, கலங்கிய அந்தக் கண்கள் புகைக்கும் ஈர விறகின் அவஸ்தை. இவர்களிற்கும் இந்த மணியோசைக்கும் உள்ள தொடர்பு வயிற்றுக்கும் பசிக்குமான உறவு. கடைக்கார முதலாளி கடையில் வேலைசெய்யும் பையனை கடனை வசூல் செய்வதற்காக அனுப்பியிருக்கலாம், வீட்டு வளவில் வெட்டித்திருப்பும் பொழுது ஹீரோவை ஹொண்டா என்ற பாவனையில் ஒட்டிச் செல்பவர்கள் மோதிக்கொள்ளாமல் இருக்க அடித்திருக்கலாம், அல்லது பக்கத்து வீட்டுச் சின்னப்பொட்டயளின்ர முகத்தைப் பார்க்கிறதுக்காக ரேட்டால போற பொடியளும், அதுக்காகவே அந்தப் பக்கம் சைக்கிள் மிதிச்சு வந்து போற பள்ளிக்கூடப் பொடியளாக் கூட இருக்கலாம். இவைகளால் எல்லாம் இந்தப் பெரியவர் ஏமாற்றப்படுவதில்லை. அவர் படலைக்கு வந்தால் அது தபால்காரனாய்த்தான் இருக்கும். கிழவர் சால்வையை உதறித் தோளில் போட்டுக்கொண்டு படியிறங்கி படலைக்கு நடையாய் ஓடினார். அவர் படியிறங்குமுன் ஜன்னலுக்கு வந்த அவர் மனைவியே கடிதக்காறனையும் அவன் கையிலுள்ள கட்டுக்களையும் முதலில் கண்டு கொண்டவர். கடிதத்தை கையில் வாங்கியவர் நன்றியுணர்வை தன் பொக்கைவாயில் ஒரு புன்னகையில் தெரிவித்துவிட்டு, தபால் உறையை மேலும் கீழும் பார்த்த வண்ணம் கல்லிடறிச் சால்வை நிலம் விழுந்து பின்னுதறி மனைவியிடம் சேர்ந்தார். ஈரவிறகு தானாக எரிந்து கொண்டிருந்தது. கொதித்த நீர் சத்தம் செய்தது. வேகமாக அடுப்பிலிருந்த கேத்திலை இறக்கி வைத்துவிட்டு அருகில் வந்த மனைவி உட்காரும் வரையில் உறையைப் பார்த்துக் கொண்டிருந்தாரவர். எதுவாக இருந்தாலும் மனைவியை அருகில் இருத்தி பங்கு போட்டுக்கொள்ள வேண்டும் அவருக்கு. மனைவி சாப்பிட உட்காரும் வரை சாப்பாட்டில் கைவைக்கமாட்டார். காலையில் மனைவி எழுந்த சந்தடியில் தானும் எழுந்து கொள்வார். ஒன்றாக தேனீர் பருகி, ஒன்றாக உணவுண்டு ஒன்றாக உறங்கி விழிக்கும் உனக்கு நான் எனக்கு நீ என்ற சகாப்த கால பந்தம் மாலை நேரங்களில் பஞ்சியாக இருக்கிறது என்று பாயை விரித்து சரிவதானாலும் இங்கவா இதில இரு என்று அருகில் இருத்தி விட்டு உறங்கிப் போவார். இப்படிக் கணவன் மனைவிகள் எங்காவது ஒன்றிரண்டுதான்......

கடிதத்தைப் பிரித்தவர் நம்பிக்கை, வீண் போகவில்லை, உள்ளே காபன் பேப்பரில் சுற்றி நூறு டொலர்கள் பணம் இருந்தது. மகிழ்ச்சியுடன் அதை கையில் வேண்டிக்கொண்ட மனைவி ஒருமுறை மேலும் கீழும் பார்த்துவிட்டு திரும்பக் கொடுக்க, பத்திரமாக உறையில் வைத்துவிட்டு கடிதத்தை மனைவிக்கும் தனக்குமாக உரத்து வாசிக்கிறார்.. அன்புள்ள தாத்தா அம்மம்மா, சுகமாய் இருக்கிறீர்களா, கவலைப்படாதீர்கள், உடம்பைக் கவனியுங்கள். வருகிற காசை மாற்றி நல்ல சாப்பாடுகள் செய்து சாப்பிடுங்கள் நான் மாத மாதம் காசனுப்பி வைக்கிறேன்..........அவர் கண்கள் பனிக்கின்றன. அவர் உதிரத்தில் விளைந்த ஒன்று கூட அவர் கடைசிக்காலத்தில் தன்னும் அவர் கண்கள் பனிக்க காரணமாய் இருந்ததில்லை. அவற்றில் ஒன்றின் வயிற்றில் வந்தது அவற்றிற்கு பொதுவாய் அவரின் கடனை அடைக்கிறது.......

அவர் சிங்களப் பிரதேசத்தில் சிறியதாய் கடையொன்று வைத்திருந்தார். அந்தப்பிரதேசத்தில் அவர் யாழ்ப்பாண முதலாளி இந்து மாகடலின் அலையின் நுரையும் கடலின் காற்றும் தென்னை கமுகென பசுமையாய் குளிர்மையாய் உயிருள்ள அந்தப் பிரதேசத்தின் மையப்புள்ளிகளில் ஒன்றில், அந்தச் சிறு கடை பகலில் வியாபாரத்தலம் இரவில வாஸஸ்த்தலமாக, தானுண்டு தன் மனைவியுண்டென சுகஜீவனமாக கரைந்து கொண்டிருந்தது. அவர் வாழ்நாள் பந்தமென்று சொல்லி ஒரு சகோதரியும் பிள்ளைகளும் ஊரில் இருந்தனர். அவருக்கு பிறந்தவைகள் தாமாகவே துணைகளைத் தேடிக்கொண்டு தம்பாட்டில் போயிருந்தன. ஆணாகப் பிறந்த ஒன்று மாத்திரம் பணம் தேவைப்படும் போது வந்து போய்க் கொண்டோ, கடிதம் போட்டுக் கொண்டோ இருக்கும். சலிக்காமல் கொடுத்துக் கொண்டிருந்தார் பின்னுக்கு உதவும் என்ற நம்பிக்கை முழுதாக அவருக்கு இருக்கவில்லை ஆனால் அதையிட்டு அவர் அப்போது கவலைப்படவில்லை.. படித்து நல்ல நிலைக்கு வரவேண்டுமென்பதே அவர்

சிறு எதிர்பார்ப்பு ஒரு உதவியை மாத்திரம் எதிர்பார்த்தார். தன் சகோதரிகளின் பெண்களில் ஒன்றுக்கு வாழ்வு கொடுக்க வேண்டுமென்பதே அது பணம் நின்றுவிடுமோ என்ற பயத்தில் ஒமென்றவன் பின் அவர் வற்புறுத்தலினால் மணம் செய்துகொள்ள வேண்டியதாயிற்று.

ஒரு விசயத்தை அவர் மறந்து போனார் தன் எதிர்காலத்துக்காக ஏதாவது சேர்த்து வைக்க வேண்டுமென்பதை அவர் எண்ணியிருந்தது வேறாக இருந்தது. அந்தச் சிங்களப் பிரதேசத்திலேயே காலம்பூரா உழைச்சு சீவிச்சுப்போட்டு அப்பிடியே உசிர விட்டிரலாம் என்ற எண்ணம் அவர் அடிமனதில் இருந்தது. எண்பத்து மூன்றில் எல்லோரும் அடித்துத் துரத்தப்பட்ட போதும் அவர்களுக்கு இவர் மீதிருந்த அனுதாபத்தால் கடையுடன் காப்பாற்றப்பட்டார். ஐம்பத்தேழிலிருந்து எண்பத்து மூன்று வரை தாக்குப்பிடித்தவருக்கு எண்பத்தஞ்சில் முடியாமல் போயிற்று. நண்பர்கள் கையை விரித்தனர். கடைக்கு நெருப்பு வைக்கப்பட்டது. புகையிரதம் ஏறிவிட்டார் தப்பிய உயிருடனும் ஒரு கையில் மனைவியும் உடுத்த உடுப்புமாக ஊர் வந்து சேர்ந்த பொழுது எல்லாவற்றையும் இழந்து விட்டது போல தோன்றியது அவருக்கு. சகாப்தங்களாக வாழ்ந்தவர் பிடுங்கி எறியப்பட்டிருந்தார். எல்லோருடைய அனுதாபங்களும் சில நாட்களில் அடங்கிப்போயின. உயிர்தப்பி வந்ததே பெரிய விடயமென்று ஆறுதல் கூறியவர்கள் தம்பாட்டிற்கு சென்று விட்டார்கள் கையில் சேர்த்து வைத்திருந்த பணம் சில நாட்களிலேயே கரைந்து போனது. வங்கியில் மனைவியின் பெயரில் போட்டிருந்த ஒரு சிறு தொகைப் பணத்தில் கை வைக்க அவர் மனம் ஒப்பவில்லை. தான் இல்லாத காலத்தில் தன் மனைவி ஆதரவில்லாமல் சீரழிந்துவிடக்கூடாது என்பதற்காக அந்தப் பணத்தை மனைவி பேரில் வைப்புச்செய்திருந்தார். சில நாட்களில் மதிப்புக்குறைந்தது அப்புறம் மரியாதை குறைந்தது ஈற்றில் எல்லாமே குறைந்தது போயின. எங்களிடம் இல்லை என்றது ஒன்று. இருக்கயிக்க எங்களுக்கு என்ன தந்தனியென்றது ஒன்று. இன்னொன்றோ மீதமுள்ள ஒரு சொட்டு நிலத்தை தன் பெயருக்கு எழுதித்தந்தால் பார்ப்பதாக கதைவிட்டது எல்லாவற்றிற்கும் மேலாக யாருக்கு உழைத்துழைத்துக் கொடுத்தாரோ அது சிறிதளவு நன்றியும் காட்டாது அடிக்கடி குரைக்க ஆரம்பித்தது. தன் பிள்ளை இல்லாவிட்டாலும் அதுக்கு வந்து வாய்ப்பது தன் சொந்தமாக இருந்தால் தனக்குதவுமென்ற அவர் எண்ணமும் பொய்யானது. வீட்டிலிருந்து அப்புறப்படுத்தப்படும் அளவுக்கு அவர் எதையும் வளர்த்து விட விடவில்லை. தானே அப்புறமானார். ஒரு நம்பிக்கையில் மனைவியின் பெயரில் வங்கியிலிருந்த பணத்தை கையில் எடுத்தார். சிறுபலசரக்கு கடையொன்று ஆரம்பித்தார். ஏற்கனவே அங்கு தத்தமது வாடிக்கையாளர்களை கொண்ட கடைகள் சில இருந்ததால் கடனுக்காக வருகின்ற ஒரு சிலர்தான் அவரிடம் வந்தார்கள். அந்தக் கொழுத்த கடைகளுடன் போட்டியிடும் திறன் அந்த வயோதிபருக்கின்மையால் அவரால் வெற்றி பெற முடியவில்லை. எஞ்சியிருந்த பொருட்கள் அவர் இரத்த உறவுகள் காக்காய்க் கூட்டத்தால கடனாக என்று சொல்லி கொத்திச் செல்லப்பட்டன. எல்லாமே இழந்து கெட்டு கடசித்தறுவாயில் நின்றவரை பசியும் பட்டினியும் துரத்த ஆரம்பித்தன அயலவர்கள் கேட்டதற்கு, அவர் உறவுகள், அவர் மட்டுமென்றால் பார்க்கலாம் அவோவையும் சேர்த்து எங்களால பார்க்க ஏலாது என்று கையை விரித்தன. பலருக்கு பல கடிதங்கள் எழுதினார், ஒரு சிலரிடமிருந்து பதில் வந்தது. உதவி கேட்டு எழுதியதில் அவற்றில் சில நின்று போயின. ஒரே ஒருத்தி அவர் பேத்தி என்று சொல்லிக்கொண்டவள் கடிதம் போட்டாள், பணமனுப்பினாள். இத்தனைக்கும் அவள் சின்னவளாக இருந்தபோது அவர் ஒரு மிட்டாய் கூட வாங்கிக் கொடுத்ததில்லை. அவர் மனதில் அவள் மிகவுயர்ந்து போனாள். அவளுக்கு கடிதம் எழுத அவருக்கு நாட்கள் எடுக்கும். தன் நன்றியை வார்த்தைகளில் எழுத மிகவும் சிரமப்பட்டார். அவளை குறைவிலாது நன்றாக வை என ஆண்டவனை பிரார்த்திப்பார்.... என்றைக்கும் போல் தொடர்ந்து வந்த நாளொன்றில் அவளிடமிருந்து வந்து ஐம்பது டொலர்கள் தாள் ஒன்றை மாற்றி வருவதற்காக எடுத்துக்கொண்டு சென்றவர் இடையில் நெஞ்சு வலித்ததால் வைத்தியசாலையை நோக்கி நடந்தார். நோயாளர் அறைப் படுக்கையிலிருந்து பிரேத அறைக்கு எடுத்துச்செல்லப்படுவதற்கு முன்பாக தன்னிடமிருந்த பணத்தை மாற்றித்தன் மனைவியிடம் சேர்க்கும்படி வேண்டிக்கொண்டிருந்தார். அவர் வார்த்தைகள் அடங்கிப் போன பொழுது அவர் மனம் மாத்திரம் அழுதுகொண்டிருந்தது அவளைத் தனித்துவிட்டுப் போகிறேனே என்று அந்த ஆத்மா சலனமில்லாமல் வாழ்ந்து சலனமில்லாமல் அழுது சலனமின்றிப் போகிறது நிச்சயமாக திரும்பி வருவதற்காக அல்ல.

# காலத்தின் இலக்கியக் கலந்துரையாடல்!

*பிரதம அதிதியாக தமிழ் நாட்டில் இருந்து வருகை தரும் சுந்தர ராம சாமி அவர்கள் கலந்து கொள்ளும் இலக்கியக் கலந்துரையாடல் "காலம்" சார்பாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் நிகழ்வின் இணை அம்சமாக என், கே, மகாலிங்கம் அவர்களின் "உள்ளொலி" கவிதைத் தொகுப்பும் வெளியிடப்பட உள்ளது. இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

***காலம்;11-08-93***

*இடம்- 100 ST. GEORGE ST.(ST.GEORGE SUBWAY)*
*(UNIVERSITY OF TORONTO, SIDNEY SMITH HALL)*

காலம் சார்பாக
செல்வம்
குமார்மூர்த்தி

# ஊழல் விசாரணை ஆணைக் குழு பற்றி அரசாங்கம் பீதியடைகிறது!

**ராவய ஆசிரியர் விக்டர் அய்வன்**

**தமிழாக்கம் செ. லோகநாதன்**

**(ராவய ஆகஸ்ட் 22,1993)**

இலஞ்சமும் ஊழலும் சமூக வாழ்க்கையின் சகல அம்சங்களிலும் புரையோடியுள்ள பயங்கரமான புற்று நோயாக மாறியுள்ளது என்பது மிகவும் தெளிவான விடயமாகும். இவ்வாறான நிலைமையின் கீழ் இவற்றை ஏதோ ஒரு வகையில் கட்டுப்படுத்துவதற்கு. இலஞ்சம் ஊழல்களை கண்டுபிடிக்கக் கூடிய நிரந்தர ஆணைக்குழு ஒன்று அவசியம் என எண்ணிய திரு.லலித் அத்துலத் முதலி தனது இக்கருத்தை தன்னால் நிர்மாணிக்கப்பட்ட கட்சியின் கொள்கைப் பிரகடனத்திலும் சேர்த்துக் கொண்டார்.

இதே கருத்தையே பாராளுமன்ற உறுப்பினர் திரு நிமல் சிறிபால டி சில்வா அவர்களும் தனி நபர் பிரேரணையாக பாராளுமன்றத்துக்கு கொண்டு வந்தார். ஆனால் அவ்வாறான ஆணைக்குழுவொன்றுக்கு இடமளிப்பதற்கு ஆளும் கட்சியினர் விருப்பப் படாததால் ஆளும் கட்சியினர் தமது பெரும்பான்மையைப் பாவித்து அப்பிரேரணையைத் தோற்கடித்தனர். அவ்வாறான பிரேரணை ஒன்றுக்கு தடையை ஏற்படுத்தும் கொள்கையை தாம் கடைப்பிடிப்பது தமது கௌரவத்துக்கு உகந்ததாக அமையாத போதிலும் இலஞ்சம் ஊழல்களை கண்டு பிடிப்பதற்காக நியமிக்கப்படும் ஆணைக்குழு முன்னால் தாம் பிரபல்யமான குற்றவாளிகளாவதை தடுக்க வேண்டுமாயின் அப்பிரேரணைக்கு எதிராக இருப்பதைத் தவிர ஆதரவு அளிக்கும் ஆற்றல் ஆளும் கட்சிக்குக் கிடையாது என்பதும் தெளிவான உண்மையாகும்.

இலஞ்சமும் ஊழலும் பெரும் சமுதாய ஒட்டமாக மாறியுள்ளதோடு ஆட்சியாளரே இவ் ஒட்டத்தில் முன்பயணிகளாகியுள்ள நிலைமையின் கீழ் இலஞ்சமும் ஊழலும் எவ்விதத்திலும் கட்டுப்படுத்த முடியாத ஒன்றாக உருப்பெற்றுள்ளது. ஆளும் கட்சியினர் மிகுந்த ஊழல்களை நோக்கிச் சென்றதற்கு பிரதான பொறுப்பாளி முன்னாள் ஜனாதிபதி திரு ஜே. ஆர் ஜெயவர்தன அவர்களே என நான் எண்ணுகிறேன். நாட்டின் பொது முன்னேற்றத்திற்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றும் தன்னைப் போன்றவர்களுக்கு அவசியமேற்படின் தவறுகள் கூட இழைக்கும் உரிமை உண்டு என்னும் விசேட மனோபாவம் திரு ஜே. ஆர்.ஜெயவர்தனவிடம் இருந்தது என்பதையும் இக்கருத்தே ஆளும் கட்சிக்குள் படிப்படியாக ஸ்தாபனமயப் பட்ட கருத்தாக மாறியது என்பதையும் காண முடிகிறது. ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்தனவுக்கு அரசியல் அதிகாரம் தான் முக்கியமாகப்பட்டதே தவிர அவ் அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி பணம் சம்பாதிக்கவேண்டும் என்னும் விசேடமான பேராசை அவரிடம் இருந்ததை காண முடியவில்லை. ஆனால் தானும் ஓரளவு தூரம் தவறு இழைக்கும் அதேவேளையில் தனக்கு ஆதரவாக செயல்படும் காலம்வரை மற்றவர்களும் அவசியமான அளவு தவறு இழைப்பதற்கு இடமளிக்கும் விசேடமான கொள்கை இவரிடம் இருந்தது என்பதும் தெளிவான ஒன்றாகும். தலைமைக்கு விரோதமாக செயல்படாத வரம்புக்குள் இருந்துகொண்டு போதிய அளவு தவறு இழைப்பது சீர்கேடான செயல்ல என எண்ணும் கொள்கையை நோக்கி இவரது சீடர்களும் தள்ளப்பட்டனர்..

அரசாங்க காணிகள் தொடர்பாக தனது வழியை பின்பற்றுவர்களுக்கு திரு ஜே. ஆர்.ஜெயவர்தனவால் வழங்கப்பட்ட முன்மாதிரி அவரைப் போன்ற படித்த அனுபவம் வாய்ந்த ஆட்சித்தலைவனுக்கு உகந்த செயலல்ல என்பது சந்தேகத்துக்கு இடமற்றதாகும். நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் திரு. ஜெயவர்தனவிடமிருந்து காணிகள் சுவீகரிக்கப்பட்டன. ஆனால் எவ்வித பயனுமற்ற சோடைத் தென்னங் காணிகளே இவரிடம் இருந்து சுவீகரிக்கப்பட்டன. சட்டம் தளர்த்தப் பட்ட பின்னர் தன்னிடமிருந்து சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்குப் பதிலாக சிலாபம் பிரதேசத்தில் செழிப்பானதும் இலங்கையிலே மிகவும் சிறந்ததுமான தென்னங்காணிகளை இவர் பெற்றுக் கொண்டார். அதுமட்டுமன்றி தன்னுடன் இணைந்து செயல்பட்ட மணிக் திவெல போன்ற உத்தியோகத்தர்களுக்குக் கூட நிலச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு உரித்தான மிகவும் செழிப்பான காணிகளை மிகக் குறைந்த விலைக்கு வாங்குவதற்கு இடமளிக்கும் கொள்கைகள் இவரிடம் இருந்தன. கௌரவ அமைச்சர் விஜேபால மெண்டிஸ் அவர்கள் கூட தனது தலைவனின் முன்மாதிரியைப் பின்பற்றி அநுராதபுரத்தில் தனக்கிருந்த 76 ஏக்கர் தரிசு நிலத்தை நிலச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு வழங்கி அதற்குப் பதிலாக வென்னப்புவ பிரதேசத்தில் 76 ஏக்கர் செழிப்பான தென்னங்காணிகளை ஆணைக் குழுவிடமிருந்து பெற்றுக் கொண்டார். நிலச் சீர்திருத்த ஆணைக்குழுவிடமிருந்த காணிகளைப் பெறும் இவ் ஊர்வலத்தில் ஹரல்ட் ஹேரத், P.தயாரத்ன, ரொனி டி மெல், ஜோன் அமரதுங்க, இந்திரதாச ஹெட்டி ஆராச்சி, மெரில் காரியவசம் W.M.B. திசாநாயக போன்ற அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து கொண்டனர்.

இவ்வாறாக ஆளும் கட்சியின் பெரும்பாலான அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் தம்மால் பெறக்கூடிய ஆகக் கூடுதலான அளவு காணிகளை ஆகக்குறைந்த விலைக்கு நிலச்சீர்திருத்த ஆணைக்குழு விடமிருந்து பெற்று தமது உடமையாக்கிக் கொண்டனர்.. இவை இலங்கையின் அனைத்து குடிமக்களுக்கும் கிடைக்காத இவர்களைப் போன்ற விசேட நபர்களுக்கு மட்டும் கிடைக்கும் சிறப்புரிமையாகும். -இவர்கள் இவ்வளவு குறைந்த விலைக்கு காணிகளைப் பெற்றுக் கொள்ளுதல் ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கைகளுக்கு மட்டுமன்றி நிலச் சீர்த்திருத்த ஆணைக்குழுவின் சட்ட பூர்வமான நோக்கங்களுக்கும் மாறானது. இச் சிறுபகுதியினர் தம்வசமுள்ள அரசு அதிகாரத்தை பயன்படுத்தி பெரும் நிலச்

சொந்தக்காரர்களாக மாறியிருப்பது கமத்தொழிலை வாழ்வாகக் கொண்டுள்ள பெரும்பாலான மக்களுக்கு விவசாயம் செய்வதற்கு தேவையான காணிகள் இல்லாத நிலமையிலேயேயாகும்.

இக்காணிகள் தமக்கு குறைந்த விலைக்கு கிடைத்தாலும் நிலச் சீர்த்திருத்த ஆணைக்குழுவின் குறைந்த விலைகளே தவிர தாம் கோரிய விலைகள் அல்ல என இவர்கள் கூறலாம். ஆனால் இத் தர்க்கத்தில் எவ்வித நியாயமும் இருக்க முடியாது. நிலச் சீர்திருத்த ஆணைக்குழுவே இக் காணிகளின் விலைகளை குறைத்தது என்பது உண்மையாயினும் இவர்களுக்கும் அரசாங்கத்துக்குமான உறவு காணரமாகவே இவ்வாறு குறைந்த விலையில் காணிகளைப் பெறமுடிந்தது என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்க முடியாது. தரிசு நிலம் கூட பேர்ச் ஒன்று ரூபா ஐயாயிரத்துக்கும் கூடுதலான தொகைக்கு விற்கப்படும் நாட்டில் மிகவும் செழிப்பான காணிகளை பேர்ச் ஒன்று ரூபா 10,15,20,25,50,100 போன்ற மிகக்குறைந்த விலைக்கு இவர்கள் பெற்றுள்ளனர். இவர்கள் பெற்றுக் கொண்ட காணிகளுக்கு கொடுக்கப்பட்ட விலைக்கும் அக்காணி களின் உண்மையான பெறுமதிக்கும் இடையேயான வேறுபாடு எவ்வளவு விசாலமானது என்பதைக் காட்டுவதற்கு மிகச் சிறந்த உதாரணமொன்று இரத்தின புரியிலிருந்து கிடைத்து ள்ளது. சப்பிரகமுவ மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் திரு புஞ்சி நிலமே அவர்கள் தனது மகனின் பெயரில் இரத்தினபுரியிலுள்ள FARM GARDEN தோட்டத்தில் பேர்ச் ஒன்று பத்து ரூபா இருபது சதம் (ரூபா 10/20) என்னும் விலையில் 40 ஏக்கர் நிலத்தை கொள்வனவு செய்தார். 40 ஏக்கர் விஸ்தீரணத்தைக் கொண்ட காணிக்கு அவர் வழங்கிய பணம் ரூபா 65,680/= மட்டுமேயாகும். இக்காணியை அவர் ரூபா 65,680/=க்கு கொள்வனவு செய்ததன் பின்னர் அதனை இலங்கை வங்கியில் அடகுவைத்து முப்பது இலட்சம் ரூபாய் பெற்றுக் கொண்டார். அவர் கொடுத்த விலை காணியின் உண்மையான விலை அல்ல என்பது இதிலிருந்து தெளிவாகிறது. அரசாங்கத்தின் ஏனைய அனைவரும் இதற்குச் சமாந்தரமான முறையிலேயே காணிகளைப் பெற்றுக் கொண்டனர்.

ஆளும் கட்சியின் அமைச்சர்கள் பொதுக்காணிகள் தொடர்பாக கடைப் பிடித்த இவ்வாறு கொள்ளையடிக்கும் கொள்கைகள் நிலச் சீர்திருத்த ஆணைக் குழுவுடன் மட்டுப்படவில்லை. நகர் அபிவிருத்தி அதிகாரசபையின் நகர்ப்புறத்திலுள்ள பெறுமதி வாய்ந்த காணிகளுக்கும் இக்கதியே ஏற்பட்டது. பேர்ச் ஒன்று இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான பெறுமதியைக் கொண்ட நகரத்தின் காணித் துண்டை பேர்ச் ஒன்று ரூபா 15.000/= விலையாக வாங்குவதை பாக்கியம் என்று கூறாமல் சாதாரண சம்பவமாக கருத முடியுமா? பெட்ரோலியம் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான நாற்பது இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட முதலீட்டு பெறுமதியைக் கொண்ட எண்ணெ நிரப்பு நிலையம் ஜனாதிபதி பிரேமதாசவின் பாரியாரின் சகோதரனுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்ட சம்பவம் பாராளுமன்ற உறுப்பினர் நிமல் சிறிபால டி சில்வாவால் பாராளுமன்றத்தில் அம்பலப்படுத்தப்பட்டது. இவ்வாறு குறைந்த விலைக்கு எண்ணெ நிரப்பு நிலயங்களை குத்தகைக்கு பெறும் பாக்கியம் பாரியாரின் சகோதரனுக்கு மட்டுமல்ல என்பதையும் இவ்வாறான பாக்கியத்தை பெற்றவர்கள் ஆளும் கட்சியின் அமைச்சர்கள் மத்தியில் உள்ளனர் என்பதையும் நாம் அறிவோம். இக் கொள்கை எண்ணெ நிரப்பு நிலையங்களுக்கு மட்டுமல்ல வெளி நாட்டு குடிபானங்களுக்கான உத்தரவு பத்திரம், அரசாங்கத்தின் பல்வேறு ஏஜென்சி நிறுவனங்களுக்கும் இதற்குச் சமமான கொள்கைகளே கடைப்பிடிக்கப் படுகின்றன.


தனியார் மயப்படுத்தலும் அரசாங்க அமைச்சர்கள் தாம் விரும்பியவாறு கொள்ளையடிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கும் பிரதான பாதை என்பதை விடயம் தெரிந்தவர் மட்டும் அறிவர். அரசாங்க துறை நிறுவனங்கள் தனியார் துறைக்கு விற்கப்பட்டது அவற்றின் உண்மையான பெறுமதியை விட குறைவான விலைக்கே என்பதும், உண்மையான பெறுமதிக்கும் விற்கப்பட்ட விலைக்கும் இடையேயான வேறுபாட்டின் ஒருபகுதி அரசியல்வாதிகள் பைகளுள் விழுகின்றன என்பதை இவ்வாறான தகவல்களைத் தெரிந்தவர் மட்டுமே அறிவர். உண்மைப் பெறுமதிக்கும் விற்கப்பட்ட விலைக்குமிடையேயான வேறுபாடு ஆகாயத்துக்கும் நிலத்துக்கும் இடைவெளியைப் போன்று விசாலமானது. உதாரணமாக கூறுவதாயின் டொலர் முந்நூறு மில்லியன் பெறுமதியான துல்கிரிய நெசவாலை விற்கப்படவேண்டிய விலையாக டொலர் நூறு மில்லியனாக மட்டுமே மதிப்பீடு செய்யப்பட்டது. ஆனால் 173 ஏக்கர் பெரும் நிலப்பரப்பையும் 18 ஏக்கர் நிலத்தில் பரந்துள்ள ஆலைகளையும் கொண்ட இவ் நிறுவனம் டொலர் 7 மில்லியன் போன்ற பிச்சைக் காசுக்கு காபுல் கம்பனி விலைக்கு வாங்கியது. அரச துறை நிறுவனங்கள் தனியார் மயப்படுத்தல் தொடர்பாக வழங்கப்படக்கூடிய பல உதாரணங்களில் இது ஒன்று மட்டுமேயாகும்.

இவ்வாறான நிலமைகளின் கீழ் இலஞ்சம் ஊழல்களுக்கு எதிராக நிரந்தரமான ஆணைக்குழுவொன்று நியமிக்கப் கோரும் பிரேரணையை ஆளும் கட்சி எவ்விதத்திலும் ஆதரிக்க மாட்டாது என்பது தெரிந்த விடயமே. அவ்வாறான ஆணைக் குழுவொன்று நியமிக்கப் பட்டால் அரசாங்கக் கட்சியைச் சார்ந்த பலருக்கு அவ் ஆணைக்குழு முன்னால் மறுமொழி கூறவேண்டிய நிலமை ஏற்படும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இலஞ்சம் ஊழல்களுக்கான வாய்ப்பை இல்லதொழிக்காமல் அவற்றை பாதுகாக்கும் அவசியம் ஆளும் கட்சிக்கு உண்டாயின் பொதுமக்களின் பணத்தில் இலஞ்சக் கமிஷனர் திணைக்களம் போன்ற நிறுவனங்களை வைத்திருப்பதில் எவ்வித அர்த்தமும் இல்லை. பாராளுமன்றத்தில் தமக்குள்ள பெரும்பான்மையைப் பயன்படுத்தி இவ் நிறுவனங்களை மட்டுமல்ல ஊழலுக்கு எதிரான சட்டங்களையும் கூட அகற்றும் கொள்கைகளையே அரசு கடைப் பிடிக்கவேண்டும். அப்போதுதான் இலஞ்சம் ஊழல்களில் ஈடுபட ஆர்வமுள்ள அரசியல் வாதிகள் சட்டம் ஒழுங்கு பற்றி எவ்வித பயமும் அருவருப்புமின்றி தமது ஊழல்களை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லக்கூடிய வாய்ப்புகள் ஏற்படும்.

# ஜே.வி.பி.யின் வரலாற்றுக் கதை

வசந்த திசாநாயக, பற்றிக்பெர்ணன்டோ
சரத் த சில்வா, ரஞ்சித் குமார

தமிழாக்கம்; செ. லோகநாதன்



## 1977க்குப் பின்னர் ஜே. வி.பி.யின் அரசியல் மூல உபாயம்

பிரச்சாரக் கூட்டங்களுக்காக ஏனைய அரசியல் கட்சிகளுக்கு கிடைக்காத சுகததாச விளையாட்டரங்கம், கொழும்பு மாநகர சபை மைதானம் போன்ற ஸ்தானங்கள் மட்டுமன்றி வேறு அத்தியாவசிய வசதிகளும் பயணங்களுக்காக வாகனங்களும் ஜேவிபியினருக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்டதாக தகவல்கள் பரவின. 1979ம் ஆண்டு ஆனமடு தொகுதி இடைத்தேர்தல் காலகட்டத்தில ஜேவிபியின் தலைவர்களான உபதிஸ்ஸ கமநாயக, சோமவன்ச அமரசிங்க, மகிந்த பத்திரன ஆகியோர் யூ.என்.பி. யைச் சார்ந்த வீரசிங்க மல்லிமாராச்சி அநுர பஸ்த்தியன் ஆகியோரைச் சந்தித்ததாகவும் அதன் பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுப்பதற்காக ஜேவிபி யினருக்கு யூ என் பி அரசாங்கத்தால் பாதுகாப்பு, வாகனங்கள், நிதி வழங்கப்பட்டதாகவும் கூறப்பட்டது. (ரோகன் குணரத்ன வின் SRI LANKA: A LOST REVOLUTION என்னும் நூலைப் பார்க்கவும்) அக் காலகட்டத்தில் ஜேவிபியின் அரசியல் குழு உறுப்பினராகவிருந்த வாஸ் திலகரத்ன ஜனாதிபதி ஜெயவர்தன அவர்களை ஒரு சந்தர்ப்பத்தில் விமர்சித்த போது அவ்வாறு நடந்து கொள்ள வேண்டாம் என விஜேவீர வாஸ் திலகரத்னவை எச்சரித்ததாகவும் கூறப்பட்டது. இக் காலகட்டத்தில் தான் ஜேவிபி தலைவர்கள் பிரதமர் பிரேமதாஸவையும் இன்னும் சில யூ.என.பி. தலைவர்களையும் சந்தித்ததாக அறிய முடிந்தது.

யூ.என்.பிக்கும் ஜேவிபிக்குமிடையே நேரடியான தொடர்புகள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒன்றை தெளிவாக காணக் கூடியதாகவிருந்தது. அதாவது ஜேவிபி யின் செயல் முறைகள் விளங்கியோ அல்லது விளங்காமலோ யூஎன்பிக்கு சேவை ஆற்றுபவையாகவே இருந்தன என்பதாகும். இந் நிலைமையின் கீழ் ஜேவிபி யூஎன்பி க்கு உதவி செய்கிறது என்னும் குற்றச் சாட்டில் நியாயம் இருந்தது. இது ஜேவிபியின் உபாயம் என்பது உண்மைதான். ஆனால் இவ் உபாயத்தை தமது நன்மைக்காகப் பயன்படுத்துவதில் யூஎன்பியினர் வெற்றி கண்டனர். ஜேவிபியின் இவ் உபாயம் காரணமாக, அது யூஎன்பிக்கு எதிரான ஒரே மாற்று அமைப்பாக தோன்றுவதற்கு மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் அரசாங்க விரோத சக்திகள் முன்னே வெறுப்பையே ஏற்படுத்தின. இக்காரணங்களால் தமது உபாயங்களில் சிற்சில மாற்றங்களை ஏற்படுத்த ஜேவிபியினருக்கு நேரிட்டது. இதற்கமைய அரசாங்க விரோத வேலைத்திட்டத்தை செயற்படுத்த ஜேவிபியினரால் தீர்மானிக்கப்பட்டது. இக்கால கட்டத்தில் ஜேவிபி யின் செயற்பாடுகள் யூஎன்பி அரசாங்கத்திற்கு நன்மை அளித்த போதிலும் ஜேவிபி அவ்வளவு தூரம் பலம் பொருந்திய அமைப்பாக வளருவதை காண்பது அரசின் அபிப்பிராயமாக இருக்கவில்லை. தம்மால் கட்டுப்படுத்தக் கூடிய வரையறைக்குள் வைத்துக்கொண்டு ஜேவிபிக்கு அவகாசம் வழங்குவது மட்டுமே யூஎன்பி ஆட்சியாளரின் அவசியமாகவிருந்தது. யூஎன்பி அரசாங்கம் ஜேவிபி தொடர்பாக கடைப்பிடித்த உபாயம் இரட்டைச் சுபாவத்தைக் கொண்டதாகும். ஒன்று ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியையும் இடதுசாரிக் கட்சிகளையும் தாக்குவதற்கு ஜேவிபி யினருக்கு அவகாசம் வழங்குவது மற்றது தம்மால் கட்டுப்படுத்தக் கூடிய வரையறைக்குள் ஜேவிபியை வைத்திருப்பதற்காக அதன் மீது "மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதல்களை" தொடுப்பது என்பதாகும். இவை பிரதேசத்து யூஎன்பி தலைவர்களின் அவசியங்களுக்கு ஏற்ப இடத்துக்கு இடம் கூடிக் குறைந்து காணப்பட்டன. இவ்வாறான தாக்குதல்கள் மத்தியில் கைது செய்தல், பொதுக்கூட்டங்களைத் தாக்குதல் என்பனவும் இடம் பெற்றன. மறுபுறம் 77ம் ஆண்டுக்குப் பின்னர் ஜேவிபியின் நடவடிக்கைகளின் போது பிரதான தாக்குதல்கள் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியையும் இடதுசாரிக் கட்சிகளையும் இலக்குப்படுத்தியதாக காணப்பட்டபோதிலும் ஒரு சில சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட இடதுசாரிக் கட்சிகளுடன் ஒத்துழைத்து செயல்பட முயற்சித்த சம்பவங்கள் இல்லாமலும் இல்லை. ஆயினும் அவ்வாறான முயற்சிகள் மிகக் குறுகிய காலத்துக்கு விசேடமான நிலைமைகளில் மட்டுமேயாகும். 1979ம் ஆண்டில் அத்தியாவசிய சேவை சட்டம், அவசரகாலச் சட்டம், பயங்கரவாத தடைச் சட்டம், யாழ்ப்பாணம் இராணுவ நிர்வாகத்துள் கொண்டு வருதல் ஆகியவற்றுக்கு எதிராக இடதுசாரிக் கட்சிகள் சிலவற்றுடன் இணைந்து செயல்பட ஜேவிபி சம்மதித்தது. ஜேவிபி, ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, நவ சமசமாஜக் கட்சி, புரட்சிகர மாக்சிஸ்ட் கட்சி (பாலா தம்பு தலைமை வழங்கிய கட்சி) ஆகியவை ஒன்று சேர்ந்து மேற் குறிப்பிட்ட சட்டங்களை நீக்குமாறும் யாழ்ப்பாணத்தில் இராணுவ நிர்வாகத்தை முடிவுக்கு கொண்டு வருமாறும் கோரி 1979 செப்ரம்பர் 24 ம் திகதி கூட்டறிக்கை ஒன்றை விடுத்தன. 1979 அக்டோபர் 02ம் திகதி ஹைட்பார்க் மைதானத்தில் இணைந்த

பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது.. ஜேவிபி இடதுசாரிக் கட்சிகளுடன் இணைந்து நடாத்திய முதலாவதும் இறுதியுமான பொதுக் கூட்டம் இதுவேயாகும். இப் பொதுக் கூட்டம் இணைந்த பொதுக் கூட்டமான போதிலும் முற்றாக அதனை ஜேவிபியின் பொதுக் கூட்டமாக மாற்ற எடுத்துக் கொண்ட கேவலமான முயற்சிகளால் ஐக்கியம் அத்துடன் உடைந்தது. விசேடமாக பயங்கரவாத தடைச்சட்டம் போன்றவை எதிர்காலத்தில் ஜேவிபிக்கு எதிராக பாவிக்கக்கூடியவை என்பதனால் அவற்றை நீக்குவது ஜேவிபியின் அவசியமாக விருந்தது. இதற்காகச் செய்யப்படும் ஆர்ப்பாட்டம் பரந்த ஒன்றாக இருக்கவேண்டியது அவசியமாகும்.

ஜேவிபியினருக்கு மட்டும் தனியாக அவ்வாறான ஆர்ப்பாட்டமொன்றை பயனளிக்கக் கூடிய வகையில் செய்யும் ஆற்றல் இருக்கவில்லை. ஆதலால் ஆகக்குறைந்தது சில இடதுசாரிக் கட்சிகளுடனாவது தற்காலிகமாக ஐக்கியப்பட வேண்டியிருந்தது. ஆனால் அவ்வாறான ஐக்கியத்துள்ளாவது இடதுசாரி இயக்கத்துள் தாம் பிரதான கட்சியாக மாறவேண்டும் என்னும் தமது ஆசையை பொது அவசியத்துக்காக் கட்டுப்படுத்தக் கூட இவர்களால் முடியவில்லை. இணைந்த பொதுக் கூட்டத்திலும் தாமே தான் ஒரே ஒரு பிரதான இடதுசாரிக் கட்சி என்னும் குரலை எழுப்பவே செயல்பட்டனர். ஐக்கியம் இத்துடன் முற்றுப் பெறுகிறது. ஐக்கியமாக வேலை செய்யவேண்டும் என்னும் உண்மையான அவசியம் ஜேவிபி யிடம் இருக்கவில்லை. ஐக்கியமாக வேலை செய்யச் சென்ற அனைத்து இடங்களிலும் ஏனைய பகுதியினரைத் தமது பக்கம் திருப்பச் செயல்பட்டனரே தவிர உண்மையான ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்காகவல்ல. இதன் பெறுபேறாக ஐக்கியமாக செயல்படச் சென்ற இடங்களிலெல்லாம் அதிக காலம் செல்ல முன்னரே தனியாக வேலை செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது. அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்ட இயக்கங்களை முன்னெடுக்க தீர்மானித்த போது அவற்றையும் தனியே செய்வதற்காக முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டதையும் காணமுடிந்தது. ஒருபுறம் அரசாங்கம் விரோத சக்திகள் மத்தியிலே யூஎன்பி யின் அவசியங்களை ஈடேற்றவே ஜேவிபி செயல்படுகிறது என்னும் கருத்து ஏற்பட்டதாலும், ஜேவிபிக்கு அவகாசம் வழங்கிய போதிலும் கட்டுப்படுத்தக்கூடிய வரையறைக்குள்ளே அரசாங்கம் அதனை தடுத்து வைத்ததாலும் 1980 ஜுலை வேலை நிறுத்தத்திற்குப் பின்னரான காலகட்டத்தில் வெளிப்படையாகவே அரசாங்க விரோத வேலைத்திட்டத்தைச் செயற்படுத்த ஜேவிபிக்கு நேர்ந்தது.

ஜேவிபியினர் ஓரளவுக்காவது அரசாங்க விரோத வேலைத் திட்டத்தில் கைவைத்தாலும், ஜேவிபியின் துரிதவளர்ச்சியுடன் கூடவே அரசாங்கத்தால் அது வரை காலமும் கடைப் பிடிக்கப்பட்ட மட்டுப் படுத்தப்பட்ட தாக்குதல்கள் ஓரளவு தூரத்துக்கு அளவுரீதியாக பெருத்ததையும் காண முடிந்தது. ஆயினும் ஜேவிபியின் வளர்ச்சிக்கான வழிகளை பூரணமாக முடுவதற்கு அக்காலகட்டத்திலும் அரசாங்கம் முன்வரவில்லை.

## ஆயுதப் போராட்டத்திலிருந்து தேர்தல் அரசியலை நோக்கி

அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுதல் தொடர்பான ஜேவிபியின் பிரதான உபாயமான ஆயுதப் போராட்டம் 1977க்கு பிற்பட்ட காலத்தில் தேர்தல் போராட்டமாக மாறியது. 1977 பொதுத் தேர்தலின் போது 4 தொகுதிகளில் சுயேட்சையாக போட்டியிட்டதோடு 1979 ஏப்பிரலில் இடம்பெற்ற உள்ளூர் ஆட்சி சபை தேர்தலில் கொழும்பு மாநகரசபைக்கு சுயேட்சை குழுவாக போட்டியிட்டனர். தேர்தல் ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்ட கட்சியாக பதிவு செய்வதற்கு 1979 மார்ச் மாதம் விண்ணப்பித்த போதிலும் அவ்விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. இதனாலேயே சுயேட்சையாக போட்டியிட நேரிட்டது. இதன் பின்னர் நடைபெற்ற இடைத்தேர்தல்களில் காலி, ஆனமடு ஆகிய தொகுதிகளில் ஜேவிபி போட்டியிட்டது. ஆனால் இவை எதிலுமோ வெற்றிக் கம்பத்தைக் கூட அண்மிக்க ஜேவிபி யால் இயலாது போயிற்று.

ஆனால் 1981 ஜூன் மாதத்தில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி சபை தேர்தலின் போது ஜேவிபி யின் தேர்தல் அரசியலில் வெற்றிகரமாக பெறுபேறுகளை பெறமுடிந்தது. இத் தேர்தலின் போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இடதுசாரிக் கட்சிகளும் போட்டியிடாதது ஜேவிபிக்கு சாதகமாக அமைந்தது. கொழும்பு மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களில் 8 வீதமான வாக்குகளை அதாவது 78,912 வாக்குகளை ஜேவிபி பெற்றதோடு நால்வர் மாவட்டசபை அங்கத்தவர் களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கம்பஹ மாவட்டத்தில் 77,104 வாக்குகளை அதாவது பதிவுசெய்யப்பட்ட வாக்குகளில் 10 வீதத்தை பெற்றதோடு மூவர் மாவட்டசபைக்கு தேர்ந்தெடுக்கப் பட்டனர். காலி மாவட்டத்தில் 44,142 வாக்குகள் அதாவது பதிவு செய்யப்பட்ட வாக்குகளில் 10 வீதம் வாக்குகளும் இருவர் மாவட்ட சபைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அம்பாந் தோட்டை மாவட்டத்தில் ஒரு வேட்பாளரும் அநுராதபுரம் மாவட்டத்தில் ஒரு வேட்பாளருமாக மாவட்ட அபிவிருத்தி சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஜேவிபியி னருக்கு கிடைத்த வாக்குகளில் கூடுதலான வீதம் வாக்குகள் அதாவது 13 வீதம் வாக்குகள் கிடைத்தது அனுராதபுரம் மாவட்டத்திலாகும். வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்படாத மாவட்டங்களிலும் கணிசமான தொகை வாக்குகள் இவர்களுக்கு கிடைத்தன. 8 மாவட்டங்களில் போட்டியிட்ட ஜேவிபி யினருக்கு 327,079 வாக்குகள் கிடைத்தன. எல்லா மாவட்டங்களிலும் போட்டியிட்டிருந்தால் சுமார் 500,000 வாக்குகள் கிடைத்திருக்கலாம்.. ஆனாலும் இவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இடதுசாரிக் கட்சிகளும் போட்டியிடாத நிலமைகளின் கீழேயாகும். இக் கட்சிகள் போட்டியிடாத காரணத்தால் யூஎன்பி விரோத வாக்குகளில் கணிசமான தொகை ஜேவிபிக்கு கிடைத்தது. ஆதலால் ஜேவிபிக்கு தேர்தல்களின் போது கிடைத்த வாக்குகளில் ஆகக் கூடுதலான வாக்குகள் மாவட்ட அபிவிருத்தி சபை தேர்தலில் கிடைத்த போதிலும் அவை அனைத்தும் ஜேவிபிக்கு கிடைத்த வாக்குகள் என கருத முடியாது.

(தொடரும்)

# அறு(சு)வை

# திருத்தல புராணமும் கிளறிக்கல் சேர்வண்ட்களும்

கியூறியஸின் முன்னோர் அடங்காத்தமிழன் சுந்தரலிங்கத்தின் கீழ் 'கிளறிக்கல் சேர்வன்ட்' களாக பணியாற்றினார்கள் என்று சொன்னால் 'அவிக்கிரண்டா கியூறியஸ்' என்பீர்கள் என்பது எனக்குத் தெரியும். அடங்காத்தமிழன் மாவைக் கோயிலில் ஆலயப்பிரவேசம் செய்வதை எதிர்த்து பிரிவி கவுன்சில் வரை வாதிட்டவர்.

★ ★ ★

எலிசபெத் மகாராணிக்கு ஒக்ஸ்போட்டில் கணிதம் படிப்பித்தவர் என்றும் அவர் இலங்கை வந்த போது சுந்தரலிங்கத்திற்கு கையுறையைக் கழற்றி கைகுலுக்கினார் என்றும் பழைய ஐதீகங்கள். அடங்காத்தமிழன் என்பது மாற்றாருக்கு அடங்காத தமிழனா? அல்லது சாதி வெறி அடங்காத தமிழனா? எனக்குத் தெரியாது.

★ ★ ★

எலிசபெத் மகாராணியாரின் முடி சூட்டு விழா முதல் எல்லாமே நடைபெறுகின்ற வெஸ்ட் மினிஸ்டர் தேவாலயத்தில் சாதாரண மக்களும் வழிபாடு செய்யலாம். ஆனால் மாவிட்ட புரம் கோயிலில் மற்றத் தமிழர் வழிபாடு செய்வதை தடுத்த இந்த அடங்காத் தமிழன் தன்னையும் ஒரு அரச குடும்பத்தினர் என்று மகாராணிக்கு அவித்திருப்பாரோ என்னவோ?

★ ★ ★

இருக்கலாம். எழுபதுகளின் நடுப்பகுதியில் கியூறியஸ் பாலகனாய் இருந்த காலங்களில் அடங்காத்தமிழனின் பேத்தி முறையான பெண் ஒருத்தி யாழ்.பெண்கள் கல்லூரி ஒன்றில் படித்தபோது பஸ்ஸில் சென்று வருவார். வாய்காரி என்று பெயர் பெற்ற இந்தப் பெண் ஒருநாள் டபிள் டெக்கர் பஸ்ஸில் மேலிருந்து எதையோ கடித்து விட்டு கீழே சென்றவர்கள் மீது எறிந்தார். இதைக் கண்ட கண்டக்டர் அந்தப் பெண்ணைப் பேச 'உமக்குத் தெரியுமா, நாங்கள் ரோயல் ஃபமிலி' என்று அந்தப் பெண் திரும்பித் துள்ளினாள். பாவம் இந்த 'நீல இரத்த அரச பரம்பரைப் பெண்' இப்போது கனடாவில் தான்.

★ ★ ★

மாவிட்டபுரம் கோயிலில் நிர்வாகத்தினருடன் பிரச்சனை ஏற்பட்டதால் டொலர் நிறுவன திருநாவுக்கரசு அங்கு ஒரு வைரவர் கோயில் கட்டியதாக சொன்னார்கள். இந்த கோயில் பலாலி முகாமில் எல்லைப்புறமாக இருக்கிறது. ஒரு தடவை அங்கு சென்றிருந்தேன். ஒரு கல்லில் நாயைச் செய்து அதன் வாய்க்குள் ஒரு உருண்டைக் கல். உள்ளே செதுக்கியிருக்கிறார்கள். வாய்க்குள் விரலை விட்டு கல்லை உருட்டலாம். ஆனால் வெளியே எடுக்க முடியாது. அற்புதமான சிற்ப வேலைப்பாடு.

போட்டிக்கு கோயில் கட்டும் இந்த வியாதி அங்கேயும் இருந்திருக்கிறது பத்திரிகை தொடங்குவது மாதிரி. பிறகென்ன கோயில் கட்டினால் வருமானம் தானே.

★ ★ ★

கியூறியஸின் முன்னோர் clerical servant களாக இருந்தார்கள் என்றால், ஏதோ 'கொர்ணமேந்தில் கோழி மேய்க்கிற வேலையில்' இருந்தார்கள் என்பதல்ல.

அந்தக் காலத்தில் எங்கள் பகுதியில் முடிக்குரிய தரிசு நிலங்களை அபகரித்துக் கொண்ட (சட்டம் தெரிந்தவர்கள் அல்லவா? சட்ட ரீதியாகத் தான்!) இவர்கள் அப்பகுதியில் பயிர் செய்ய முடியாது என்பதால் அந்தப் பகுதியில் வாழ்ந்த என் முன்னோர் அந்த கல் நிலங்களில் 'கல்லைக் கிளறும்' 'கிளறிக் கல்' சேவை செய்து பின்னர் பயிர் செய்தார்கள் (குத்தகைக்குத் தான்) என்பதைச் சொல்ல வந்தேன்.

★ ★ ★

என் முன்னோருக்கு சில சாமியார்களைப் பழக்கம். ஒருவர் நன்னிச்சாமி, இன்னொருவர் பரியாரியார், மற்றவர் பொன்னுச்சாமி.

இதில் நன்னிச்சாமி காவி உடுத்து துறவு பூண்டு தேசாந்திரியாகத் திரிந்தவர். ஒரு குடையும் மொட்டைத் தலையும் பழுப்பு நிற ஆடையும் இவரது non registered trademarks. முற்றும் துறந்தவர் என்று நான் இவரைக் கருதியதில்லை. அவ்வப்போது தன் பிள்ளைகளை வந்து பார்த்துச் செல்வார். கியூறியஸின் பேரனார் வாங்கிக் கொடுக்கும் கசிப்பைச் சுவைத்தும் செல்வார். எந்தக் கோவிலிலும் ஒட்டிக் கொள்ளாத சித்தர் இவர்.

ஆனால் இவர் துறவு பூண்டதற்கான காரணம் சிவப்பிரகாசத்தின் கட்டுரைக்குள் இருக்க வேண்டும். நான் சிறியனாய் இருந்த காலத்தில் 'நான் வீட்டில ஒரு நாய் இருக்கேக்கை வேற நாயள் வந்தால் எப்படி நான் இருக்கிறது?' என்று நன்னிச்சாமி சொன்னதாக என் பேரனார் சொல்வார். .

★ ★ ★

மற்றவர் பரியாரியார். இவர் துறவியா? தொண்டரா? தெரியாது. கோவில் ஒன்றில் திருப்பணிகள் செய்து அங்கேயே தூங்கி, அங்கேயே



உண்பார். திருவிழாக்காலங்கள் என்றால் பேரனாரின் விருந்தோம்பல் அழைப்பை ஏற்று கௌரவித்துச் செல்வார். இவர் பரியாரம் படித்ததாக பேரனார் சொல்வார்.

★ ★ ★

மற்றவர் பொன்னுச்சாமி. இவர் தான் நான் சொல்ல வந்தது. இவரும் என்னுடைய முன்னோருடன் 'கிளறிக் கல்' சேவையாளராக பணியாற்றியவர். 'அட, எங்களோட நிண்டு வேலை செய்தானடா, அடுத்த நாள் பார்த்தால், உடுப்பெல்லாத்தையும் மஞ்சளில தோய்ச்சுப் போட்டு சாமியாராயிட்டான்' என்று பேரனார் சொல்வார்.

இவர் மற்ற சாமிமார் போல அல்ல. மனைவி, பிள்ளைகள் சகிதம் வீட்டிலேயே கோயில் அமைத்து 'திருப்பணி' செய்தார். பிழைக்கத் தெரிந்தவர். மற்றக் கோயில்களில் திருப்பணி செய்வதை விட சொந்தமாய் கோயில் கட்டினால் வருமானமாயிற்றே.

வழியில் கண்டு பக்தர்களுக்கு திருநீறு கொடுக்க, அவர்கள் பணம் கொடுப்பார்கள். கோயிலில் தீ மிதிப்பு நடக்கும். நான் ஒரு நாளும் போய் பார்த்ததில்லை. ஆனால் வேறு சில இளவயதுப் 'பகுத்தறிவு வாதிகளும்' தீயில் நடந்து காட்டியதாக அறிந்தேன்.

இவரது கோயிலுக்கு முன் ஒரு உண்டியல் இருந்தது. இதை யாரோ திருடிச் சென்று உடைத்து பணத்தை எடுத்து விட்டு உண்டியலை ரோட்டோரமாய் கள்ளுத்தவறணை ஒன்றுக்கருகில் வீசி விட்டுச் சென்று விட்டார்கள். தவறணை இவரது கோயில்/வீட்டுக்கு நூறு யார் தொலைவில் தான்.

பிற்காலத்தில் அந்த உண்டியலுக்குள் இரண்டு ரூபா நாற்பத்தியொரு சதம் மட்டுமே இருந்ததாக சில இளைஞர்கள் திட்டிக் கொண்டதைக் கண்டிருக்கிறேன்.

★ ★ ★

ஊரில் கோயில்கள் ஒரு ரகம். அரச மரம், ஆலமரத்தின் கீழ் சூலத்தையும் கல்லையும் வைத்து மறக்காமல் உண்டியலையும் வைத்து விடுவார்கள். இதில் என்ன திருப்பணி நடக்கிறது? உண்டியல் பணத்துக்கு என்ன நடக்கிறது என்று நான் அறிந்ததேயில்லை.

சில கோயில்கள் சாமி வைக்கும் அளவுக்கு மட்டுமே கோழிக் கூட்டு சைஸில் கட்டப்பட்டு வெளியேயிருந்து வழிபாடும் அர்ச்சனையும் நடக்கும். இவை மரத்தடி சூலக் கோயில்களின் upgraded versions.

★ ★ ★

சில தீவிர பக்தர்கள் வீட்டில் கோயில் கட்டி பூசை செய்வார்கள். எனக்கு இனமாக தோசை தந்த இலங்கையர் கூட வீட்டில் 'காளியாச்சிக்கு' கோயில் கட்டி பூசை செய்தார். ஆனால் அவருக்கு இருபது வயதிலும் ஒரு வயதுக்குழந்தையின் மூளை வளர்ச்சி கொண்ட மகனை ஏன் இந்த காளியாச்சி கொடுத்தார் என்பது பற்றி நான் ஒரே ஆராய்ச்சி.

★ ★ ★

பெரிய கோயில்களில் கோயில் சொந்தக்காரர்கள் வருமானத்தைப் பெற்றுக் கொண்டு திருப்பணி செய்தார்கள். நல்லூர்க் கோயிலில் அடிக்கடி மதில் இடித்துக் கட்டும் திருப்பணி நடந்ததற்கு காரணம், முருகப் பெருமானுக்கு பாதுகாப்பு என்பதை விட வருமான வரி தான் காரணம் என்று பேசிக் கொண்டார்கள்.

★ ★ ★

செல்வச் சந்நிதி மட்டுமே தொண்டர்களுக்கு அன்னதானம் செய்து கொண்டதாக சொன்னார்கள். இந்தச் செல்வச் சந்நிதி கோயில் சொந்தக்காரரின் மகன் தான் மடுக் கோயிலில் கிறிஸ்தவ குருவானவராய் இருந்தார். மதம் மாறி குருவானவர் ஆனவர்களில் ஜி.ஜியின் சகோதரர் பாலசுந்தரமும் ஒருவர்.

சேர்க்கின்ற பணத்தில் உண்மையாகத் திருப்பணி செய்தது சந்நிதி முருகன் தான் என்று நினைக்கிறேன்.

★ ★ ★

சில கோயில்களின் நிலை பரிதாபம். வருமானம் எதுவும் விசேடமாக இருக்காது. திருவிழாக்காலங்களில் மட்டும் ஏதாவது வருமானம். மற்றும்படி இலையான் கலைக்க வேண்டியது தான். கோயில் வளவைச் சுற்றி பற்றைகள் வளர்ந்திருக்கும்

★ ★ ★

பிற்காலத்தில் பெரும் புகழ் பெற்றது துர்க்கை அம்மன் ஆலயம். எழுபதுகளின் நடுப்பகுதியில் சூடு பிடிக்கத் தொடங்கியது. திருமணம் வேண்டி பெண்கள் விரதம் இருந்தால் பயனுண்டு என்றதும் பெண்கள் கூட்டம் அலை மோத அதைக் கண்ட 'மெய்யடியார்கள்' ஒன்று திரள, திருமணங்கள் முடிந்தன.

கியூறியஸின் நண்பர் ஒருவர் புகையிரதத்தில் ஒரு பெண்ணைச் சந்தித்து அந்தப் பெண்ணைச் சந்திப்பதற்காக அவர் கியூறியஸையும் அழைத்துக் கொண்டு ஆலயத்திற்கு சென்று காவல் காத்தது தான் மிச்சம். பெண் வரவுமில்லை. பாவம் கியூறியஸ்.. கதாநாயனின் நண்பனான ஜோக்கர் மாதிரி.. கதாநாயகன் வாங்கித் தந்த கடலையைக் கொறித்துக் கொண்டு திட்டித்திட்டி சைக்கிள் உழக்கியது தான் மிச்சம். ஒருவேளை அந்த திருமணம் நடைபெற்றிருந்தால் அதற்கான பெருமை துர்க்கை அம்மனைச் சேர்ந்திருக்கும்.

(துயரத்திற்கு உரிய விடயம், இதை எழுதிக் கொண்டிருக்கும் போது ஆலயத்தில் குண்டுவீச்சு நடந்ததாக செய்தி வந்தது)

★ ★ ★

முருகண்டியான் என்னைப் பொறுத்தவரை ஒரு பரிதாபத்திற் குரியவர். எத்தனை தலைமுறையாக கொழும்பு போகின்ற ஒவ்வொரு தமிழனும் நிறுத்தி வழிபட்டுச் செல்கின்ற கோயில் அது. இந்தக் கோயில் தேங்காயும் கற்பூரமும் எத்தனை லட்ச ருபா விற்பனையைத் தாண்டியிருக்கும். ஆனால் தெய்வம் மட்டும் இப்போதும் ஓலைக் கொட்டிலில்.. இந்தக் கோயில் சொந்தக்காரர் எத்தனை லட்சங்களுக்கு சொந்தக்காரராயிருப்பார்? கோயில் கட்டப்படவில்லை. ஏன் என்று விசாரித்தால் முருகண்டியான் கனவில் சொன்னாராம், தனக்கு பெரிய கோயில் வேண்டாம் என்று. இது எப்படி இருக்கு? இதைப் போலத் தானே வழிபடாமல் சென்றால் விபத்து நடக்கும் என்பதும். யாரும் அதை மீறத் துணியவுமில்லை.

வருமானம் பெற இப்படி வதந்திகளைக் கிளப்பி விட்டாலும் நல்லது. முருகண்டியானின் திருப்பணிப் பணத்திற்கு என்ன நடக்கிறது என்று யாரும் ஆராய்ச்சி செய்ததுமில்லை.

★ ★ ★

எனக்கும் ஒரு ஆசை.. ரொறன்ரோவுக்கும் மொன்றியலுக்கும் இடையில் எங்காவது ஒரு இடத்தில் Murray County கோயில் கட்டி, ஒரு மேப்பிள் மரத்துக்கு கீழ் சூலமும் வைத்து உண்டியலும் வைத்து, ஒரு பெற்றோல் ஸ்டேஷன், ஒரு மக்டொனல்ட்ஸ், கற்பூரம்... பிறகென்ன? ஒரே வருமானம் தான்.

★ ★ ★

பிற்காலத்தில் முறிகண்டிக்கு முன்னதாக பளைக்கு முன்னர், வேறு

ஒரு கோயில் திருப்பணிக்காக பஸ்ஸை நிறுத்தி கோயில் கட்டினார்கள். ஒரு சாமியார் தான் விபூதித் தட்டோடு வருவார்.

★ ★ ★

வேறு சில சுவாரஸ்யமான காரணங்களுடனும் கோயில்கள் கட்டப்பட்டன. நம்மூர் வைரவர் வன்னிப்பகுதியில் இருந்து பூசாரி முத்தர் வைக்கோல் ஏற்றி வந்த வண்டிலில் ஏறி வந்ததாகவும் பின்னர் அவரைக் காட்டுப் பகுதியில் கொண்டு போய் மந்திரவாதி மூலம் அறைந்து அங்கு கோயில் கட்டியதாகவும் கதை.

இதே போல மாலை வைரவர், ஞான வைரவர், மடத்தடி வைரவர் என்று பல versions. காட்டு வைரவருக்கும் மடத்தடி வைரவருக்கும் கடா வெட்டு நடக்கும். ஞான வைரவருக்கு நடக்காது.

★ ★ ★

ஊரில் மூலைக்கு மூலை, ரோட்டுக்கு ரோட்டு கோயில் தான். கனடாவில் தபால் பெட்டிகள் இருந்த மாதிரி. ஒரே இடத்திலேயே இரண்டு கோயில்கள் இருக்கும்.

ஜேர்மனியில் சோஸ்ற் என்ற இடத்தில் சுமார் ஒரு யார் இடைவெளியில் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலான வயதுடைய இரண்டு கிறிஸ்தவ தேவாலயங்களை கண்டிருக்கிறேன்.

★ ★ ★

அந்தக் காலத்தில் மன்னர்கள் கோயில்களைக் கட்டினார்கள். தங்கள் பெயர் சரித்திரத்தில் இடம் பெறவும் மக்கள் வழிபடவும் என்று.. பிற்காலத்தில் ஜனநாயகம் வந்து 'எல்லோரும் இந்நாட்டு மன்னரே' என்று ஆனதும் ஆளுக்காள் கோயில் கட்ட புறப்பட்டு விட்டார்கள்.

நம் ஊரில் ஒரு கோயில் சொந்தக்காரருக்கு சொந்தமான ஒரு காணியை கியூறியஸின் தந்தையார் வாங்கி தனது வாரிசுகளுக்கு பிரித்துக் கொடுத்தார். இந்தக் காணி தனக்கே விற்கப்பட வேண்டும் என்று அயலவர் வழக்குத் தொடர வழக்கு ஆண்டுக்கணக்கில் இழுபட்டு இறுதியில் தந்தையாருக்கே கிடைத்தது.

ஆனால் கோயில் வருமானம் எதுவுமே இல்லாததால் காணியை விற்ற அவர் தனது மகனை வெளிநாட்டுக்கு அனுப்பி மகன் உழைத்து விட்டார் அனைவரும் செல்வந்தர் ஆக, கியூறியஸ் வீட்டார் மட்டும் 'கிளறிக் கல்' சேவையாளர்களானது தான் மிச்சம்.

★ ★ ★

திருப்பதிக் கோயில் மொட்டை அடித்தும் மயிர் விற்றும் லட்டு விற்றும் தங்கமாகவும் பெற்ற கோடிக்கணக்கான வருமானம் தமிழ் நாட்டுக்கும் ஆந்திராவுக்கும் பிரச்சனைக்குரியதானது. இறுதியில் சென்னை நகரத்தை தமிழ்நாட்டுக்கும் திருப்பதியை ஆந்திராவுக்கும் கொடுத்து பிரச்சனையைத் தீர்த்துக் கொண்டார்கள். கடைசியில் ராஜீவைக் கொன்ற முருகன் (முருகப்பெருமான் அல்ல!) வேண்டுதல் வெற்றி பெற்றதற்காக மொட்டை அடித்துக் கொண்டதும் அங்குதான்.

திருப்பதி கோயில் வருமானம் கோடிக் கணக்கில் இருந்தாலும் அது அரசாங்கத்திற்கு போகிறது. அத்தோடு கோயிலின் பெயரால் பாடசாலைகளும் உண்டு. பல தர்மகாரியங்கள் அந்தப் பணத்தில் நடைபெறுகின்றன. பலருக்கு வேலை வாய்ப்பு உண்டு.

பக்தர்களின் பணத்தை ஒரு சிலர் சுருட்டுவதை நிறுத்தத்தான் அறநிலையத் துறை அமைச்சை ஸ்தாபித்து கோயில்களை அரசுடைமையாக்கி இருக்கிறார்கள் என நினைக்கிறேன். திருப்பணிக்கு அரசாங்கம் பணம் கொடுக்கிறது. வருமானமும் அவ்வாறே அரசாங்கத்திற்கு செல்கிறது. ஆனால் பிரச்சனை என்னவென்றால், முன்பு தனியார் சுருட்டிக் கொண்டார்கள். இப்போது அமைச்சர் முதல் அதிகாரிகள் வரை சுருட்டுகிறார்கள்.

★ ★ ★

கோயிலில் பக்தர்கள் தங்கள் வேண்டுதல்களை நிறைவேற்ற செலவிடுகின்ற பணத்தை ஒரு சிலர் கபளீகரம் பண்ணி சொகுசாக வாழ நினைப்பது ஒரு வகையில் சமூக விரோதச் செயல் தான். கடவுளுக்குச் செலுத்துகின்ற பணத்தை கடவுளுக்கு அனுப்பி வைப்பதல்ல. அது அந்தந்த கோயில்களின் நியாயமான திருப்பணிக்கும் தர்ம காரியங்களுக்கு மட்டுமே செலவிடப்பட வேண்டும். மாறாக ஒரு சில தனிநபர்கள் 'சுருட்டிக் கொழுத்துக் கொள்வதற்கு' மற்றவர்கள் பணம் கொடுப்பது என்பது எவ்வளவு மடமை? கோயில் கட்டுவது என்பது சேவையே அன்றி வியாபாரம் அல்ல.

அடுத்த வாரம்...
வெயர்ஹவுஸ் கோயில்கள் பற்றி....


This newspaper is published by
Georgicka communications.
A member of
Ethnic Press Council Of Canada.

Editor: George R.Ckrhushchev

P.O.Box 1031, Station "F",
Toronto, Ont, M4Y 2T7.

Tel: (416) 920 9081
Fax: 963 5738
E mail:71650,3216 Compuserve

இப்பத்திரிகை ஜோர்ஜிக்கா தொடர்பு நிறுவனத்தினால் வெளியிடப்படுகிறது.
ஆசிரியர்:
ஜோர்ஜ் இ. குருஷ்சேவ்


உங்கள் ஆக்கங்கள், பத்திரிகை பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்கள் என்பவற்றை வரவேற்கிறோம். உங்கள் கருத்துக்களை எழுத்து மூலமாக அனுப்புங்கள். உங்கள் கருத்துக்கள் எதுவாயினும் பிரசுரிக்க முயற்சிப்போம். ஆக்கங்கள் தரங்கண்டு பிரசுரமாகும். ஆக்கங்களின் கருத்து சிதையாமல் மாற்றங்கள் செய்ய ஆசிரியருக்கு உரிமை உண்டு. ஆக்கங்களுடன் உங்கள் தொலைபேசி இலக்கங்களையும் விலாசங்களையும் குறிப்பிடுங்கள்.

ஆக்கங்களை மீளப் பெற விரும்புபவர்கள் சுயவிலாசமிட்ட முத்திரையிட்ட அஞ்சற்கூடு அனுப்பவும்.படைப்புகளில் சொல்லப்படும் கருத்துக்களுக்கு எழுதியவர்களே பொறுப்பு. படைப்புகளில் வரும் கருத்துகள் ஆசிரியரின் கருத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

## தாயகம் சந்தா விபரம்

கனடா ஆறுமாதம் $30
வெளிநாடுகள் ஆறு மாதம் US$60
வெளிநாட்டு வாசகர்களின் காசோலைகளின் இலக்கம் encoded செய்யப்பட்டிருக்க வேண்டும். காசோலைகள் அனைத்தும் Georgicka communications பெயருக்கு எழுதப்பட வேண்டும். (தாயகத்தின் பெயருக்கு அல்ல)

ANTONY BROTHERS
516 3903

ஒரே இடத்தில் உங்கள் அனைத்து இலங்கை,
இந்திய, கனடிய உணவுப் பொருட்
தேவைகளுக்கும் நாட வேண்டிய இடம்

# அந்தனி பிறதர்ஸ்

**1472 Queen St West**
**(Queen/Lansdowne),**
**Toronto, Ont. M6K 1M4**

வாரத்தில் ஏழு நாட்களும்
காலை 9 மணி முதல் இரவு 11 மணி வரை

உடன் மீன்,
இறைச்சி,
பழவகைகள்
மலிவு விலையில்

தமிழக, இலங்கை
வாரப்பத்திரிகைகள்,
சஞ்சிகைகள் உடனுக்குடன்


லேசர்
இசைத்தட்டுக்கள்
மலிவு விலையில்

தமிழ், ஹிந்தி,
மலையாள
வீடியோக்கள்
வாடகைக்குப்
பெறலாம்

- முத்திரை, சிகரெட்,
  TTC Tickets, Lottery Tickets
- ஃபாக்ஸ், போட்டோக்கொப்பி வசதிகள்

# ANTONY BROTHERS

**TEL:(416) 588-0733**
**TEL/FAX:(416) 516 3903**



SIVA'S TRADING CO LTD
321-2739

அனைத்து வகையான இலங்கை,
இந்திய உணவு வகைகள்,
பலசரக்கு வகைகளை மலிவு
விலையில் பெற்றுக் கொள்ள

## சிவாஸ் ரேடிங் கோ

**3852 FINCH AVE EAST**
**KENNEDY/FINCH**

இலங்கையிலிருந்து
இறக்குமதி செய்யப்பட்ட
உடன் இறால், நண்டு,
கணவாய், மீன் மற்றும்
கடலுணவு வகைகள்
மலிவு விலையில்

உலகெங்கும் செல்வதற்கான
விமானச்சீட்டுக்களை மலிவுவிலையில்
பெற தொடர்பு கொள்ளுங்கள்
சுந்தரலிங்கம் (சுந்தரி)

**தோசை, இடியப்பம், அப்பம்**
**சுடச்சுடக் கிடைக்கும்**

இந்தியா ருடே, பேசும்படம்,
சினிமா எக்ஸ்பிரஸ், ராசி பலன்,
பொம்மை தவிர்ந்த
அனைத்து தமிழக சஞ்சிகைகளும்
89 சதங்கள் மட்டுமே

# P.S.S.T

| | |
|---|---|
| எக்கோ, தொம்சன் கசட்டுகள் | 1.99 |
| 8 லேசர் இசைத்தட்டுக்கள் | 29.99 |
| வீடியோ பிரதி வாடகைக்கு | 99 சதம் |
| VIDEO TRANSFER (ANY SYSTEM) | 8.99 |

$40 க்கு மேல்பொருட்கள் வாங்கினால்
இரண்டு வீடியோப் பிரதிகள்
வாடகைக்கு இலவசம்
$75 க்கு மேல் கொள்வனவு செய்தால்
ஒரு தமிழ்ப்படம் இலவசம்

வீடியோ ஒலிப்பதிவு நாடாக்கள், இந்திய உணவு
வகைகளின் மொத்த விற்பனையாளர்

**TEL:609-0141**

**5210 FINCH AVE EAST #23**
**(FINCH/MIDDLEFIELD)**

சகல தமிழ், இந்தி, மலையாளப்
படங்கள் வாடகைக்கு கிடைக்கும்